அதிசய மன்னர்

அலாவுதீன்



கில்ஜி

1266 - 1316

வரலாற்றாய்வாளர்

செ. திவான் M.A., M.Phil

வெளியீட்டெண்: 153

அதிசய மன்னர்

அலாவுதீன் கில்ஜி

வரலாற்றாய்வாளர்

செ. திவான் M.A. M.Phil

இலக்கியச்சோலை
26, பேரக்ஸ் சாலை, பெரியமேடு
சென்னை - 600 003.

அதிசய மன்னர்

அலாவுதீன் கில்ஜி

வரலாற்றாசிரியர் செ. திவான்

டிசம்பர் 2020 | 150 பக்கங்கள் | முதல் பதிப்பு

விலை ரூ. 120.00

இலக்கியச்சோலை

26, பேரக்ஸ் சாலை, பெரியமேடு, சென்னை - 600003
© ஆசிரியர்

Athisaya Mannar
Alavudeen Khilji

Se. Diwan

Dec 2020 | 150 Pages | First Edition

Price Rs. 120

Ilakkiyacholai

26, Barracks Road, Periyamet, Chennai - 600 003
Cell: 99629 18724
ilakkiyacholai@gmail.com
© Author

பொருளடக்கம்

பதிப்புரை 4

இந்தியாவில் இஸ்லாம் 6

கில்ஜிகள் யார்? 14

அலாவுத்தீன் கில்ஜி 20

தேவகிரி 22

மக்களின் மகிழ்ச்சி 30

தில்லியில் அரியணை 36

முஸ்லிம் வணிகர்களிடம் கொள்ளையும் – பறிமுதலும் 43

மங்கோலியர் படையெடுப்பு 49

மக்கள் விரும்பிய மன்னர் 60

மதுவை தடை செய்த மன்னர் 67

ஊழலை ஒழித்த அதிசய மன்னர் 75

நியாய விலைக் கடைகளின் முன்னோடி 80

ராஜபுத்திரர்கள் 84

அலாவுதீன் கில்ஜியின் படையெடுப்பு 87

சித்தூர் படையெடுப்பு 95

பத்மினியைப் பற்றிய புனைக்கதை 109

பத்மாவத் 114

நகரங்களின் முன்னோடி 128

மாலிக் முகம்மது ஜயாஸியின் கற்பனை கதை 134

பத்மாவதி கதை ஒரு கற்பனை 142

இராஜபுத்திரர்களின் வீழ்ச்சி 145

பதிப்புரை

ஒரு இனத்தின் வரலாற்றை திரித்து எழுதும் போது அதன் நிகழ்காலமும் எதிர்காலமும் கேள்விக்குறியாகிறது. தேவையற்ற இந்த கடந்த கால சுமைகளை சுமக்கும் அந்த இனம் ஒருவித குற்றவுணர்வுடன் வாழவும் நிர்ப்பந்திக்கப்படுகிறது. அதற்கான பிராயச்சித்தமாக ஒவ்வொரு முறையும் தனது தேசபக்தியை நிரூபிக்க வேண்டிய நிலைக்கும் அது தள்ளப்படுகிறது. ஒவ்வொரு முறையும் ஓடி வந்து தேச பக்தியை நிரூபித்தாலும் அவர்களுக்கும் இந்த நிலத்திற்கும் சம்பந்தமே இல்லை என்ற பிரச்சாரம் அதன் எதிரிகளால் வேகமாக முன்னெடுக்கப்படுகிறது. இந்தியாவில் முஸ்லிம்களின் நிலை இதற்கு முற்றிலும் பொருந்திப் போகிறது.

பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் ஆட்சி செய்த முஸ்லிம் மன்னர்களின் செயல்களுக்கான பதில்களை இருபத்தோறாம் நூற்றாண்டில் வாழும் இந்திய முஸ்லிம்கள் கொடுக்க வேண்டிய சூழல் நிலவுகிறது. எல்லைகளை விரிவாக்குவதும் ஆட்சியை பரப்புவதும்தான் மன்னர்களின் இலட்சியம். இதில் இந்து, முஸ்லிம் என்று பெரிய வேறுபாடுகள் ஏதும் இருப்பதில்லை. ஆனால் ஏதோ முஸ்லிம் மன்னர்கள் மட்டுமே வாளெடுத்து போர் செய்தது போலவும் ஏனையவர்கள் அன்பையும் கருணையையும் போதித்தது போல் ஒரு பிம்பம் உருவாக்கப்பட்டுள்ளது. தங்களுக்குள் உள்ள சண்டைகளை தீர்ப்பதற்கு இந்து மன்னர்கள் முஸ்லிம் மன்னர்களை அழைத்த நிகழ்வுகளை வரலாறுகளில் ஏராளமாக காண முடியும்.

பெரும்பான்மை முஸ்லிம் மன்னர்கள் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டாலும் அதில் ஒரு சிலர் மீது அதிகமான குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுகின்றன. அவர்களில் ஒருவர் அலாவுதீன் கில்ஜி. அலாவுதீன் கில்ஜியை இரக்கம் இல்லாதவனாகவும் பெண் பித்து பிடித்தவனாகவும் வரலாற்றில் திரித்து எழுதி வைத்துள்ளனர். சில வருடங்களுக்கு முன் வெளிவந்த பத்மாவதி திரைப்படம் இந்த ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை மேலும் பரப்பியது.

அந்நிலையில்தான் அலாவுதீன் கில்ஜி குறித்த உண்மை வரலாற்றை வரலாற்றாய்வார் செ.திவான், புதிய விடியல் இதில் தொடராக எழுத ஆரம்பித்தார்.

மன்னர்களை குறித்து எழுதும் போது அவர்கள் வாழ்ந்த கால சூழலை கருத்தில் கொண்டு நிகழ்வுகளை பதிவு செய்ய வேண்டும் என்பது நியதி. ஆதனை சரியாக முறையாக செய்து வருபவர் செ.திவான். அலாவுதீன் கில்ஜி குறித்த அவதூறுகளுக்கு பதில் அளிப்பதுடன் நிறுத்திக் கொள்ளாமல் அம்மன்னன் குறித்த அறியாத சில பக்கங்களையும் வாசகர்களுக்கு வழங்கியுள்ளார். அலாவுதீன் கில்ஜியின் நிர்வாகத்திறன் குறித்த செய்திகள் நிச்சயம் வாசகர்களுக்கு புதிய தகவல்களாகவே இருக்கும்.

வரலாற்றை திரித்து முஸ்லிம்களை குற்றப்பரம்பரையாக சித்தரிப்பவர்களுக்கு இந்நூல் தக்க பதிலாக அமையும். வரலாற்றாய்வாளர் செ.திவானின் மற்றுமொரு நூலை வெளியிடுவதில் இலக்கியச்சோலை பெருமதிம் கொள்கிறது. அல்லாஹ் அன்னாருக்கு நல்ல ஆரோக்கியத்தை வழங்கி அவர்களின் நேரத்தில் அபிவிருத்தியை ஏற்படுத்திக் கொடுப்பானாக.

இவண்,

மு. முஹம்மத் இஸ்மாயீல்

காப்பாளர்,

இலக்கியச்சோலை சாரிடபிள் டிரஸ்ட்

இந்தியாவில் இஸ்லாம்

உபகண்டமான இந்தியாவில் பல கோடிக்கணக்கான முஸ்லிம்கள் வாழ்கின்றார்கள்.

இந்தியக் கடற்கரையின் நீளம் சுமார் 8016 கிலோ மீட்டர்கள்.

பினிஷியர்கள் (Phoenicians), கிரேக்கர்கள், ரோமானியர்கள், அரேபியர்கள் ஆகியோர் கிறிஸ்து (ஈசா அலை) பிறப்பதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பே இந்தியாவில் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர்.

அரபிக்கடல் கோவாவில் தொடங்கி, கிழக்கு ஆப்பிரிக்கக் கடற்கரையான மோம்பாஸா (Membasa) கடற்கரை வழியாகச் செல்கிறது. 74,56,000 சதுர கிலோ மீட்டர்களை உடைய இக்கடல் பருவகால மாற்றங்களாலும் பாதிப்புக்குள்ளாகும். இதனைப் பயன்படுத்தி பருவகாலத்திற்கு ஏற்ப, காற்றின் வீச்சிற்கு ஏற்ப, தங்களது கப்பல்களைச் செலுத்தி வணிகத்தை அரேபியர்கள் மேற்கொண்டதால் இக்கடலுக்கு அரபிக் கடல் என்ற பெயர் ஏற்பட்டது. (ச. சுப்பையா, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் 604வது வெளியீடு, சென்னை, பக்கம் 32)

இந்தியாவின் தென்பாகத்தில் கடல் வாணிபம் செய்து வணிகத் தொடர்பு கொண்டிருந்த கூட்டத்தார் மிகுதியாக வாழும் அரபு நாட்டில் அகிலத்தின் அருட்ஜோதியாக அண்ணல் (ஸல்) தோன்றினார்கள். அவர்களது காலத்தில் இஸ்லாம் இந்தியாவில் பரவத்துவங்கியது.

ஹர்ஷரது காலம் முதல் (கி.பி. 606 – கி.பி. 647) கி.பி. 712ல் முகமது பின் காசிம் சிந்துப் பகுதிக்கு வருகை தந்தது வரையிலான காலத்தைப் பற்றி அறிய முக்கியச் சான்றாகத் திகழ்வது (Chachi - Nana (சாச்செ நாமா) ஆகும். இதனை ஃபத்ஹ் நாமா (Fath-nama) தாரிக்கெ ஹிந்த் வ சிந்த் (Tarikhi - Hind - Wa - Sind) என்றும் அழைப்பர். முகம்மதலீ ஹமீது அபூபக்கரால் (Mohammed Ali - i - Hamid - i Abu Bakrkufi) அரபி மொழியில் இருந்த நூல் கி.பி. 1216இல் பாரசீக மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது.

(அரபியரின் கடல் பயணம், வணிகத் தொடர்பு, சிந்து வெற்றி குறித்து விரிவாகக் கூற இங்கு வாய்ப்பில்லை. அது பிறிதொரு சந்தர்ப்பத்தில் விரிவாக எழுதப்பட வேண்டிய விஷயமாகும்)

அண்ணல் நபி (ஸல்) உலகில் இருந்து மறைந்த ஐந்து ஆண்டுகளில் பாரசீகப் பேரரசு கி.பி. 637 இல் காதிசியா (Cadesia) போர்க்களத்தில் கைப்பற்றப்பட்டது. கி.பி. 642க்குள் பாரசீகப் பேரரசு முழுவதும் முஸ்லிம்கள் வசமாயிற்று.

கி.பி. 650ல் ஆக்சஸ் நதிக்கரையில் அரபியப் படைகள் வெற்றி பெற்றன. ஆக்சஸ் நதிக்கும் இந்து-குஷ் மலைகளுக்குமிடையிலான பரந்த பிரதேசங்கள் முஸ்லிம்கள் வசமாயின.

இந்தியாவின் பக்கம் தங்களது கவனத்தைத் திருப்பிய முஸ்லிம்கள் இந்தியாவிற்கு வட மேற்கில் சூழ்ந்திருந்த மலை அரண்களை ஊடுருவதற்கு நெடுங்காலம் பிடிக்கும் என்பதை அறிந்து கடல் வழியாகவும் முயன்றனர். கலீபா உமர் ரலி (கி.பி. 634 – 644) காலத்தில் ஹிஜ்ரி 15இல் (கி.பி. 636) அராபியக் கப்பற்படை பம்பாய் (மும்பை) அருகிலுள்ள தானாவையும் (அல்லது பர்வாஸ் (Barwas) குஜராத்திலுள்ள புரோச்சையும் தாக்கியதை பலா தூரியின் நூல் வெகுவிரிவாகக் குறிப்பிடுகிறது (Kitab futch-al Buldan of Baladhuri, Translated in to English by Hitti and Murgotten)

அதேவேளையில் முஸ்லிம்கள் சிந்து நதியின் முகத்துவாரத்திலிருந்த தேபல் (Debal) வளைகுடாவில் கரை இறங்கித் தாக்கினர். தோல்வி கண்டனர்.

சிந்து மாநிலத்திற்கு மேற்கிலான மக்ரான் (Makran) பிரதேசமானது வறண்ட, நீரற்ற, கடத்தற்கரிய மலைப்பிரதேசமாக விளங்கியதால், இதன் வழியாகப் படையெடுத்துச் செல்வது மிகவும் கடினம் என அரேபியர்கள் கண்டனர். ஆயினும் எட்டுத்திக்கிலும் வெற்றியோடு முன்னேறி வந்த அரபியர்களின் உறுதியை எந்த இயற்கை அரணாலும் குலைக்க முடியாமற் போயிற்று. (இரா. ஆலால சுந்தரம், வட இந்திய வரலாறு, ஹர்ஷரது மரணம் முதல் கி.பி. 1206 வரை, சென்னை, 1977, பக்கம் 359)

தோல்விகளால் மனம் தளராத முஸ்லிம் படைகள், முயற்சியைத்

தொடர்ந்தன. கி.பி. 643இல் தேபல் மீண்டும் தாக்கப்பட்டது. மீண்டும் தோல்வி கண்டனர். ''சிந்து அரசு படை வலிமை உள்ளது என்றும் படைகள் கடக்க வேண்டிய மக்ரான் பிரதேசம் நீரற்றது; பழங்களும் மோசமானது; கடற்கொள்ளைக்காரர்களோ அஞ்சா நெஞ்சினர், எனவே சிறுபடை சென்றால் தோற்கும். பெரும் படை சென்றால் பட்டினியால் மடியும் என்று மூன்றாவது கலிபா உதுமானுக்கு (கி.பி. 644 – 656) அறிவிக்கப்பட்டது.'' (History of India as told by its own Historians, The Muhammadan period, Edited from the posthumous papers, of the Late Sir. H.M. Elliot, K.L.B, East India company's Bengal Civil service by professor John Dowsoo MRAS staff college Banohurst, Vol. I, Kitabmahal, Allaha bad, Page 116)

கலீபா உமரும் (ரலி) கலீபா உத்மானும் (ரலி) தரைப்படையை இந்தியாவிற்குள் அனுப்பவில்லை. கலீபா அலி (ரலி) (கி.பி. 656 – 661) காலத்தில் கி.பி. 660 – 662 இல் கிக்கானான் என்ற போலன் கணவாய்ப் பகுதி பிரதேசம் வரை முஸ்லிம் படை முன்னேறிற்று. முஸ்லிம் படைத்தலைவர் அல் ஹாரித் போரில் கொல்லப்பட்டார். கி.பி. 664இல் அல் முஹல்லப் தலைமையில் சென்ற படை கிக்கானானைக் கடந்து, காபூலுக்கும் முல்தானுக்கும் இடையேயிருந்த பன்னா, அல் அஹ்வாரி ஆகிய நகரங்களைக் கைப்பற்றியது.

அல்அஹ்வார் இன்றைய லாகூர் ஆகும். கலீபா முஆவியா (ரலி) காலத்திலும் முயற்சிகள் தொடர்ந்தன (661 – 680) என்று பால தூரி குறிப்பிடுகிறார். கி.பி. 700 இல் சியாத் என்ற (Ziyad) ஈராக் ஆளுநர் முயற்சியால் மக்ரான் பிரதேசம் கைப்பற்றப்பட்டது. இப்னுல் ஹாரி அல் பாகில்லி தளபதியாக இருந்தார். இதற்குப் பின் சிந்துவின் மீது தாக்குதல் தொடுத்திடும் முயற்சி எளிதாயிற்று.

கி.பி. 695 இல் ஈராக்கின் ஆளுநர் அல்ஹஜ்ஜாஜ் காலத்தில் இலங்கைப் பகுதியிலும் வாணிபம் சிறப்பாக நடந்தது. சிந்து மாநிலத்தின் கடற்கரை ஓரமாக இக்கப்பல்கள், செல்லும் வழியில் கடற்கொள்ளையர்களால் அடிக்கடி தாக்கப்பட்டது. இங்கு கடற்கொள்ளையர்கள் அதிகம் இருந்தார்கள் என்று சீனப் பயணி யுவான் சுவாங் குறிப்பிட்டிருக்கிறார். இத்தகைய

கடற்கொள்ளையர்களின் தாக்குதல் சிந்துப் பகுதியில் முகம்மது இப்னு காசிம் படையெடுக்க காரணமாயிற்று.

முகமது பின் காசிமின் சிந்துப்படையெடுப்பின் போது கலீபாவாக இருந்தவர் வலீத் (கி.பி. 705–715) கலீபா என்னும் சொல் 'பிரதிநிதி' என்று பொருள் தரும். இச்சொல்லே Caliph என்று மருவிற்று.

இலங்கையிலிருந்து முத்து நவரத்தினங்களுடன் ஹஜ் யாத்திரைக்காக (புனித மக்காப் பயணம்) ஆண்கள், பெண்கள், இலங்கையில் இறந்த அரபிய வணிகர்களின் அநாதைப் பிள்ளைகள் ஆகியோர் கப்பலில் ஏற்றப்பட்டு அனுப்பப்பட்டனர். தேபல் துறைமுகத்தில் அவை கொள்ளையிடப்பட்டன. முஸ்லிம் பெண்கள் கடத்திச் செல்லப்பட்டனர். கடற்கொள்ளையரிடம் இருந்து மீட்டுத்தர கடிதங்கள் எழுதப்பட்டன. சிந்துவின் அரசர் தாகிர் அதனை இயலாது என்றார். போர் நடவடிக்கைகள் துவங்கின.

'கூஃபா நகரில் திரட்டப்பட்ட பெரும்படை உபைதுல்லா என்பவரின் தலைமையில் சென்றது. தாகிருடன் போரிட்டுத் தோற்றது. உபைதுல்லாவும் கொல்லப்பட்டார். புதைல் இப்னு தஹ்பா தலைமையில் அடுத்தபடை சென்றது. தேபலுக்கு அருகில் தாகிரின் மகன் ஜெயசிம்மார் அதனைத் தோற்கடித்தார். புதைலும் கொல்லப்பட்டார். (Cambridge History of India Vol. III)

இருமுறை தோல்விகண்ட அவமானத்திற்குப்பின் அல்ஹஜ்ஜாஜ் 17 வயது நிரம்பிய தனது மருமகன் இமாத் உதின் முகம்மது பின் காசிம் என்பவரின் தலைமையில் 6000 குதிரைப்படை, 3000 ஒட்டகப் படையை சிரியாவிலிருந்து தேர்ந்தெடுத்து அனுப்பினார். நகரத்தின் கோட்டை மதில்களைத் தகர்த்திட விசேஷ எந்திரங்களும் அனுப்பப்பட்டன.

அபுல் அஸ்வத் ஜஹான் தலைமையில் மற்றொரு அரபியப்படையும் சேர்ந்தது. 25000 போர்வீரர்கள் அணி வகுத்தனர்.

தேபல் நகரம் இன்றைய கராச்சி துறைமுகம் என்

ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். அலஃபீ என்ற அராபியர் ஒருவரின் தலைமையில் 500 பேர்களைக் கொண்ட முஸ்லிம் படை தாகிருக்கு உதவியாக இருந்தது. 40000 வீரர்கள் தேபலில் அப்போது இருந்தார்கள். போரில் முகமது பின் காசிம் கி.பி. 712 இல் தேபலைக் கைப்பற்றினார். இவரது வெற்றிக்கு காரணமாக, பேராசிரியர் கோ. தங்க வேலு, இந்திய வரலாறு நூலில் (சென்னை, முதற்பதிப்பு 1973, மூன்றாம் பதிப்பு 2003, பக்கம் 683இல்)தெரிவித்துள்ள கருத்தினை இங்கே சுட்டிக்காட்ட வேண்டியது அவசியமாகிறது.

“சிந்துவை ஆண்ட சைந்தர் குலத்துப் பார்ப்பன அரசரான தாகிர் (கி.பி. 700 – 712) தம்குலத்தினரைப் போலவே, பார்ப்பனப் பண்புகளுடன் நாட்டை ஆண்டார். இதுவரை ஆண்டுவந்த புத்த சமயத்தவருக்கும், கீழ்ச்சாதிக்காரர்களுக்கும் இவர் சமத்துவம் கொடுக்கவில்லை. பிராமணரும், சத்திரியருமே உரிமைகளைப் பெற்றவராய் வாழ்ந்தனர்.

இவ்விரு வகுப்பாரும் சிறுபான்மையினர். இவர்களால் பெரும்பான்மையான புத்த சமயத்தவரும், ஜாட், மதிர் போன்ற பழங்குடியினரும், இரக்கமின்றிக் கொடுமைப்படுத்தப்பட்டனர். இவர்களைப் படையில் சேர்ப்பதுமில்லை. சாதி அடிப்படையில் அமைந்த இப்பார்ப்பன ஆட்சியை மக்கள் வெறுத்ததில் வியப்பொன்றுமில்லை. இது முகமது பின் காசிமுக்குத் தக்க ஏதுவாயிற்று”

கி.பி.749 இல் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த அப்பாஸீய கலீஃபாக்கள் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு முதல் வலிமை குன்றி வீழ்ச்சியுறலாயினர்.

கோரி முகம்மது (கி.பி. 1173 – கி.பி. 1206) கி.பி. 1175 இல் இந்தியாவின் மீது படையெடுத்தார். கி.பி. 1178இல் குஜராத்தைத் தாக்கினார். 1179இல் பெசாவரைத் தாக்கினார். கி.பி. 1191இல் அஜ்மீரை ஆண்ட இராச புத்திர மன்னரான மூன்றாம் பிருதிவிராஜனை போரில் சந்தித்தார். 1192இல் நடந்த இரண்டாம் தராயின் போரில் முதன்முதலாக இராசபுத்திரர்களை வெற்றி கண்டதால் அவர்களது வீரம் கறைபட்டு விட்டது.

இந்திய மண்ணில் துருக்கிய ஆட்சியின் பரவலுக்கும் இந்திய பண்பில் இஸ்லாமிய மார்க்கத்தின் வளர்ச்சிக்கும் இது வழி வகுத்தது.

இந்தியாவில் வென்ற பகுதிகளில் தில்லி, அஜ்மீர் தவிர பிற இடங்களை தன் நம்பிக்கைக்குப் பாத்திரமான குத்புதீன் ஐபக் வசம் ஒப்படைத்து விட்டு முகம்மது கோரி திரும்பினார். பின் கி.பி. 1206இல் குத்புதீன் அய்பக் அரசரானார். வட இந்தியாவில் அடிமை வமிச ஆட்சி துவங்கிற்று. அது 1290 வரை நீடித்தது.

அல்டமிஷ்	1211 - 1236
இரஸியா பேகம்	1236 - 1240
அலாவுதீன் மசூத்	1241 - 1266
பால்பன்	1266 - 1286
கைகுபாத்	1287 - 1290

கி.பி. 1290ல் அடிமை குல ஆட்சி முடிவுக்கு வந்தது. அதன் பின் கில்ஜி குல ஆட்சி தொடங்கியது.

ஜலாலுதீன் கில்ஜி	1290 - 1296
அலாவுதீன் கில்ஜி	1296 - 1316
பிற கில்ஜி அரசர்கள்	1316 - 1320

அதன் பின்

கியாசுதீன் துக்ளக்	1320 - 1325
முகமது பின் துக்ளக்	1325 - 1351
பிரோஷ் ஷா துக்ளக்	1351 - 1388
மற்றவர்கள்	1388 - 1412

வரை துக்ளக்குள் ஆட்சி நடந்தது.

பிறகு...

சையத் குலம் ஆண்டது	1414 - 1451
பலால் லோடி	1451 - 1489

சிக்கந்தர் லோடி	1489 - 1517
இப்ராஹீம் லோடி	1517 - 1526

அதன்பின் முகலாயப் பேரரசு கி.பி. 1526ல் பாபரின் ஆட்சியுடன் தொடங்கியது. நிற்க.

முஸ்லிம்கள் வட இந்தியாவில் குடியேறி அதைத் தங்களது தாய் நாடாக்கிக் கொண்டார்கள். இந்திய சமுதாயச் சமுத்திரத்தில் கலந்தனர். ஓர் இனத்தை இழிவுபடுத்தி, அதன் இன உணர்ச்சியையும் பெருமையையும் அதிலிருந்து அகற்றக் கூடிய முறைகளிலே அது தனது கடந்த கால உயர்வைக் குறித்து சந்தேகித்து வெட்கப்படுமாறு செய்யும் முறை ஒன்று.

அதன் விளைவாக அந்த இனத்தின் தற்காலச் சந்ததியர் தங்கள் மூதாதையர்களை தவறாக, இழிவாகக் கருதி அவர்களை வெறுத்து ஒதுக்கவும் செய்யும் வழிபிறக்கச் செய்யும் முயற்சியில் ஈடுபடுவது.

ஓர் இனம் தனது பழங்காலப் பெருமையை மறந்து தனது முன்னோர்களை வெறுப்புடன் நினைவுபடுத்த ஆரம்பித்து விட்டால், அவ்வினம் வெகுவிரைவிலும் எளிதிலும் தாழ்வடையக்கூடும்.

ஆங்கிலேயர் இந்தியாவை வஞ்சகமாக, கொஞ்சம் கொஞ் சமாக, இச்சகம் பேசியும், நச்சுக் கருத்துகளைப் பரப்பியும், வணிகக் கொடி வலையில் வீழ வைத்து வளைத்துக் கொண்டதற்குப் பிற்பாடு மேலே சொன்ன முறையைக் கையாண்டார்கள்.

தங்களுக்கு முன்னர் இந்தியாவில் ஆட்சி செய்த முஸ்லிம் மன்னர்களின் வரலாறுகளைத் திரித்தனர்; கட்டுக் கதைகளைச் சேர்த்தனர். ஓசைப்படாமல் நாகமெனக் கடித்தார்கள்; கண் எதிரே விஷத்தைக் கலந்தார்கள். விளைவு இந்தியாவில் முஸ்லிம் மன்னர்கள் கொடுங்கோலர்களாகச் சித்தரிக்கப்பட்டனர். அதற்கென எண்ணற்ற நூல்களை எழுதியும் குவித்தனர். எல்லோரையும் நம்புமாறு செய்தனர். முஸ்லிம் மன்னர்களை, தீரர்களைத் தாக்கி எழுதியும் பேசியதும் கண்டு நல்லவர்கள் துடித்தனர். உண்மை வரலாற்றை உரைத்திடத் தூண்டினர்.

“முஸ்லிமே! கண்ணியமற்ற மண் புழுதியில் படிந்து கிடக்கும் காலடியைப் போல் அசைவற்றோ, செயலற்றோ கிடக்காதே! சதா ஓடிக் கொண்டும் அடித்துக் கொண்டுமே இருக்கும் சமுத்திரத்தின் அலைகளைப் போல் அசைவுள்ளவனாக ஆகிவிடு.

உனது முன்னோர்களின் மகத்துவம் நிறைந்த வீர சரிதைகளுக்குப் புத்துயிர் அளி. உனது மூதாதைகளின் பழங்கதைகளுக்கு (வரலாறுகளுக்கு) நித்திய ஜீவன் அளிப்பது உன்னுடைய நடைமுறை ஒழுக்கமான செயல்பாடுதான்.

கண்களில் தென்படாது இருந்து வரும் வாழ்க்கையின் சின்ன நரம்பிலிருந்து உன்னத வாழ்க்கையின் சங்கீதம் ஒலிக்குமாறு செய்வது உன்னால் முற்றிலும் சாத்தியமே.

வாழ்க்கையின் ஆகாயத்தில் உயரப் பறந்து செல்வதற்கான மர்மங்களைச் சமூகத்தின் காதுகளுக்கு எடுத்து ஓது” என்ற அல்லாமா இக்பாலின் முழக்கம் கேட்கிறதா?

அண்மைக் காலமாக அலாவுதீன் கில்ஜி மீது எத்தனை அபாண்டங்கள்! எவ்வளவு ஆர்ப்பாட்டங்கள்!

அலாவுதீன் கில்ஜி ஓர் அதிசய மன்னர்!

அதனைச் சொல்ல இருப்பதே இந்நூல்; அவர் மீது சுமத்தப்படும் பழிகளைத் துடைத்தெடுத்து உண்மையான வரலாற்றை ஆதாரங்களுடன் விரிவாகவே இங்கே காண்போம்.

கில்ஜிகள் யார்?

"முகம்மதியர் ஆட்சி முதன் முதல் பெரிய அளவில் இந்தியாவில் நிறுவப்பட்டது அலாவுத்தீன் கில்ஜி காலத்தில்தான்" டாக்டர் தே.வெ. மகாலிங்கம் வரலாற்றுத்துறைத் தலைவர் சென்னைப் பல்கலைக்கழகம். (கலைக்களஞ்சியம், தொகுதி ஒன்று, தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை, 1954, பக்கம் 217)

'தாரிக் இ பக்ருத்தீன் முபாரக் ஷா' (Tarikh-e-Fakhruddin Mubarak Shah) எனும் நூலை பக்ரூத்தீன் முபாரக் கி.பி. 1206ல் தந்துள்ளார். இவர் 1206ல் பட்டத்திற்கு வந்த குத்புத்தீன் அய்பெக்கின் அரசப் பொறுப்பு ஏற்பு நிகழ்வை நேரில் கண்டவர்.

இவர் தனது நூலில் 64 துருக்கிய மரபுகள் அடங்கிய பட்டியல் ஒன்றை நமக்குத் தந்துள்ளார். பெர்சிய மொழியில் எழுதப்பட்ட அந்த நூலை சர். டென்னிசன் ரோஸ் இலண்டனில் 1927ல் மொழி பெயர்த்து வெளியிட்டார். (Fakhruddin Mubarak, Tarikh i Fakhrddin Mubarak Sha, C. 6024, Edited by Sir Denison Ross, London, 1927, page 47.

64 துருக்கிய மரபுகள் பட்டியலில் கில்ஜிக்களுடைய பெயர் இடம் பெற்றுள்ளது.

சர். ஓலப்கரோ, பதான்களுடைய வரலாற்றை எழுதும் போது கில்ஜிக்களைப் பற்றி குறிப்பிட்டுள்ளார். இவர் கில்ஜிக்களை ஆப்கானியர்கள் என்று குறிப்பிட்டாலும் அவர்கள் துருக்கிய இனத்தின் வேரிலிருந்து தோன்றியவர்கள் என்றே குறிப்பிட்டுள்ளார். (Sir Olaf Carue, The Pathans, Macmillan & co, London 1959)

கி.பி. பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த இபின் ஹோகல் என்ற அரபு புவியியல் வல்லுநர் கில்ஜிக்கள் துருக்கியரே என்று கூறியுள்ளார். (Ibn Houkal, Ashkalul Balad, Bib Geographim Arabicorum. C. 367.H. A.D. 977)

இந்துஸ்தானத்திற்கும் சிஜிஸ்தானத்திற்கும் இடையேயுள்ள பகுதிகளில் கில்ஜிக்கள் நெடுங்காலம் வாழ்ந்திருந்தனர். அப்பகுதிகளில் ஒன்று கில்ஜி என்பதாகும். ஆகவே அவர்கள் கில்ஜிக்கள் என்று அழைக்கப்பட்டனர். அவர்களது பழக்க வழக்கங்கள், நடை உடை பாவனைகள் துருக்கியர்களுடைய பழக்க வழக்கங்களையும், அவர்களது ஆடைகளையும் ஒத்திருந்தன என்று கூறியுள்ளார். (Ibn Haukal. kitab moujamul Buldan, II, p. 419. and Journal of the Asiatic society of Bengal, 1852, 368, 1853, 152).

இஷ்டகாரி, பர்தோல்ட் போன்ற ஆசிரியாகள் கில்ஜிகளை துருக்கியர்களாகவே கருதுகின்றார். மேஜர் ராவர்டி கில்ஜிக்களை துருக்கியர்களாகவே கருதுகின்றார் (H. Raverty, Tabqat i Nasiti English Translation London 1881) கில்ஜிக்கள் நெடுங்காலம் ஆப்கானிஸ்தானத்தில் வாழ்ந்து வந்தமையால் ஆப்கானியர்களுடன் இரண்டறக் கலந்துவிட்டனர். எனவே தோற்றத்திலும் நடையுடை பாவனைகளிலும் அவர்கள் ஆப்கானியர்கள் போன்று காணப்பட்டனர். மின்காஜ் சிராஜ், கில்ஜிக்கள் இந்தப் பகுதியில் படைகளில் பணியாற்றியதை போர்களில் பங்கேற்றதை தனது Tabaqat i Nasiri நூலில் குறிப்பிட்டுள்ளார்.

கில்ஜிக்கள் துருக்கியர்களே; அவர்களில் பலர் கஜினி, கோரி அரசர்களுடைய படை வீரர்களாக இந்தியாவிற்கு வந்தனர். மற்றும் சிலர் மங்கோலியர்கள் மத்திய ஆசியாவையும், ஆப்கானிஸ்தானத்தையும் தாக்கியபோது அப்பகுதிகளை விட்டு இந்தியாவில் புகலிடம் நாடி வந்தனர்.

பகா உத்தீன் என்ற பால்பன் (1265 – 1287) அடிமை அரசர்களில் தலைசிறந்தவர். பால்பனின் மறைவிற்குப் பின் டெல்லி உயர்குடியினர் இரண்டு பிரிவுகளாயினர். கைக்குபாத் (1287 – 1290) மன்னர் ஆனார். அவரது மறைவிற்குப் பிறகு ஜலாலுத்தீன் பிரோஸ் கில்ஜி (1290 – 1296) அரசர் ஆனார். கி.பி. 1290ல் டில்லியில் அரச குல மாற்றம் ஏற்பட்டது. சமானாவின் ஆளுநராகக் கைக்குபாத்தின் கீழ் பணியாற்றிய ஜலாலுத்தீன் பிரோஸ் கில்ஜி மன்னரானது கில்ஜிப் புரட்சியாகும்.

துருக்கிய அமீர்கள் பலர் ஜலாலுத்தீன் பிரோஸ் கில்ஜியுடன் போர் செய்வதை விட அவருடன் சேர்ந்து கொள்ளுதல் நலம் என்று சேர்ந்தனர். பழைய துருக்கிய பிரபுக்கள் முழுமையாக ஒடுக்கப்பட்டனர். கைலீகாரி அரண்மனையில் ஜலாலுத்தீன் பிரோஸ், 'கில்ஜி' என்ற பட்டத்துடன் ஜூன் 1290ல் முடிசூடிக் கொண்டார். கில்ஜிப் புரட்சியில் டில்லியில் புதிய தொரு அரசகுலம் ஏற்படுவதற்கு வழிகோலியது.

கில்ஜிக்கள் சாதாரண குடும்பத்தைச் சார்ந்தவர்கள். அவர்களுடைய உடம்பில் அரச இரத்தம் ஓடவில்லை. இல்பாரி துருக்கிய பிரபுக்கள் இரத்தமும் அவரது உடம்பில் பாய்ந்திருக்கவில்லை. இல்பாரிய துருக்கிய இனத்தைச் சாராதவர்கள், தம்மை விடத் தாழ்ந்தவர்கள் என்று இல்பாரிய துருக்கியர்கள் எண்ணி வந்த காலமது. கில்ஜிக்கள் புரட்சியினை உயர்குடி மரபினரது ஆட்சிக்குப் பதிலாக சாதாரண குடிமகனது ஆட்சியினை ஏற்படுத்திய ஒரு புரட்சி எனக் கூறுவது மிகையாகாது.

இதுவரை டில்லியை ஆண்ட சுல்தான்களுள் சிலர் அரசுரிமையை மரபுரிமையாகப் பெற்றிருந்தனர். வேறு சிலர் அரசப் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர். மற்றும் சிலர் கிளர்ச்சியின் விளைவாக அரச பதவியைப் பெற்றனர். ஆனால் எதிர்பாராத விதமாக கடுந்தாக்குதலின் விளைவாக கில்ஜிக்கள் அரசுரிமையை இல்பாரிய துருக்கிய அரச குலத்தவர்கள் கைகளிலிருந்து கவர்ந்து கொண்டனர். அவ்வாறு கைப்பற்றிய அரசுரிமையை மக்களுடைய ஆதரவின் மூலமாகவோ அல்லது பிரபுக்களின் உதவியை எதிர்பார்த்தோ அல்லது உலமாக்களின் தயவைக் கொண்டோ அவர்கள் காப்பாற்றிக் கொள்ள முன்வரவில்லை. அதற்கு மாறாக தங்களது படைகளின் உதவியைக் கொண்டு, ஆட்சியைத் தொடர்ந்து நடத்திட முற்பட்டனர். படைப்பலத்தின் அடிப்படையாகக் கொண்ட கில்ஜிக்களின் ஆட்சி இராணுவ ஆட்சி என்று கூறப்படுகிறது.

ஜலாலுத்தீன் பிரோஸ் கில்ஜி (1290 – 1296) 13 சூன், 1290ல் (ஹிஜ்ரி 689) அரியணையில் அமர்ந்தார். அவரது தலைமையிடம்

கைலுகாரி. 70 வயது நிரம்பிய நிலையில் அரசர் ஆகி இருந்தார். அவரது ஆட்சிமுறை, பண்புநலன், படையெடுப்புகளை இங்கு விவரிக்கப் போவதில்லை. ஆனால், சிதி மௌலா என்பவரிடம் ஜலாலுத்தீன் கில்ஜி நடந்து கொண்டதை விளக்க வேண்டிய அவசியம் இருக்கிறது.

பாரசீக நாட்டைச் சேர்ந்தவர் சிதி மௌலா. பால்பன் காலத்தில் டில்லியில் குடியேறினார். அஜோத்கேட்யில் சிதிமௌலா ஒரு கன்காவை (புனிதர்கள் வாழுமிடம்) அமைத்தார்.

'கன்காவில் மக்கள் கூட்டம் கூடியது. 2000 மணங்கு மைதா, 500 மணங்கு இறைச்சி, 300 மணங்கு சர்க்கரை, 200 மணங்கு காய்கறிகளும் அவரது சமையற்கூடத்தில் தினமும் செலவாயிற்று என்பார் பரணி. (Ziyauddin Barani, Tarikh i Firoz Shahi, Ed. by Sir Sayyid Ahamed Khan, page 209)

ஒரு முறை ஜலாலுத்தீன் கில்ஜி மாறுவேடமணிந்து சிதி மௌலாவின் 'கன்கா' விற்குச் சென்றார். அங்கு அவர் கேள்விப்பட்டதற்கு மேலாக பணம் செலவிடப்படுவதை நேரில் கண்டார். சிதி மௌலா ஆன்மீக விஷயங்களிலும் தலையிட்டு வந்தார். புதிய அரசகுலத்தினை ஏற்றுக் கொள்ள விரும்பாத பழைய துருக்கிய பிரபுக்களின் சந்திப்பிடமாக அவரது இடம் (கன்கா) பயன்பட்டது. காஜி ஜலால் கஷானி போன்ற புதிய ஆட்சியின் முக்கியத் தலைவர்களும் சிதிமௌலாவின் கன்காவிற்கு அடிக்கடி விஜயம் செய்தனர்.

சிதி மௌலாவின் ஆதரவாளர்கள் 10,000 பேர்களாயினர் என்பார் பெரிஷ்டா. இக்குழுவினர் ஒரு சதித்திட்டத்தை வகுத்தனர். வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுகைக்காக ஜலாலுத்தீன் கில்ஜி செல்கையில் அவரைக் கொலை செய்ய முடிவெடுத்தனர். (History of the Rise of the Mohamedan power in India till the year A.D. 1612, Translated from the original Persian of Mohamed Kasim Ferishta, by John Briggs, New Delhi 2006, page 168) (பெர்சிய வரலாற்றியாசிரியரான இவர் 1570ல் பிறந்தவர். பிஜப்பூருக்கு 1589ல் வந்தார். இந்திய வரலாற்றின் பக்கங்களை எழுதிய இவர் கி.பி. 1611ல் மறைந்தார்) ஜலாலுத்தீன் கில்ஜியை

தீர்த்துக் கட்டியதற்கு பிறகு, சிதி மௌலாவை அரசராக அறிவிக்க முடிவெடுத்தனர். அதோடு மட்டுமின்றி, சுல்தான் நாசீர் உத்தீனின் மகள் ஒருத்தியை திருமணம் செய்து வைத்து சிதி மௌலாவின் நிலையைப் பலப்படுத்தவும் திட்டந்தீட்டியிருந்தனர். சிதி மௌலாவிற்கு துணை நின்ற காஜி ஜலால் கஷாஸியை ‘காஜிகான்’ என்ற பட்டமும் தந்து, மூல்தானின் தூதராக நியமிக்கவும் முடிவெடுத்தனர்.

ஜலாலுத்தீன் கில்ஜியை படுகொலை செய்ய இருந்த சதித்திட்டத்தை, முழுவதுமாக சதிகாரர்களில் ஒருவர் மன்னரிடம் சொல்லிவிட்டார். உண்மை வெளிப்பட்டது. உடனே ஜலாலுத்தீன், தன்னை கொலை செய்ய முன்வந்த நிரன்ஜன் கொத்வால், ஹதியாபெக் ஆகியோரை கைது செய்து கொன்றிட உத்தரவிட்டார். ஏனைய பால்பனிய பிரபுக்களை டில்லியிலிருந்து வெளியேறுமாறு உத்தரவிட்டார். சங்கிலியால் பிணைக்கப்பட்டு சிதிமௌலா கொண்டுவரப்பட்டார். ஜலாலுத்தீன் கோபம் கடலெனப் பொங்கியது.

ஷேக் அபூபக்கர் தூசி என்பவரை அழைத்து சிதிமௌலாவின் மீது வஞ்சகத்தைத் தீர்த்துக் கொள்ள ஜலாலுத்தீன் கில்ஜி உத்தரவிட்டார். அதற்காகவே காத்திருந்த சிதிமௌலாவின் பகைவர்கள் ஆயுதங்களால் தாக்கி, அவரை வீழ்த்தினார்கள்.

அர்க்கலிகான் யானைப்பாகனை அழைத்து சிதிமௌலாவை யானையைக் கொண்டு மிதித்துச் சாகடிக்க கட்டளையிட்டார். சிதிமௌலா கொல்லப்பட்டதும் பத்து கஜ நீளம், மூன்று கஜம் அகலமுள்ள ஒரு குழியை வெட்டி அதில் தீ மூட்டி, அத்தீயில் எஞ்சியிருந்த சிதிமௌலாவின் முக்கிய ஆதரவாளர்களைத் தீயிலிட ஜலாலுத்தீன் கில்ஜி ஏற்பாடு செய்தார். ஆனால் அதை அர்க்கலிகான் தடுத்து நிறுத்தினார். (Yahya bin Ahmed bin Abdulla, tarikh e Mubark shah, Calcutta. 1931, p.67).

ஜலாலுத்தீன் கில்ஜிக்கு எதிராக உருவாகிய சதித்திட்டத்தில் சிதிமௌலா முக்கியப் பங்கு வகித்ததை வரலாற்றாசிரியர் பரணியும் விவரித்துள்ளார். பல மாதங்களாக சிதிமௌலாவின் ‘கன்கா’வில் நடைபெற்று வந்த அரசத்துரோகக் குற்றங்களுக்கு

மரண தண்டனை அளித்தது முற்றிலும் சரியானது என்று வரலாற்றாசிரியர் கே.எஸ்.லால் கூறுகிறார். (Kishori Saran Lal, History of the khiljis, New Delhi, 1967, page 27) ஜலாலுத்தீன் தன்னை அழிக்க நினைத்தவரை, தனது ஆட்சியைக் கைப்பற்ற நினைத்தவரை கொலை செய்தது வரை பார்த்தோம். இனி இவர் காலத்தில் அலாவுத்தீன் கில்ஜியின் தேவகிரி படையெடுப்பிற்கு வருவோம்.

அலாவுத்தீன் கில்ஜி

இவரது இயற்பெயர் அலி குர்ஷாப். இவரது தந்தை ஷிஹாபுத்தீன். இவருக்கு உடன் பிறந்தவர்கள் மூவர்.

குழந்தைப் பருவத்தில் அலாவுத்தீன் கில்ஜி முறையாகக் கல்வி கற்கவில்லை. வாலிப வயதில் போர்க் கருவிகளைப் பயன்படுத்தும் முறை, குதிரை ஏற்றம் போன்றவற்றில் நல்ல தேர்ச்சியும் பயிற்சியும் பெற்றார் அலாவுத்தீன். அவர் வாழ்க்கையின் தொடக்க காலத்தில் அடைந்த பெரும் வெற்றிகள் அவர் பெற்றிருந்த பயிற்சியின் மேன்மையைப் பறை சாற்றுகின்றன.

அலாவுத்தீன் கில்ஜியின் தந்தை ஷிஹாபுத்தீன் மசூது இளம் சிறார்களை விட்டு இறந்து போனதால், ஜலாலுத்தீன் கில்ஜியே அலாவுதீனையும் தன் அண்ணன் மகன்களையும் வளர்த்தார்.

பள்ளிக்கல்வியில் நாட்டமில்லா விட்டாலும், படைவீரராக வளர்ந்தார். ஆட்சி புரியும் ஆர்வமும் கொண்டிருந்தார். ஜலாலுத்தீன் கில்ஜி தன் மகளை அலாவுத்தீன் கில்ஜிக்கு மணமுடித்துக் கொடுத்தார். திருமண வாழ்க்கை சிறப்பாக அமையவில்லை. தனது நண்பர் அலப்கான் என்ற மாலிக் சஞ்சார் என்பவரின் மகளான மெஹ்ருவை இரண்டாவதாக அலாவுத்தீன் கில்ஜி மணந்தார்.

கி.பி. 1291ல் ஒரு நாள் தோட்டத்தில் தனது இரண்டாவது மனைவி மெஹ்ருவுடன் பேசிக் கொண்டிருந்த வேளையில் அலாவுத்தீன் கில்ஜியின் முதல் மனைவியும், ஜலாலுத்தீன் கில்ஜியின் மகளுமானவள், மெஹ்ருவை செருப்பினால் அடித்தாள். கோபம் கொண்ட அலாவுத்தீன் தனது முதல் மனைவியை வாளால் தாக்கி அவளைக் காயமடையச் செய்தார். சில காயங்களுடன் அவள் தப்பிச் சென்றாள். ஆனால் இது பற்றி ஜலாலுத்தீன் கில்ஜி பொருட்படுத்தவில்லை. மாறாக ஜலாலுத்தீன் கில்ஜியின் மனைவியும் பட்டத்தரசியுமான மாலிகா இ ஜஹான் தனது மகள் பக்கமே சார்ந்து பேசியதுடன் தனது மகளின் கணவனை, அலாவுத்தீன் கில்ஜியை, எப்போதும் குறை

கூறிக் கொண்டே இருந்தார். இதனால் அலாவுத்தீன் கில்ஜியின் ஆத்திரம் அடங்கவில்லை. அலாவுத்தீன் கில்ஜி அரசைக் கவிழ்க்கத் திட்டம் போட்டு வருகிறார் என்றும் எச்சரித்து வந்தார். அலாவுதீனின் குடும்ப வாழ்க்கை அமைதியற்று இருந்தது.

அலாவுத்தீனின் குடும்ப வாழ்க்கையில் ஏற்பட்ட கசப்பு அரசு உரிமையைக் கைப்பற்றும் எண்ணத்தை அவருக்கு உண்டாக்குவதற்கு ஒரு தூண்டு கோலாக அமைந்தது.

கி.பி. 1292ல் அலாவுத்தீன் அரசுரிமையைக் கைப்பற்ற திட்டம் தீட்டினார். விதிசா அல்லது பில்சா மீது படையெடுத்துச் செல்ல அனுமதி பெற்றார். போர்க்களத்தில் பெற்ற பெரும் செல்வங்களால், ஜலாலுத்தீன் அனுமதியுடன் தமது படைபலத்தைப் பெருக்கிக் கொண்டார். அடுத்து சாந்தேரிக்குப் படையெடுத்துச் செல்வதாகக் கூறிவிட்டு, தேவகிரியை நோக்கி தமது பயணத்தைத் தொடர்ந்தார்.

தேவகிரி

முகமது பின் துக்ளக் காலத்தில் தேவகிரி, முஸ்லிம்களால் தௌலதாபாத் என்று அழைக்கப்பட்டது. விந்திய மலைகளுக்கும் கிருஷ்ணா ஆற்றுக்கும் இடையில், வட மேற்குத் தக்காணத்தில் தேவகிரி அமைந்துள்ளது. கி.பி. 1296 பிப்ரவரி 26இல் (ரபியுல்ஆகிர் 19 ஹிஜ்ரி 695) (இதனை வரலாற்று எழுத்தாளர் பெரிஷ்டா 1294 என்று குறிப்பிட்டுள்ளார்) 4000 குதிரைகள் கொண்ட படையோடும் இரண்டாயிரம் காலாட் படையினரோடும் (8000 குதிரைப் படைகள் என்பாரும் உண்டு) அலாவுதீன் கில்ஜி தேவகிரிக்குப் புறப்பட்டார். சாஞ்தேரி வரை பகிரங்கமாக தமது படைகளை நடத்திச் சென்றார். அங்கிருந்து விந்திய மலைகளையும், குறுக்கிட்ட ஆறுகளையும் கடந்து எல்லிச்பூரை அடைந்தார்.

எல்லிச்பூர் அக்காலத்தில் யாதவர்களுடைய அரசின் வட எல்லைக் காவல் அரணாக இருந்தது. அங்கிருந்து தேவகிரி நோக்கி புறப்பட்டார். மக்கள் சந்தேகப்படாமல் இருக்க, இந்து அரசர்கள் விழித்துக் கொள்ளாமலிருக்க, ‘டெல்லி சுல்தானத்திலிருந்து தப்பி ஓடி வந்து அடைக்கலம் தேடும் இளவரசர் நான்’ என்று வதந்திகளைப் பரப்பினார் அலாவுதீன் கில்ஜி.

ஜலாலுத்தீன் கில்ஜியிடம் சண்டையிட்டுக் கொண்டு, தெலுங்கானாவிலுள்ள இராஜ மகேந்திர அரசரிடம் புகலிடம் தேடிப் போய்க் கொண்டிருப்பதாக அறிவித்தார் அலாவுதீன் கில்ஜி. எனவே அவரை எதிர்த்து நின்று போராட எவரும் முன் வரவில்லை.

தேவகிரிக்கு 12 மைல் தூரத்தில் காதிலஜோரா கணவாயை வந்தடைந்தார் அலாவுதீன். அப்பகுதியை ஆண்டு வந்த கன்ஹா என்ற சிற்றரசர் அலாவுதீனை எதிர்த்துப் போரிட்டார். இரண்டு வீரப் பெண்மணிகளும் அதிதீவிரமாகப் போராடி மடிந்தனர்.

தேவகிரியைத் தாக்கி வெல்ல முடியுமா என்றும் எதிர்

நோக்கியிருந்த இன்னல்களை தமது படைகள் சமாளிக்குமா என்றெல்லாம் ஆராய்ந்து அலாவுதீன் கில்ஜி தமது படைவீரர்களிடம் உரையாடினார்.

போர்க்களத்தில் பெண்கள் கூட தம்மை எதிர்த்து தீவிரமாகப் போராடுவதை குறிப்பிட்டுப் பேசியவர், தேவகிரியை நாம் கைப்பற்றினால் அடையப்போகும் பெருஞ்செல்வங்கள் குறித்தும் எடுத்துரைத்தார். இதனைக் கேட்டதும் எவ்வித ஆபத்தையும் எதிர் கொள்ளத் தயாராக இருப்பதாக அலாவுதீன் கில்ஜியின் படையினர் முழக்கமிட்டனர்.

தேவகிரி மக்கள் ஒருபோதும் முஸ்லிம்களைப் பற்றிக் கேள்விப்பட்டதில்லை. அலாவுதீன் தேவகிரி வாயிலை அடைந்தார். தேவகிரியை இராமச்சந்திர தேவா என்பவர் ஆட்சி புரிந்து கொண்டிருந்தார். வயதான அவர் சிறப்பாக ஆட்சி புரிந்தார். அவரது மகன் சிங்கன தேவா (சங்கர தேவா) ஒரு படையுடன் தீர்த்த யாத்திரைக்கு அப்போது சென்றிருந்தார்.

தேவகிரிக் கோட்டை கூம்பு வடிவிலான குன்றின் மேல் 640 அடி உயரத்தில் இருந்தது இயற்கையிலே அந்நகருக்கு அரணாக விளங்கியது. குன்றில் 50 அடி ஆழ அகழியும் இயற்கையாகவே அமைந்திருந்தது. குன்றின் செங்குத்தான இயல்பும், உயரமும் அதற்கு அதிகமான பாதுகாப்பை தேவையற்றதாக ஆக்கியிருந்தது.

அலாவுதீன் படையெடுத்து வந்தபோது அந்த அகழி நீர் வற்றி, பாதுகாப்பு குறைவாக இருந்தது. அத்தோடு அங்கு இருந்த பாதுகாப்புப் படையினருக்கு போதிய உணவுப் பொருட்களும் இல்லாமல் இருந்தது.

தேவகிரி கோட்டையை முற்றுகையிட்ட அலாவுதீன், “நான் முன்னணிப் படையுடன் வந்துள்ளேன். எங்களது சுல்தான் 20000 பேர் கொண்ட படையுடன் வந்து கொண்டிருக்கிறார்” என்ற செய்தியையும் பரப்பினார்.

உடனே ராமச்சந்திரதேவா சமாதனம் நாடினார். சுல்தான் ஜலாலுத்தீனின் அனுமதியின்றி போர் நடத்தி, மிகவும் இரகசியமாக தேவகிரி சென்று, அநேக வதந்திகளைப் பரப்பி

எளிதாகவும் அதிசயமாகவும் தேவகிரியை வென்றார் அலாவுதீன். 15 நாட்களுக்குள் தேவகிரியை விட்டுச் சென்றுவிடுவதாகவும், சிறை பிடிக்கப்பட்டவர்களை விடுவிக்கவும் இசைந்தார் அலாவுதீன். போர் நஷ்ட ஈடுவழங்க தேவகிரி அரசர் ஒப்புதல் அளித்தார்.

இதற்கிடையில் சிங்கன தேவா திரும்பினார். இராமச்சந்திர தேவா மகனை சமாதானப்படுத்தினார். ஆனால் சிங்கன தேவா ஆத்திரங் கொண்டார். அலாவுதீனிடம் தூதுவரை அனுப்பினார். அலாவுதீன் கைப்பற்றிய பொருட்களை திருப்பித் தந்துவிட்டு நாட்டை விட்டுச் செல்லுமாறு கேட்டு தூதுவர் சென்றார். தூதுவரை அலாவுதீன் திருப்பி அனுப்பினார். நஸ்ரத்கான் தலைமையில் ஓராயிரம் படை வீரர்கள் தேவகிரி கோட்டையை வளைத்து நிற்க உத்தரவிட்டார். எஞ்சிய வீரர்களை சிங்கன தேவாவோடு போர் செய்ய அனுப்பினார் அலாவுதீன்.

நஸ்ரத் கானின் படையைக் கண்ட தேவகிரிப் படைகள், இது முன்பு அலாவுதீன் அறிவித்த டில்லி குதிரைப் படையில் ஒரு பகுதி என்று தவறாக எண்ணியது. பீதியால் உறைந்தது. சிதறி ஓடியது. வாய்ப்பைப் பயன்படுத்திய அலாவுதீன் மீண்டும் போரிட்டார். நீண்ட நாள் முற்றுகையை தொடர்ந்து இறுதியில் மீண்டும் இராமசந்திர தேவா சமாதானம் நாடினார்.

அலாவுதீன் கில்ஜி இப்போது கடுமையான நிபந்தனைகளை விதித்தார். முன்பு தீர்மானிக்கப்பட்ட போர் நஷ்ட ஈட்டுத் தொகையை விட அதிகமான தொகையை அளிக்க வேண்டும் என்றும், எல்லிச்பூரைத் தர வேண்டும் என்றும், 600 மணங்கு முத்துக்கள், 7 மணங்கு நவரத்தினங்கள், 10000 மணங்கு வெள்ளி, 4000 பீஸ்பட்டுத் துணிகள் அவருக்கு அளிக்கப்பட வேண்டும் என்றும் நிபந்தனை விதித்ததாக பெரிஷ்டா கூறுகிறார். ஆண்டு தோறும் கப்பம் செலுத்தவும் இராமச்சந்திர தேவா இசைந்தார்.

கி.பி. 1350இல் பெருங்காப்பிய வடிவ நூலாக ஃபுது உஸ்சலாதீன், அப்துல்லா மாலிக் இசாமியால் எழுதப்பட்டது. இது 1938இல் ஆக்ராவில் பெர்சியன் மொழியில் பதிப்பிக்கப்பட்டது.

இவர் இராமச்சந்திரா தேவாவின் மகளுக்கும் அலாவுதீனுக்கும் இடையே ஏற்பட்ட திருமணம் பற்றிக் குறிப்பிடுகிறார். வேறு சரித்திர ஆசிரியர் எவரும் இதுபற்றி குறிப்பிடவில்லை. தேவகிரி படையெடுப்பைப் பற்றிக் குறிப்பிடும் ஜான் பிரிக்ஸ்,

"We may here justly remark, that, in the long volumes of history, there is scarcely any thing to be compared with this exploit, where we regard the resolution in forming the plan, the boldness of its execution, the great fortune which attended its accomplishment'', என்று குறிப்பிடுகிறார்.

தேவகிரி படையெடுப்பைத் திட்டமிடுவதில் அலாவுதீன் கில்ஜி காட்டிய மனஉறுதி, அதை நிறைவேற்றுவதில் அவர் காட்டிய தைரியம், அதன் விளைவாக அவர் பெற்ற செல்வம், நல்ல யோகம், நல்ல அதிர்ஷ்டம் ஆகியவற்றைக் கொண்டு பார்க்குமிடத்து இதைப் போன்றதொரு படையெடுப்பை வரலாற்றில் வேறெங்கும் காண இயலாது என்றே கூறுதல் வேண்டும் என்பார். (முற்கூறிய பெரிஷ்டா ஆங்கில நூல், ஜான் பிரிக்ஸ் மொழிபெயர்ப்பு பதிப்பு, முதல் பாகம், பக்கம் 176)

அலாவுதீனின் தேவகிரி படையெடுப்பின் போது, ஜலாலுத்தீன் கில்ஜி தமது படையுடன் குவாலியரில் இருந்தார். தமது மருமகன் பெற்ற வெற்றியைக் கேட்டு மெத்த மகிழ்ச்சியுற்றார். அதனைக் கொண்டாடும் வகையில் விருந்திற்கும் ஏற்பாடு செய்தார். (கே. எஸ். லால், முற்கூறிய ஆங்கில நூல் பக்கம் 48)

பெரும் செல்வத்துடன் அலாவுதீன் கில்ஜி திரும்பிக் கொண்டிருந்தது குறித்து தமது ஆலோசகர்களை அழைத்து யோசனை கேட்டார். பிரபுவான மாலிக் அகமது சாப், ''யானைகளும் பெருஞ்செல்வமும் அதிக அளவில் ஒருவர் பெற நேரின் அவர் தலைகால் புரியாமல் ஆடத் தொடங்கிவிடுவார். அது போருக்கு காரணமாகி விடும். அலாவுதீனோ தங்களின் அனுமதி பெறாமல் அண்டை நாட்டுடன் போரிட்டு அதில் வெற்றி பெற்று பெருஞ்செல்வத்துடன் வருகிறார். சாந்தேரிக்குச் சென்று அலாவுதீனைத் தடுத்து நிறுத்த வேண்டும். அப்போதுதான் அவர் கொண்டு வருகிற பத்து அரசாங்கங்களின் அளவுச் செல்வத்தை அவர் கைவசமிருந்து நாம் பெற முடியும். அவரிடமிருக்கும்

செல்வத்தை ஜலாலுத்தீன் கில்ஜி பறித்துக் கொள்ள வேண்டும்'' என்றார்.

மலிக் பக்ருத்தீன் கூச்சி கூறுகையில், ''அலாவுதீனின் நடவடிக்கையை யாரும் அறியவில்லை. அவ்வாறு இருக்க நாம் படையுடன் சென்று வழிமறித்தால் அவர் எங்காவது காட்டுக்குள் ஓடிவிடுவார். தேவகிரியிலிருந்து கொண்டு வரும் செல்வங்கள் நமது கரங்களுக்கு கிடைக்காது போகக் கூடும். எனவே நாம் படையைத் தயாராக வைத்திருப்போம். சண்டை ஏற்பட்டால் அதனைப் பயன்படுத்துவோம். அலாவுதீன் கில்ஜி கலகத்தில் ஈடுபடுவதற்கு முன்னரே, அவருக்கு எதிராக போர்க் கோலம் பூணுதல் எனக்கு நியாயமாகப்படவில்லை'' என்றார். சுல்தான் படையுடன் டில்லி சென்று ரம்ஜான் மாதத்தை டில்லியிலே கழிப்பது நல்லது என்றார்.

மாலிக் கமாலுத்தீன், அபுல் மாலிக், மாலிக் நசுருத்தீன் குராமி ஆகியோர் அந்த ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

அலாவுதீன் கில்ஜியை தம்மடியில் வைத்து வளர்த்தேன் என்றும், தம்பிள்ளைகள் தமக்கு தீங்கு நினைத்தாலும் அலாவுதீன் ஒருக்காலும் தமக்கு தீங்கிழைக்க விரும்பமாட்டார் என்றும், அலாவுதீன் தமக்கு கேடு விளைவிக்க விரும்பமாட்டார் என்றும், அலாவுதீன் தமக்குக் கேடு விளைவிக்கும் வகையில் தாம் அவருக்கும் கெடுதல் ஒன்றும் செய்யவில்லை என்றும் எனவே அலாவுதீன் மீது வீண்பழி சுமத்த வேண்டாம் என்றும் ஜலாலுத்தீன் கில்ஜி பதிலுரைத்தார்.

அலாவுதீன் கில்ஜி தமது படைகளுடன் 1296 ஜூன் 2இல் 'காரா'வை அடைந்தார். (28 ரஜப் ஹிஜ்ரி 695)

அகமது சாப் தன்னைப் பற்றி ஜலாலுத்தீன் கில்ஜியிடம் தவறாக எடுத்துரைத்ததை அறிந்த அலாவுதீன் கில்ஜி 'காரா'விலிருந்து ஜலாலுத்தீனுக்கு கடிதம் எழுதினார். அதில் ''தங்கள் அனுமதியின்றி தாம் தேவகிரிக்குப் படை நடத்திச் சென்றமைக்கு வருந்துவதாகவும், அதற்காக தங்களது மன்னிப்பை தாம் நாடி நிற்பதாகவும், எனது செய்கையினைப் பயன்படுத்திக்

கொண்டு தம்முடைய பகைவர்கள் தங்களின் காதுகளில் இல்லாததும், பொல்லாததும் கூறிவருகின்றனர் என்றும், தாம் தேவகிரியிலிருந்து கொண்டு வந்த செல்வம் முழுமையையும், தங்களிடம் ஒப்படைக்கத் தயாராக இருப்பதாகவும், தான் செய்த குற்றங்களை எல்லாம் மன்னித்து விட்டதாக கையொப்பமிட்ட கடிதத்தை தாங்கள் எழுதிவிட்டால் போதுமானது" என்றும் குறிப்பிட்டிருந்தார்.

அதே நேரத்தில் ஒருவேளை இக்கடிதத்தினை ஜலாலுத்தீன் நம்பாமல் படையெடுத்து வந்தால் தாம் 'காரா'வை விட்டு லக்னோதிக்குச் சென்று அங்கு தமது அரசை நிறுவத் திட்டமிட்டிருந்தார். ஏனென்றால் மேற்கில் சுல்தான் ஜலாலுத்தீன் இருக்கிறார். தெற்கில் சக்தி வாய்ந்த இந்து அரசர்கள் இருக்கிறார்கள். எனவே வடக்கு நோக்கிச் செல்லத்திட்டமிட்டார் அலாவுதீன். தேவைப்பட்டால் சரு (சர்ஜூ) ஆற்றை கடப்பதற்காக படகுகளைத் தயாராக வைத்திருக்கும் பணியினை ஜாபர் கானுக்கு அளித்தார்.

ஆனால் நடந்தது வேறு. அலாவுதீன் கடிதத்தைப் படித்ததும் ஜலாலுத்தீன் உள்ளம் பூரித்துப் போனார். அலாவுதீன்செய்த முறைகேடுகளைத் தாம் மன்னித்து விட்டதாகவும் அவரிடம் தமக்கு இருந்த அன்பு குறையவில்லை என்றும் பதில் கடிதம் எழுதி, அதனை அலாவுதீனிடம் சேர்ப்பித்திட இரு பிரபுக்களையும் அனுப்பி வைத்தார் ஜலாலுத்தீன்.

மாலிக் இமாதுல் முல்க், மாலிக் ஜியாவுதீன் என்ற இரு பிரபுக்களும் ஜலாலுத்தீனின் கடிதத்தை அலாவுதீனிடம் சேர்த்தார்கள். அவர்கள் அங்குள்ள நிலையை அறிந்தனர். ஜலாலுத்தீன் ஏமாற்றப்பட்டுள்ளதை உணர்ந்தனர். உண்மை நிலையினை அறிவிக்க முயன்றனர். ஆனால் அலாவுதீன் அவர்களை 'காரா'வில் தனது கண்காணிப்பிலேயே வைத்துக் கொண்டார்.

மறுபடியும் சந்தேகம் வந்து விடக் கூடாது என்பதை உணர்ந்து, அலாலுவுதீன் மீண்டும் ஒரு கடிதம் எழுதினார். இந்தக் கடிதம் அவரது தம்பி அல்மாஸ் பேக்கிற்கு எழுதப்பட்டது. அவர் குதிரைப்

படைத்தலைவர். அத்துடன் ஜலாலுத்தீன் கில்ஜியின் மற்றொரு மகளை மணந்தவரும் ஆவார்.

அல்மாஸ் பேக்கிற்கு அலாவுதீன் எழுதிய கடிதத்தில், “தாம் சுல்தானுக்குத் துரோகம் இழைத்து விட்டதாகவும், ஆகவே சுல்தான் ஜலாலுத்தீன் கில்ஜி தம்மை கடுமையாகத் தண்டிக்கக் கூடும் என்றும் எனவே சுல்தான் நேரில் வந்து தம்மை மன்னித்து டில்லிக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்றும், அவ்வாறு நடைபெறாவிட்டால், தாம் உயிர் வாழ்வதில் பயன் இல்லை” என்றும் எழுதியிருந்தார்.

அக்கடிதத்தை அல்மாஸ் பேக் தனது மாமனாரான ஜலாலுத்தீன் கில்ஜியிடம் காண்பித்தார். அதைக் கண்ணுற்ற ஜலாலுத்தீன், அலாவுதீன் அச்சம் கொள்ளத் தேவையில்லை, தான் அவரைத் தண்டிக்க மாட்டேன் என்றும் தானே நேரில் காராவிற்கு புறப்பட்டு வந்து அலாவுதீனுக்கு ஆறுதல் கூறுவேன் என்றும் தகவல் சொல்லி அல்மாஸ் பேக்கை காராவிற்கு அனுப்பி வைத்தார். அல்மாஸ் பேக் காராவிற்கு கிளம்பிய சில தினங்களுக்குள் ஜலாலுத்தீன் ஆயிரம் குதிரை வீரர்கள், நம்பிக்கைக்குரிய பிரபுக்கள் புடை சூழ காராவை நோக்கிப் புறப்பட்டார். தம்ஹை என்ற இடத்தில் ஜலாலுத்தீன் தம் நண்பர்கள் சிலரோடு படகுகளில் ஏறிக் கொண்டார். (தம்ஹை தற்காலத்தில் டெல்லியிலிருந்து தென்கிழக்கில் 60 மைல் தூரத்தில் உள்ள துப்ஹை என்னும் ஊராகும்)

அகமது சாப் ஆற்றின் கரை ஓரமாக ஒரு படையை நடத்திக் கொண்டு வந்தார். ஜலாலுதீன் மணிக்பூரில் தமது பாசறையை அமைத்துக் கொண்டார். ஜலாலுத்தீன் கில்ஜியின் மருமகன் அல்மாஸ் பேக் ஒரு படகில் ஏறி ஜலாலுத்தீனை சந்தித்து, தம்முடைய நெருங்கிய நண்பர்கள் சிலருடன் அலாவுதீனை சந்திப்பது நல்லது என்றும், எல்லா பரிவாரங்களுடன் ஜலாலுத்தீன் வந்தால் அலாவுத்தீனுடைய அச்சம் அகலுவதற்கில்லை என்றும் கூறினார். அதனையும் ஜலாலுத்தீன் ஏற்றுக் கொண்டு அவரும் அவரது நண்பர்கள் மாலிக் குர்ரம், மாலிக் பக்ருதீன் குசி, மாலிக் அமாசி அகுர்பெக், மாலிக் ஜமாலுதீன், (எழுத்தாளர்

பரணி இவரை கமாலுத்தீன் என்பார்) அபுல் மாலிக் இஹ்யாருதீன், துணை வக்கில் தார் மற்றும் சிலருடன் இரண்டு படகுகளில் கரை நோக்கி வந்தனர்.

ஜலாலுத்தீன் மருமகன் அல்மாஸ் பேக் மீண்டும் ஒரு கோரிக்கையை தனது மாமாவிடம் வைத்தார். 'சுல்தானுடன் (ஜலாலுத்தீன்) வருபவர்கள் ஆயுதம் தாங்கியிருந்தால் அலாவுதீனின் சந்தேகம் தீராது என்றும் ஆகவே அவர்கள் நிராயுத பாணிகளாக வருவது நல்லது' என்றும் கூறினார். இத்தகைய கோரிக்கையின் போது கூட ஜலாலுதீனுக்கு அலாவுதீன் மேல் சந்தேகம் ஏற்படவில்லை. "அதற்கு காரணம், தனது சகோதரனுடைய மகனும் தனக்கு மருமகனும் என்பதாலா? அல்லது தேவகிரியிலிருந்து கொண்டு வந்த பொன்னும் பொருளும் மீதுள்ள ஆசை அவரது கண்களை மறைத்துவிட்டதா? " என்பார் பரணி.

மக்களின் மகிழ்ச்சி

ஜலாலுத்தீனுடன் வந்தவர்கள் ஆயுதங்களைத் தூக்கி எறிந்தனர். சுல்தானது படகு கரையை நெருங்கியது. அங்கு அலாவுதீனின் படைகள் அணிவகுத்து நின்றது. யானைகளும் குதிரைகளும் போர் செய்யத் தயாராக கவசங்கள் பூட்டப்பட்டிருந்தன. இதனைப்பற்றி அல்மாஸ்பெக்கிடம் கேட்டபோது, 'ஜலாலுத்தீனை அரசருக்குரிய மரியாதையுடன் வரவேற்று தாம் கொண்டு வந்த பொருட்களை, செல்வத்தை அவர் காலடியில் சமர்ப்பணம் செய்வதே அலாவுதீனின் நோக்கம்' என்று கூறினார். இதனையும் ஜலாலுத்தீன் நம்பி, சொந்த மகன் வீட்டிற்குச் செல்லும் தந்தையைப் போல, சந்தேகமோ, அச்சமோயின்றி கரையை அடைந்தார்.

படகு கரையை அடைந்தது. அலாவுதீன் மகிழ்ச்சி பொங்க ஜலாலுத்தீன் காலடியில் விழுந்து வணங்கினார். அலாவுதீனைத் தூக்கி மார்போடு அணைத்து பாச உணர்ச்சி பொங்க பேச ஆரம்பித்தார்.

"குழந்தைப் பருவத்திலிருந்து உன்னை வளர்த்துள்ளேன். இப்போது நீ பெரியவனாகி விட்டாய். பதவி உயர்வைக் கொடுத்தேன். இவையனைத்தும் உன்னைக் கொல்வதற்காகவா நான் செய்தேன்? என்னுடைய பிள்ளைகளைக் காட்டிலும் நீ என்னிடம் அன்பாக நடந்து வந்திருக்கிறாய். உலகம் மாறலாம்; ஆனால் உனக்கும் எனக்கும் உள்ள உறவு மாறாது. உன்பால் எனக்கு ஏற்பட்டிருக்கும் பாசமும் குறையாது" என்றார்.

பிறகு அலாவுதீனுடைய கைகளைப்பற்றிக் கொண்டு படகு நோக்கிச் சென்றார். பரணியின் கூற்றுப்படி, நஸ்ரத்கான் சமிக்ஞை செய்தார். அருகிலிருந்த மஹ்மூத் சலீம் ஜலாலுத்தீனை தனது வாளால் வெட்டினார். மறுமுறையும் தாக்கினார். ஜலாலுத்தீன் கில்ஜி படகை நோக்கி கூக்குரலிட்டவாறே ஓடினார்.

இக்தியாருத்தீன் ஹூத் ஜலாலுத்தீனை கீழே சாய்த்தார். தலையைக் கொய்தார். ஏனையோர் நீரில் மூழ்கியோ அல்லது

எதிரிகளின் கைகளாலோ மாண்டனர். இந்நிகழ்வு நடைபெற்றது 17 ரம்ஜான், ஹிஜ்ரி 695..1296 ஜூலை 20ஆம் நாள்.

ஜலாலுத்தீனைக் கொன்றுவிட வேண்டும் என்ற எண்ணம் அலாவுதீனுக்கு எப்போது ஏற்பட்டது என்பதை திட்டவட்டமாகக் கூறுமுடியாது (டி.ஆர். இராமச்சந்திரன், பேராசிரியர், வரலாற்று துறைத் தலைவர், பச்சையப்பா கல்லூரி, சென்னை, டில்லி சுல்தானியத்தின் வரலாறு கி.பி. 1206 முதல் 1320 வரை முதல்பாகம், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், 1977, பக்கம் 209)

ஜலாலுத்தீனைக் கொல்லும் எண்ணம் தேவகிரியிலிருந்து திரும்பியபோது ஏற்பட்டிருக்கலாம். தேவகிரி அரசரிடம் கப்பப் பணத்தை தமக்கு அனுப்பும்படி அலாவுதீன் கட்டளையிட்ட போது அவ்வெண்ணம் தோன்றியிருக்கக் கூடும். ஆனால் அதற்குப்பின் அலாவுதீன் கில்ஜி ஜலாலுத்தீனுக்கு எழுதிய கடிதங்களிலிருந்து அந்த எண்ணம் அப்போது தோன்றவில்லை என்பதை அறியலாம்.

ஜலாலுத்தீனின் கோபக்கனலில் இருந்து தப்ப, ஒன்று தன்னை மாய்த்துக் கொள்ள வேண்டும் அல்லது தான் வங்காளம் சென்று தனியரசை ஏற்படுத்த வேண்டும் என்றுதான் அலாவுதீன் திட்டமிட்டிருந்தார். எனவே அப்போதும் ஜலாலுத்தீனை கொல்லத் திட்டமிடவில்லை. ஜலாலுத்தீன் தக்க பாதுகாப்புடன் வரவில்லை என்பதை உணர்ந்தபோதுதான் அலாவுதீனுக்கு, ஜலாலுத்தீனைக் கொல்ல வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது என்பதை ஊகித்தறியலாம்.

“உண்மையில் ஜலாலுத்தீனுடைய படுகொலை திட்டமிடப்பெற்ற ஒன்றன்று, இது திடீரென்று உருவான ஒன்றே” என்பார் பேராசிரியர் முனைவர். ந.க. மங்கள முருகேசன். (இந்திய வரலாறு கி.பி. 1206 முதல் 1526 வரை, சென்னை 2007, பக்கம் 95). கில்ஜிக்களின் வரலாற்றை ஆய்வு செய்து 1967இல் 387 பக்கங்களில் தனி நூலாகத் தந்துள்ள கே.எஸ்.லால், தனது ஆங்கில நூலில் பக்கம் 57இல் ‘இது கடைசி கட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவு’ என்று குறிப்பிடுகிறார்.

அலாவுதீன் தனது சிற்றப்பாவிற்கு தீங்கினை இழைத்தார்

என்பதில் ஐயமில்லை. அக்காலகட்டத்தில் டில்லி சுல்தான்கள் 32 பேர்களில் 13 பேர் இயற்கை மரணம் அடைந்தனர். இருவர் விபத்தில் மடிந்தனர், நால்வர் போர்க்களத்தில் இறந்தனர்; மூன்று பேர் பதவி போனபின் உயிரிழந்தனர்; 12 பேர் படுகொலை செய்யப்பட்டு இறந்தனர்.

ஜலாலுத்தீன் கொல்லப்பட்ட மூன்று அல்லது நான்கு ஆண்டுகளுக்குள் அல்மாஸ்பெக், உலுக்கான் நஸ்ரத்கான் ஆகியோர் மாண்டனர். ஜலாலுத்தீனை முதலில் தாக்கிய மஹ்மூத் சலீம் தொழுநோய்க்குள்ளானார். ஜலாலுத்தீனின் தலையை வெட்டிய இக்கியாருத்தின் ஹூத் பைத்தியமானார் என்பது வரலாற்று உண்மைகளாகும்.

அலாவுத் துனியா வத்தீன் முகமது ஷா சுல்தான் என்ற பட்டத்துடன் 20.10.1296யில் (22 துல்ஹஜ் 695 ஹிஜ்ரி) அலாவுதீன் அரியணையில் அமர்ந்தார். 21.10.1296, 22.10.1296 இருநாட்கள் டில்லிக்குப் படை நடத்திச் செல்லவும், காராவில் தற்காலிக அரசமைப்பை உருவாக்கிடவும் செலவிடப்பட்டன. பட்டங்களையும் பதவிகளையும் வாரி இறைத்தார் அலாவுதீன்.

அல்மாஸ்பெக் உலூக்கான் என்ற பட்டம் பெற்றார். ஜபர்கான் என்ற பட்டம் ஹிஜாப் ருத்தீனுக்குத் தரப்பட்டது. அலப்கான் பட்டம் மலிக்சன் ஜாவிற்கும் நஸ்ரத் கான் பட்டம் மலிக் நஸ்ரத்துக்கும் வழங்கப்பட்டது. நண்பர்கள் பலரை (படைத்தலைவர்) அமீர்களாக்கினார். அமீர்களை மலிக்குளாக (உரிமையாளர்) உயர்த்தினார் அலாவுதீன்.

அலாவுதீன் கில்ஜி டில்லிக்குச் செல்வதற்கு முன் படைதிரட்டுவதற்கான பணிகளில் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது முழு மூச்சுடன் இறங்கினார். தமது அதிகாரிகளிடம் தேவகிரியிலிருந்து தாம் கொண்டு வந்த பணத்தைக் கொடுத்து பல இடங்களுக்கு ஆள் அனுப்பி விரைவில் படைதிரட்டிட உத்தரவிட்டார். படைகளுக்கு ஆள் சேர்க்கும் போது பழைய விதிகளைப் பின்பற்ற வேண்டாம் என்றார். ‘படையில் சேரவருபவர் திறமையைப் பற்றி கவலை இல்லை. படையில் சேர விரும்புபவர்கள் எந்த உத்தரவாதப்

பத்திரமும் தரவும் வேண்டாம்' என்றார். எண்ணிக்கையே அன்றி திறமை அல்ல என்ற அடிப்படையில் படை திரட்டினார்.

கற்கள் வீசும் இயந்திரங்களில் பொற்காசுகளை நிரப்பிக் கொண்டு, திரளாக மக்கள் மத்தியில் வீசும்படி கட்டளையிட்டார். அலாவுதீனுடைய தாராள மனப்பான்மையை அறிந்த மக்கள் அவர் மீது அன்பு கொள்ளலானார்கள், ஆதரவு தந்தார்கள். படைகளுடன் வேகமாக டெல்லியை நோக்கி முன்னேறினார்.

ஜலாலுத்தீன் கொலையுண்ட செய்தியை அறிந்தவுடன் அகமது சாப் தலைநகரம் திரும்பினார். ஜலாலுத்தீன் கொலையுண்ட செய்தியை அறிவித்தார். அரண்மனையில் மூன்று நாட்கள் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது. ஜலாலுத்தீன் மனைவி மலிகா- இ-ஜஹான் இனி காலம் தாழ்த்தினால் ஆபத்து விளையும் என்று எண்ணி தனது இளையமகன் காதர்கானை அரியணையில் அமர்த்தினார். ருக்னுத்தீன் இப்ராஹிம் என்ற பட்டத்தைச் சூட்டினார். தமது இருப்பிடத்தை கைலீகரியிலிருந்து டில்லி நகருக்குள் காசர்-இ-கபிஸ் எனும் பச்சை அரண்மனைக்கு மாற்றினார். காதர்கான் திறமை இல்லாதவர். எனவே அரசருக்கு அனுப்பப்பட்ட விண்ணப்பங்களை தாமே பெற்று மலிகா-இ-ஜஹான் முடிவெடுத்தார்.

மூத்த பிள்ளை, திறமையான அரீக்கலீகான் இதனை எண்ணி வேதனையுற்றார். டில்லிக்கு வராமல் அன்னையிடம் கருத்து மாறுபாடு கொண்டு மூல்தானிலேயே இருந்தார். 'அற்பர்களுள் அற்பர் மலிகா-இ-ஜஹான்' என்று பரணி எழுதியுள்ளார். இவரது ஆசையே ஜலாலுத்தீன் குடும்பத்தினருடைய அழிவுக்கு காரணம் என்று கூறுவார்கள். கே.எஸ்.லால் இதற்கு நேர்மாறான கருத்தைச் சொல்கிறார்.

அலாவுதீன் கில்ஜி பதௌன் வருவதற்குள் 56,000 குதிரைப் படையினரும், 60,000 காலாட் படையினரும் அவர் படையில் சேர்ந்துவிட்டனர். தமது படையை இரண்டாகப் பிரித்தார். ஜபர்கான் தலைமையின் கீழ் ஒரு பிரிவு இருந்தது. அவரை கோல் என்ற பகுதி வழியாக (தற்போதைய அலிகார்) டில்லிக்கு வருமாறு கட்டளையிட்டார். பதௌன் வழியாக அலாவுதீன்

டில்லிக்கு விரைந்தார். பரண் (தற்போதைய புலந்சாகர்) வழியாக டில்லியை நோக்கிச் செல்லும்போது அங்கும் எண்ணற்றவர்களை படையில் சேர்த்துக் கொண்டனர்.

அலாவுதீன் கில்ஜியை எதிர்ப்பதற்காக அனுப்பப்பட்ட ஜலாலி பிரபுக்கள் தாஜ்தீன் கூச்சி, மலிக் அமாஜி, மலிக் உஸ்மான், மலிக் உமர் சுர்க்கா, அமீர் அலிதிவானி, அமீர் கலன், ஹிரான்மர் ஆகியோரை தமது படையில் சேர்த்தார். ஒவ்வொருக்கும் 30 முதல் 50 மணங்கு பொன் வாரி வழங்கப்பட்டது. படைவீரர்கள் ஒவ்வொருவருக்கும் 300 வெள்ளி தங்காக்கள் (Tanks) வழங்கப்பட்டது. ஒவ்வொருவருக்கும் 100 தங்காக்கள் கொடுக்கப்பட்டதாக கே.எஸ்.லால் குறிப்பிட்டுள்ளார். அலாவுதீன் தனது படைபலத்தை பெருக்கிய இந்தச் செய்கை ஜலாலுத்தீன் குடும்பத்தினை உடைத்தெரிய வழி ஏற்படுத்தியது. டில்லியிலுள்ள பிரபுக்கள் மதில் மேல் பூனையாக இருந்தனர்.

சிக்கலான வேளையில் ஜலாலுத்தீன் மனைவி மலிகா–இ–ஜஹான் தனது திறமை வாய்ந்த மூத்த மகன் அர்க் அலீகானை சமாதானப்படுத்தி டில்லிக்கு அழைத்தார். ஆனால் அவர் டில்லிக்கு வரவில்லை. அலாவுதீன் தனது செல்வாக்கு வளர்வதை அறிந்து பெருமகிழ்ச்சி அடைந்தார். உவகை மேலீட்டால் தன்னிடம் உள்ள பொன்னையும், பொருளையும் வாரி வாரி வழங்கினார். பலருக்கு இலஞ்சம் கொடுத்து தம் அணியில் சேர்த்தார்.

பக்பத் என்னுமிடத்தில் ஆற்றைக் கடந்து சீரி எனுமிடத்தை அடைந்தார். ருக்னுத்தீன் இப்ராஹிம் நகரைவிட்டு வெளியே வந்து தமது படைகளுடன் அணிவகுத்தார். ஆனால் அவரது படையின் பெரும்பகுதி அலாவுதீன் கில்ஜி பக்கம் சேர்ந்தது.

தனது அன்னை மலிகா–இ–ஜஹான், அகமது சாப், மற்றும் முக்கியத் தலைவர்களுடன் கஜினி வாயில் வழியாக இரகசியமாக மூல்தானுக்கு தப்பி ஓடினார் ருக்னுத்தீன் இப்ராஹிம். காப்பாற்றுவாரற்று, கேட்பாரற்றுக் கிடந்த தலைநகர் அலாவுதீன் கில்ஜி வசமாயிற்று. தலைநகரில் இருந்த தலைவர்கள் பதவிகளைப் பெறுவதற்காகப் போட்டி போட்டுக் கொண்டு வந்து அலாவுதீன் கில்ஜியின் பக்கம் சேர்ந்தார்கள்.

1296 அக்டோபர் 21 இல் இல்தூமிவின் வெள்ளை அரண்மனையில் (காசர்–இ–சபத்) அலாவுதீன் கில்ஜி அரியணை ஏறினார். சீரியில் ஆயிரம் தூண்கள் கொண்ட அரண்மனை கட்டி முடியும் வரை 1265இல் கட்டப்பட்ட பால்பனுடைய சிவப்பு அரண்மனையை அலாவுதீன் இருப்பிடமாக்கிக் கொண்டார். ஆட்சி புரியத் தொடங்கினார். குத்பா அவர் பெயரால் மொழியப்பட்டது, நாணயங்கள் அச்சிடப்பட்டன. மக்கள் மகிழும் வண்ணம், உலமாக்கள், ஷெய்குகள் சந்தோஷம் கொள்ளும் வண்ணம் அள்ளி அள்ளி வழங்கப்பட்டது. மக்கள் மகிழ்ச்சி கடலில் ஆழ்ந்தனர்.

ஜலாலுத்தீன் அரசர் கொலையுண்ட நிகழ்வையே மறக்கடிக்கச் செய்கின்ற வகையில், மனவருத்தம் மறையும் வகையில் அலாவுதீன் கில்ஜியின் நடவடிக்கைகள் அமைந்தன. மக்களை திருப்திபடுத்திய பின் அரச அவையினரைத் திருப்திபடுத்தும் முயற்சியில் இறங்கினார்.

தில்லியில் அரியணை

தில்லியைக் கைப்பற்றியவுடன் அலாவுதீன் கில்ஜி, டில்லி பிரபுக்களை, மேட்டுக்குடியினரைச் சமாதானப்படுத்தி ஆட்சியினை ஏற்றுக் கொள்ளும் படியாகச் செய்வதே மதிநுட்பம் வாய்ந்த செயலெனக் கருதினார்.

ஜலாலி பிரபுக்களான தாஜுதின் குசி, அமாசி அக்குர்பெக், அமீர் அலி திவாகு, உஸ்மான் அமீர் அகுர், அமீர் கலான், உமர் சுக்ரா, ஹிரன்மர் ஆகியோருக்கு உயர்பதவி அளித்தார். அவர்களையும் தமது ஆதரவாளர்களையும் இணைந்து ஒரு கூட்டு அமைச்சசரவையை அமைத்தார். அவரது கூட்டு அமைச்சரவை மூன்று முக்கியக் கூறுகளைக் கொண்டதாக இருந்தது.

* தொடர்ந்து பதவியிலிருந்து வந்த முந்தைய துருக்கிய பிரபுக்கள்;
* தன் பக்கம் சேர்ந்து கொண்ட ஜலாலி பிரபுக்கள்
* அலாவுதீன் கில்ஜி நியமித்த அதிகாரிகள்

ஜலாலுத்தீன் கில்ஜி காலத்தில் வசீர் (பிரதம அமைச்சர்) ஆகப் பணிபுரிந்த குவாஜா காதீர் தொடர்ந்து வசீராகப் பணியாற்றும்படி கேட்டுக் கொள்ளப்பட்டார். காசி சத்ருத்தீன் அரிஃப்பிற்கு இரண்டு பதவிகள் தரப்பட்டன. சாதர் இ ஜஹான் அதிகம் படிக்காதவர்; ஆனால் அடிமட்டத்தில் நடைபெறுகின்ற தில்லு முல்லுகளை அறிந்தவர்; அரசினை எவரும் ஏமாற்றாதவாறு பார்த்துக் கொள்ளும் வகையில் அவருக்கு தலைமை காஜி பதவி அளிக்கப்பட்டது. பிரதம நீதிபதி மாலிக் உம்தத் உல்முக் அரசாங்கச் செயலாளராக (தலைமைச் செயலாளர்) பொறுப்பில் அமர்த்தப்பட்டார்.

மலிக் உம்தத்உல் முக்கின் பிள்ளைகள் ஹமீத் உத்தீன், நீதிமன்ற மேற்பார்வையாளராகவும், அயிஸ் உத்தீன் போக்குவரத்துத்துறை மேற்பார்வையாளராகவும் நியமிக்கப்பட்டனர். ஜலாலுத்தீன் கில்ஜி காலத்தில் பதவியில் இருந்த சையத் அஜல், ஷெய்க்உல் இஸ்லாம் கதீப் ஆகியோர் தொடர்ந்து அதேபதவிகளை வகித்தனர்.

நஸ்ரத்கான் ஜலேஸ்ரி கொத்வாலாக (நகரப் பொருப்பாளர்) நியமிக்கப்பட்டார்.

மலிக் பக்ரூத்தீன் கூச்சி டில்லி நகர நீதிபதியாக நியமனம் செய்யப்பட்டார். அரிஸ் இ மாலிக் பதவி ஜபர்கானுக்கு அளிக்கப்பட்டது. ஜலாலுத்தீன் ஆட்சியில் அர்க்கலீகானுடைய அதிகாரியாகப் பணியாற்றிய முயித் உல்முல்க் ஆளுநராக பரண் பகுதிக்கு அனுப்பப்பட்டார். மலிக் ஜீனா தொடர்ந்து உதவி வக்கீல் தாரராகப் பதவி வகித்துவர அனுமதிக்கப்பட்டார். ஜலாலி பிரபுகள் மலிக் அமாஜீ குதிரை லாயத்தின் மேற்பார்வையாளரானார். மலிக் ஹிரன்மார் உதவி பார்பக் ஆக (தலைவர்) நியமிக்கப்பட்டார்.

அரசாங்கம் அளித்திருந்த கொடைகளும், அறக்கொடைகளும் அதிகரிக்கப்பபட்டு மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டன. அலாவுதீனுடைய அரச அவையை ஜலாலி பிரபுக்களும், அலாயிகான்களும் மலிக்குகளும் இதற்கு முன் எந்த அரசர் காலத்திலும் இருந்திராத வண்ணம் அலங்கரித்திருந்தனர்.

பழைய இராணுவத்தில் புதிதாக வீரர்களைச் சேர்த்துக் கொண்டதால் படையினர் எண்ணிக்கை உயர்ந்தது. ஒவ்வொரு படை வீரரும் ஒன்றரை மாதச் சம்பளத் தொகையை இலவசமாகப் பெற்றனர்.

வேறெந்த அரசருடைய காலத்தில் நான் காணாத வகையில் பிரபுக்களும், சாதாரண மக்களும் இந்த ஆண்டில் பலவகையான சந்தோஷங்களை அனுபவித்தனர். வயதில் மூத்தவர்கள் இந்த வகையான ஒரு மகிழ்ச்சிகரமான ஆண்டினை அவர்களது நினைவிற்கு கொண்டுவர இயலாத நிலையில் இருந்தனர் என்று தாரிக் இ பிருஸ் ஷாயி நூலை எழுதிய ஜியாவுத்தீன் பரணி (1282 – 1356), அப்போது டில்லி இருந்த நிலையை மேற்கண்டவாறு விளக்கியுள்ளார்.

கி.பி. 1206 இல் இருந்து கி.பி. 1210 வரை குத்புதீன் ஐபெக் ஆட்சி செய்தார். ஷாம்சி மரபு அல்லது முதல் இல்பாரி மரபு இல்லுத்மிஷ் (1211–1266) வரையும் இரண்டாம் இல்மாரிமரபு கியாசுத்தீன் பால்பன் (1266–1290) வரையும் ஆட்சி செய்தனர்.

அதன் பின்தான் ஜலாலுத்தீன் பிரோஸ் கில்ஜி (1290–1296) மூலம் கில்ஜி மரபு ஆட்சிக்கு வந்தது. ஏறக்குறைய 90 ஆண்டுகள் வட இந்தியாவில் துருக்கியர்கள் ஆண்டு வந்திருந்த போதும் அவர்களுடைய ஆதிக்கம் முழுமையாக நிலைநாட்டப்படவில்லை. பலபாகங்களில் அவர்களது ஆதிக்கம் செல்லுபடியாகவில்லை. அதுமட்டுமா அவர்களது ஆதிக்கத்திற்கு பலதிசைகளில் இருந்தும் ஆபத்து வரத் துவங்கியது.

லாகூருக்கு அப்பால் குழப்பநிலை நீடித்தது. கோக்கர்கள் கிளர்ச்சி, மங்கோலியர்களின் பயமுறுத்தல்கள் இருந்தன. மூல்தானில் அலாவுதீனின் பரம எதிரியான அர்க்கலீகான் டில்லியிலிருந்து தப்பிச் சென்றவர்களுக்கெல்லாம் அடைக்கலம் வழங்கினார். இராஜபுத்திர அரசுகள் பல அலாவுதீன் ஆதிக்கத்தை ஏற்றுக்கொள்ளாத நிலையில் இரஜபுதனத்திற்குத் தெற்கே வாகேள அரசு குடும்பத்தினர் குஜராத்தை ஆட்சி புரிந்து வந்தனர். உஜ்ஜயினி, சாந்தேரி, தார்போன்ற இடங்களிலும் பலத்த எதிர்ப்பு இருந்தது.

கிழக்கில் வங்காளம், பீகார் ஆகியன சுதந்திர நாடுகள் இருந்தன. அயோத்தி, காசி, கோராக்பூர் ஆகிய இடங்களில் அலாவுதீனின் ஆதிக்கம் ஏற்றுக் கொள்ளப்படாத நிலை. மீரத் முதல் பிளபித் வரை அலாவுதீனின் எதிர்ப்பாளர்கள் கரங்களில்.

டில்லி அரசைச் சூழ்ந்திருக்கின்ற ஆபத்துகளில் இருந்து அதனைக் காப்பது; மங்கோலியர் படையெடுப்பிலிருந்து பாதுகாப்பது; வடஇந்தியா முழுவதையும் ஒரே தலைமையின் கீழ் கொண்டு வருவது. இதுவே அலாவுதீன் கில்ஜியின் தலையாயப் பிரச்சினையாக இருந்தது. தனது ஆட்சிக்கு ஊறு விளைக்கக் கூடிய ஜலாலி பிரபுக்களையும், அரசரருக்கு எதிராக சதித் திட்டங்களைத் தீட்டிப் பழக்கப்பட்டிருந்த பிரபுக்களை ஒடுக்குவதையும் மைய ஆட்சிக்கு எதிரான அதிகாரிகளின் கொட்டத்தை அடக்குவதையும் கடமையெனக் கருதினார்.

தனது மனைவியின் குடும்பத்தைச் சேர்ந்தவரும் மூல்தானில் அதிகாரம் செலுத்தி வந்தவருமான அர்க்அலீகானுடன் டில்லியிலிருந்து தப்பிய ருக்னுத்தீன் இப்ராஹீமும் மூல்தானில்

இருந்தார்.

தனது நம்பிக்கைக்குரிய படைத் தலைவர்கள் உலூக்கானையும், ஜாபர்கனையும் 40000 வீரர்களுடன் 1296 நவம்பரில் அலாவுதீன் கில்ஜி (முஹர்ரம் 696 ஹிஜ்ரி) மூல்தானுக்கு அனுப்பிவைத்தார். (S.A. George Ranking, MuntakhabutTavarikh, Translation of Badaoni's History, Calcutta, 1898, Vol. I page 247)

போர் தொடங்கியது; இரண்டு மாதங்கள் கடந்தன. மூல்தானின் கொத்வால் (நகரப் பொறுப்பாளர்) அலாவுதீன் கில்ஜியின் படைகளோடு சேர்ந்து கொண்டார். அங்கிருந்த ஷெய்க் ருக்னுத்தீன், அர்க்கலீகான் சார்பில், பேச்சு வார்த்தைக்கு வந்து சமாதானம் ஏற்பட்டது.

ஜலாலுத்தீன் கில்ஜியின் பிள்ளைகளை ஷெய்க் ருக்னுத்தீன், உலூக்கானிடம் அழைத்துச் சென்றார். அங்கு இளவரசர்களுக்கு உரிய வரவேற்பு அளிக்கப்பட்டது. அவர்களுடன் இளவரசர்களும், அவர்களுடைய குடும்பத்தினரும் சென்றனர். (Kishori Saran Lal, History of the Khilji's AD 1290 - 1320 New Delhi, 1967, page 65)

டில்லிப் படைகள் தலைநகர் நோக்கித் திரும்பினர். வழியில் நஸ்ரத்கான் அரச வம்சத்தினருக்கு தண்டனைகள் அளிக்கும் பணி தன்னிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்று படைத் தலைவர்களிடம் கூறினார். ஹன்சிக்கு அருகில் உள்ள அபுஹர் என்ற இடத்தில் இந்த சந்திப்பு நிகழ்ந்தது. ஹன்சி, ஹிஸார் மாவட்டத்தில் உள்ள வட்டமாக இப்போது உள்ளது. முஸ்லிம்கள் ஆட்சியின்போது இது மிக முக்கியமான இராணுவத் தளமாக இருந்தது. அலாவுதீன் கில்ஜியின் ஆட்சிக் கால ஏராளமான கல்வெட்டுக்கள் இங்கு கண்டெடுக்கப்பட்டுள்ளது. (Epigraphia Indo – Mos,emica 1917-1918, Yahya bin Ahmad bin Abdulla, Tarrkh – i - mubarakshahi, Calcutta, 1931, page 71)

அர்க்கலீகான், இப்ராஹிம், மலிக் அகமது சாப், மலிக் அல்கூ, ஜலாலுத்தீன் கில்ஜியின் பிள்ளைகள் ஆகியோரின் கண்கள் குருடாக்கப்பட்டது. ஹன்சி கொத்வால், அர்க் கலீயையும், அவரது இருபிள்ளைகளையும், இப்ராஹிமையும் கொன்றார்.

மலிக் அகமது சாப்புமி, அல்கூவும் நஸ்ரத்கான் மாளிகையில் சிறைவைக்கப்பட்டனர். இளவரசர்களின் சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டன. ஜலாலுத்தீன் கில்ஜியின் மனைவி மலிகா இ ஜஹான் நஸ்ரத்கான் அரண்மனையில் சிறை வைக்கப்பட்டார். அவர்களுக்கு நேர்ந்த கதியைப்பற்றிய குறிப்பு ஏதும் வரலாற்று நூல்களில் காண இயலாது (கே.எஸ். லால் முற்கூறிய நூல்) அவர்கள் என்ன ஆகியிருப்பார்கள் என்று நாமே யூகித்துக் கொள்ளலாம்.

அலாவுதீன் கில்ஜியை எதிர்த்த ஜலாலுத்தீன் கில்ஜி குடும்பத்தார் அனைவரும், அலாவுதீன் கில்ஜியின் ஆட்களால் முழுமையாக அழிக்கப்பட்டனர்.

ஜலாலி பிரபுக்கள் பலர் அலாவுதீன் கில்ஜியிடம் பணம் பெற்றுக் கொண்டு அவரை ஆதரித்து வந்தனர். ஒரு எஜமானனுக்குத் தூரோகம் இழைத்த ஒருவன் மற்றொரு எஜமானனுக்கு விசுவாசமாக இருக்க முடியாது என்பதை நன்கு உணர்ந்தவர் அலாவுதீன் கில்ஜி. கி.பி. 1297இல் நஸ்ரத்கான் முல்தானின் வசீராக (முதல்வராக) நியமிக்கப்பட்டார். அவருக்கு முன் நியமிக்கப்பட்ட அப்பதவியில் அமர்த்தப்பட்ட குவாஜா கதரின் கதி என்ன வாயிற்று? வரலாற்றில் குறிப்புகள் இல்லை. ஜலாலி பிரபுக்கள் பலர் கைது செய்யப்பட்டு, பணமும் பார்வையும் பறிக்கப்பட்டனர்; அவர்களின் பொருட்கள் அழிக்கப்பட்டன. அவர்களது படை வீரர்கள் அலாயி பிரபுக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டனர்.

ஜலாலி குடும்பத்தைச் சேர்ந்த மலிக் குத்புதீன் அலவி, மலிக் நசீர் உத்தீன், மலிக் அமீர் ஜமால் கல்ஜி ஆகியோர் அலாவுதீன் கில்ஜியிடம் கை நீட்டி சல்லிக்காசு வாங்காதவர்கள். எனவே அவர்களை ஒன்றும் செய்யவில்லை. பழைய துருக்கிய பிரபுக்கள் கூட்டம் முற்றிலும் ஒடுக்கப்பட்டது. அலாவுதீனுக்கு கீழ்ப்படிந்து நடப்பதற்கென புதிய பிரபுக்கள் உருவானார்கள். கூட்டு அரசாங்கம் கலைக்கப்பட்டது. துருக்கிய இனத்தைச் சாராத உள்ளாட்சி ஊழியர்கள் அவரவர் பொறுப்பில் பணிபுரிந்தனர்.

ஒரு கோடி வெள்ளிக்காசுகள் அலாவுதீன் கில்ஜியின் கருவூலத்தில் நிரம்பியது. தனது ஆட்சியை சீர் செய்தபின்

அலாவுதீன் கில்ஜி தனது ஆட்சி எல்லையை விரிவுபடுத்த விரைந்தார். செழுமையான குஜராத் மீது படையெடுத்திட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. விவசாயம், வாணிபம் செழித்ததுடன், அரேபியா, பாரசீகம் நாடுகளுடன் குஜராத் வியாபாரத் தொடர்பும் கொண்டு இருந்தது. முகமது கஜினி படையெடுப்பிற்கான (கி.பி. 997 1030) காரணமும் அதுதான்.

குதுபுதீன் ஐபெக் காலத்தில் (1206 – 1210) இருமுறை குஜராத் மீது படையெடுப்பு நிகழ்ந்தது. குஜராத்தில், கி.பி. 1242இல் சாளுக்கிய அல்லது சோலங்கி மரபு மறைந்தது. கடைசி அரசர் இரண்டாம் பீம தேவருக்கு வாரிசு இல்லை. எனவே அவ்வரசு பாகேலா அல்லது வகேலா இராஜபுத்திரரின் கைக்குமாறியது. அன்ஹில் வாராவைத் தலைநகராகக் கொண்டு கரண் தேவ பாகேலா குஜராத்தை ஆட்சி புரிந்தார்.

ரூப சுந்தரியின் சாபம்

குஜராத்தின் மன்னன் கரண் தேவ பாகேலாவின் தலைமை அமைச்சர் மாதவர். அவரது மனைவி ரூப சுந்தரி. ரூப சுந்தரியின் அழகில் மயங்கிய அரசர் கரன் அவள் மீது காதல் கொண்டார். பிரதம அமைச்சர் மாதவர் ஊரில் இல்லாத வேளையில் அரசர் கரண் தேவ பாகேலா ரூபசுந்தரியை வலுக்கட்டாயமாக அடைய நினைத்தார். தம் கணவரிடமிருந்து தாம் பிரிக்கப்பட்டதைப் போன்று, அரசர் கரன் தேவ பாகேலாவின் மனைவியும், அவரை விட்டுப் பிரிக்கப்படுவார் என்று ரூப சுந்தரி சாபமிட்டார். இதனை அறிந்த மாதவர் அலாவுதீன் கில்ஜிக்கு தகவல் அனுப்பி படையெடுக்க அழைத்தார். அதன் மூலம் தனது மனைவிக்கு இழைத்த தீங்கிற்கு பழிவாங்க முற்பட்டார் என்று குஜராத்தி சான்றுகள் கூறுகின்றன. (A.K. Forbes, Rasmala, 1856, Edited by G.H. Rawlinson, London, 1924, Page 278) கி.பி. 1299 பிப்ரவரி 24இல் குஜராத் படையெடுப்பு நிகழ்ந்தது. நஸ்ரத்கானும் உலூக்கானும் தலைமையேற்றனர். உலூக்கான் படை சிந்துவிலிருந்து புறப்பட்டது. சித்தூருக்கு அருகில் நஸ்ரத் கான் படையுடன் சேர்ந்து கொண்டார்.

ஜலோர்

குஜராத்திற்கு நேராகச் செல்ல ஜலோர் வழியாகச் செல்லவேண்டும். அது இராஜபுத்திரர் ஆட்சியின் கீழ் இருந்தது. ஜலோர் ஆட்சியாளர் கன்கர் தேவாவிடம் தமது படை ஜலோர் வழியாகச் செல்ல அலாவுதீன் கில்ஜி அனுமதிகேட்டார். ஆனால் ஜலோர் அரசர் மறுத்தார். எனவே படைகள் சித்தூர் வழியாகச் சென்றது. அலாவுதீன் கில்ஜியின் படைகள் பனஸ் ஆற்றைக் கடந்து ரடோஸா கோட்டையைப் படைகள் கைப்பற்றின என்ற தகவலும் உண்டு.

ஜீன பிரபாசூரி தனது சந்திர பிரபா நூலில் சித்தூர் அரசர் சமர்சிங் படையெடுப்பாளர்களை வென்று மேவார் நாட்டைக் காப்பாற்றினார் என்று குறிப்பிடுகிறார். (Indian Antiquary 1897, Page 194 - 195, Gauri Shankar Ojha, Rajputana ka Itihas, 3 Volumes, Ajmer 1926, Volume II, Page 476)

ஆனால் கி.பி. 1455இல் ஜலோரைச் சேர்ந்த பத்மநாபா எழுதிய கன்ஹத்தெ விரபந்த் எனும் காவியத்தில் சமர்சிங் சுல்தானுடைய படைகளை சித்தூர் வழியாகப் போக அனுமதித்தார் என்று குறிப்பிடுகிறார். இது புகலூரில் 19ஆம் நூற்றாண்டில் கண்டெடுக்கப்பட்டது. Padmanabh, Kanhad – de - Prabandh, edited by Professor G.B. Vyas, The Rajasthani Puratattva Mandir Jaipur 1953, Hindi abridgement of the above by Dr. Dashrath bharma in Shodh Patrika, Udaipur, Vol III, part II, December 1951, page 51-72)

குஜராத்திற்குச் சென்ற நஸ்ரத்கான், உலூக் கான் படைகள் வென்றன. குஜராத் அரசர் கரன் பாகேலா தேவகிரிக்கு தப்பி ஒடினார். வழக்கம் போல போரில் பொருட்கள் கொள்ளையிடப்பட்டன. ரூப சுந்தரியின் சாபம் வேறு இருந்தது. அரசரின் மனைவி கமலா தேவி கைது செய்யப்பட்டு டில்லிக்கு அனுப்பப்பட்டார்.

முஸ்லிம் வணிகர்களிடம் கொள்ளையும் - பறிமுதலும்

குஜராத் படையெடுப்பு முடிந்து திரும்பும் வழியில் சாதி, மத வித்தியாசமின்றி காம்பே என்ற இடத்தில் முஸ்லிம் பெருவணிகர்களின் பொன்னும், மணியும், பெரும் சொத்துக்களும் நஸ்ரத் கானால் கொள்ளையிடப்பட்டன. (கே.எஸ். லால், முற்கூறிய நூல்)

குஜராத் படையெடுப்பின் போதுதான் கி.பி. 1299 இல் மாலிக்காபூர் கிடைக்கிறார். ஆயிரம் தினார்களுக்கு வாங்கப்பட்டிருந்தால் 'ஹஜார் தினார்' என்றும் அழைக்கப்பட்டார். ஆனால் பத்மாவதி படத்தில், ஜலாலுத்தீன் கில்ஜியே (இவர் மரணம் 1296) அலாவுதீன் கில்ஜியிடம் மாலிக்காபூரைப் பரிசளிப்பது போன்ற காட்சி வருகிறது. இது வரலாற்று முரணாகும்; தவறாகும் என்பதனை நினைவில் கொள்ள வேண்டுகிறேன்.

படைத்தலைவர்கள் அலப்கான், நஸ்ரத்கான், ஜபர்கான், உலூக்கான் போன்றவர்களின் திறமையினால் அலாவுதீன் கில்ஜி தன்னை மாவீரன் அலெக்சாந்தரைப் போல எண்ணிக்கொண்டு, இந்தியாவின் பல பகுதிகளைக் கைப்பற்ற திட்டமிட்டார். வங்காளம், மாளவம், சிவானா, ஜாலோர், தக்காணம், தேவகிரி, வாரங்கல், துவார சமுத்திரம் மற்றும் தென்னிந்தியப் படையெடுப்புகள் முக்கியமானவை.

அலாவுதீன் கில்ஜி மங்கோலியர்களிடமும் ராஜபுத்திரர்களிடமும் நடத்திய போர்களைப் பற்றியும் அவரது ஆட்சி முறைப் பற்றியும் பார்க்க வேண்டியது அவசியமாகிறது. முதலில் மங்கோலியர்களின் படையெடுப்பு குறித்த விஷயங்களுக்கு வருவோம்.

உலகை ஆண்ட பேரரசுகளில் பிரிட்டிஷ் பேரரசு 22 விழுக்காடு உலகப் பரப்பை (33 கோடி சதுர கி.மீ.) ஆண்டது. மங்கோலியப் பேரரசு 16 விழுக்காடு உலகப் பரப்பை (24 கோடி சதுர கி.மீ) ஆட்சி செய்தது. மங்கோலியர்கள் ஆட்சி செய்த மொத்த நிலப்பரப்பு ஏறத்தாழ ஆப்பிரிக்க கண்டத்திற்கு இணையானதாகும். பிரித்தானியப் பேரரசு தனிப்பட்ட ஒருவருக்குச் சொந்தமல்ல.

மங்கோலியப் பேரரசோ ஒரேயொரு நபரை மட்டுமே அடிநாதமாக இருந்து இயங்கியதாகும்.

சைபிரிய பாலைவனம், ரஷ்யாவின் வடபகுதி, சீனா, மத்திய கிழக்கு ஆசியா உள்ளிட்ட பகுதிகளுக்கு இடையே மங்கோலிய பகுதி இருக்கிறது. கி.பி. 1154, அல்லது 1155 க்கும் 1167க்கும் இடையில், பிறந்தவர் டெமுஜின் (இரும்பு மனிதன்). இவனைத்தான் 'அகில உலகின் பேரரசர்' என்றும் பொருள் படும் படியாக 'செங்கிஸ்கான்' என்று அழைத்தனர். மங்கோலிய மொழியில் 'முழுமையான போர்வீரன்' என்ற பொருளும் செங்கிஸ்கானுக்கு உண்டு. செங்கிஸ்கானாக மாறிய பின் எந்தவொரு போரிலும் அவன் தோற்கவில்லை (குன்றில் குமார், கொடூரன் செங்கிஸ்கான், 2014, சென்னை பக்கம் 59)

டில்லி சுல்தானியர்களின் ஆட்சியில் மங்கோலியர்கள் வடமேற்கு எல்லையை அடிக்கடி தாக்கினார்கள். பலம் பொருந்திய அரசரான செங்கிஸ்கான் பனிமலை புரண்டு வருவது போன்று புறப்பட்டு மத்திய ஆசியாவிற்கு வந்தான். கோராசாம் பேரரசு அவனை எதிர்க்க இயலாது அழிந்தது. ஜலாலுத்தீன் மன்க்பர்னி ஆப்கானிஸ்தானத்திற்கு தப்பி ஓடினான்.

செங்கிஸ்கானின் படையெடுப்பு இந்திய அரசியலில் கொந்தளிப்பானது. பஞ்சாபும், சிந்து சாகர் தோவாப்பின் வடபகுதியும் போர் அரங்கமாக மாற்றப்பட்டது. வட இந்தியாவின் வழியாக இமயமலையைக் கடந்து சீனாவிற்குச் செல்லும் கஷ்ட நஷ்டங்களை அறிந்ததாலும், பரம்பரைப் பழக்கங்களினாலும், முயற்சியைக் கைவிட்டனர். சிந்து சமவெளியின் வடக்குப் பாகத்தில் மங்கோலியர்களின் தாக்குதல் ஓயவில்லை. செங்கிஸ்கான் நாடு திரும்பினார். 1227இல் மறைந்தார். (Vassili-yan, Jenghzkhan, Moscow, 1898, Page 342)

கி.பி. 1246இல் பால்பன் மங்கோலியர்களை எதிர்த்து சிந்துவரை சென்றார். பலனளிக்கவில்லை, 1247இல் லாகூர் மங்கோலியர் வசமானது. பிறகு 1266 வரை மங்கோலியர்களுக்கும் டில்லி சுல்தான்களுக்குமிடையே போர் ஏதும் நடைபெறவில்லை. மங்கோலியர்கள் கைப்பற்றிய இந்தியப்

பகுதிகளில் டில்லி சுல்தான்களின் தலைமீடு இல்லை. ஆயினும் அடிக்கடி இந்தியாவின் மீது படையெடுத்து வந்து வடமேற்கு எல்லைப்பகுதியில் வாழ்ந்த மக்களுக்கு பயத்தை தொடர்ந்து தந்து கொண்டே இருந்தனர் மங்கோலியர்கள்.

1285இல் டில்லி சுல்தானியத்தை மங்கோலியர்கள் மீண்டும் தாக்கினார்கள். அலாவுதீன் கில்ஜியின் ஆட்சிக்கு முன் மங்கோலியர்கள் பலமுறை படையெடுத்து வந்தனர். ஆனால் அக்காலத்தில் அவர்கள் இந்தியாவின் பொருட் செல்வத்தைச் சூறையாடுவதையே தம் முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தனர். அலாவுதீன் கில்ஜி காலத்தில் மங்கோலியர்களின் நோக்கம் முற்றிலும் மாறுபட்டிருந்தது. டில்லியைக் கைப்பற்றி அங்கு தமது ஆட்சியை நிறுவ வேண்டும் என்பதே அவர்களது நோக்கமாக இருந்தது.

மங்கோலியர்களுக்கு எதிராக உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வேண்டிய திறமையையும் மன உறுதியையும் பெற்றிருந்த அலாவுதீன் கில்ஜிக்கு மங்கோலியர்களை எளிதில் விரட்டியடித்தல் கடினமான காரியமாகத் தோன்றவில்லை. இந்தியாவை மங்கோலியர் தாக்குதலிலிருந்து காப்பாற்றிய பெருமை அலாவுதீன் கில்ஜியையே சாரும் என்பார் டி.ஆர். இராமச்சந்திரன் (முற்கூறியநூல்)

அலாவுதீன் கில்ஜி அரியணை ஏறியதும் மங்கோலியர்களின் படையெடுப்புகளின் வன்மையைத் தாங்கிக் கொள்ள வேண்டியதாயிற்று. 1297-1298 இல் முதல் போர் நடந்தது. டிரான்ஸ் ஆக்ஸியானாவின் அரசரான தாவாகான், காதர் என்பவரது தலைமையில் ஒரு இலட்சம் திறமையான வீரர்களைப் போருக்கு அனுப்பி வைத்தான். பயங்கரப்போர் நடைபெற்றது. அலாவுதீன் கில்ஜியின் படைக்கு உலூக்கானும், ஜாபர்கானும் தலைமை ஏற்றனர். 20,000 மங்கோலியர்கள் கொல்லப்பட்டனர். (Muhammad Habib, Campaigns of Alauddin Khilji, Translation of Khazainul Futuh, Bombay, 1933, Page 24) மங்கோலியர்கள் பலர் சிறை பிடிக்கப்பட்டு பின்னர் கொல்லப்பட்டனர்.

இந்த வெற்றி அலாவுதீன் கில்ஜியின் ஆட்சி நிலைத்திருக்கவும்,

அவருடைய பெருமையை உயர்த்தியதும் என்றால் அது மிகையாகாது என்பார் கே.எஸ். லால்.

மங்கோலியர்கள் முயற்சியைக் கைவிடவில்லை. வடமேற்குப் பகுதியைத் தாக்கினார்கள். சல்தீ மற்றும் அவரது சகோதரர்கள் களம் கண்டனர். அலாவுதீன் கில்ஜி சார்பில் ஜபர்கான் போர்க்களம் சென்று சிவிஸ்தானில் பெரு வெற்றி கொண்டார். ஜபர்கான் மீது பின்னர் பொறாமைகள் எழவும் இது காரணமாக அமைந்தது.

1299 இறுதியில் தாவாகான் இரண்டு லட்சம் பேர் கொண்ட குதிரைப் படையை தனது மகன் குத்லூ குவாஜா தலைமையில் அனுப்பி வைத்தார். சிவிஸ்தானத்தில் மங்கோலியருக்கு ஏற்பட்ட அவமானத்தைத் துடைத்திட, பழித்தீர்த்திட இப்படையெடுப்பு நிகழ்ந்தது.

மங்கோலியர்கள் கொள்ளையடிக்கவில்லை, வழியிலுள்ள கோட்டைகளைக் கைப்பற்றவுமில்லை. மூல்தான், சமனா தலைவர்கள் போரிட அழைத்தும் போரிடவும் இல்லை. குத்லூ குவாஜாவை, ஜபர்கான் போருக்கு அழைத்த போதும் போருக்கு ஆயத்தமாகவில்லை. குத்லூ குவாஜா டில்லி நோக்கி விரைந்தார். டில்லிக்கு ஆறு மைல் தூரத்தில் கிலீ எனுமிடத்தில் மங்கோலியர்கள் பாசறையை நிறுவினர்.

மங்கோலியர்கள் சிந்து நதியைக் கடந்து வந்து கொண்டிருக்கின்றனர் என்ற செய்தி பீதியைக் கிளப்பியது. டில்லியைச் சுற்றியுள்ள மக்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு டில்லிக்கு வந்தனர். தெருக்களிலும், அங்காடிகளிலும் பள்ளிவாசல்களிலும் மக்கள் கூட்டம் அலைமோதியது. டில்லிக்கு வரும் வணிகப் பொருட்களை மங்கோலியர்கள் கைப்பற்றலாயினர். இதனால் பொருட்கள் பற்றாக்குறையும் அத்தோடு விலையும் ஏறியது என்று ஜியாவுதீன் பரணி கூறுகிறார்.

மங்கோலியர்கள் சிந்து நதியைக் கடந்து விட்டார்கள் என்ற செய்தி அலாவுதீன் கில்ஜியின் காதுகளுக்கு எட்டியது. போருக்கு போதிய முன் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை. எனினும் தாமதியாமல் மாகாண ஆளுநர்களுக்குப் போர் உதவிகளைப்

பற்றிய கட்டளைகளை அனுப்பினார். அலாவுதீன் தனது சிவப்பு அரண்மனையை விட்டு வெளியேறி சீரியில் தமது பாசறையை அமைத்தார். டில்லி கொத்வால் அலாஉல் முல்க், அவசரப் பட்டு எந்த நடவடிக்கையும் அலாவுதீன் கில்ஜி எடுத்துவிடக் கூடாது என்று அறிவுரை கூறினார்.

''மங்கோலியர்களுடன் போரிட்டு இந்துஸ்தானத்து வீரர்களுக்கு போதிய அனுபவம் இல்லை. மங்கோலியர்கள் கொண்டு வந்த உணவுப் பொருட்கள் தீரும் வரை போரிடாமல் இருப்போம்'' என்றார் அலா உல் முல்க். ஆனால் அலாவுதீன் கில்ஜி முக்கியமான படை அதிகாரிகளை எல்லாம் அழைத்தார். அலா உல் முல்க் சொல்லிய ஆலோசனையை அவர்கள் முன் அப்படியே சொன்னார்.

தொடர்ந்து அலாவுதீன் கில்ஜி முழங்கினார்.

''ஓர் ஒட்டகத்தை திருடிவிட்டு யாருக்கும் தெரியாமல் அதை மறைத்து எடுத்துக் கொண்டு போவதென்பது இயலாது. அதுபோல டில்லிப் பேரரசை ஆட்சி புரிய வேண்டும். ஆனால் அதனால் ஏற்படும் ஆபத்துகளை சமாளிக்க இயலாதென்பது அறிவீனம். மங்கோலியர்களைப் பகைவர்களாக எண்ண வேண்டும். ஆனால் அவர்களோடு போரிடுவது மட்டும் கூடாது என்பது அர்த்தமற்றதாகும். அன்னியப்படையெடுப்பாளர்களுடன் போரிட அஞ்சினால் டில்லியின் மேலாட்சியை எங்ஙனம் நிலைநாட்ட இயலும்? இரண்டாயிரம் கரோக்கள் கடந்து டில்லிக்கு அருகே வருகை தந்து போருக்கு அழைத்திடும் மங்கோலியர்களுடன் போரிடாமல் இருந்தால் பகைவர்கள் நம்மைப்பற்றி என்ன நினைப்பார்கள்?

இந்த நேரத்தில் நான் என் பலவீனத்தைக் காட்டி ஒட்டகத்திற்குப் பின்னால் ஒளிந்து கொண்டால் நாட்டு மக்களும், போர் வீரர்களும் நமக்கு காட்டி வரும் எல்லா விதமான மரியாதையையும் குறைத்து விட மாட்டார்களா? என்னைக் கண்டு வருங்கால மக்கள் எள்ளி நகையாட மாட்டார்களா? போரிடாமல் ஒளிந்து கொண்டால் நான் எந்த முகத்தோடு அந்தப்புரம் செல்ல முடியும்?

என்ன நேரினும், நாளை நான் 'சீரி'யிலிருந்து 'கீலி'க்குப்

போகப் போகிறேன். அங்கு மங்கோலிய குத்லூ குவாஜாவுடன் போர் செய்யப் போகிறேன். இறைவன் யாருக்கு வெற்றி அளிக்கப் போகிறான் என்பதைப் பார்த்துவிடுவோம்; ஓ! அலா உல் முல்க்கே! உமக்கு நான் உமது உடல் பருத்து இருப்பதால் கொத்வால் (நகரப் பொறுப்பாளர்) பதவியை அளிக்கிறேன்.

அத்துடன் என்னுடைய சொத்துகளையும் அந்தப் புரத்தையும், நகரத்தையும் பாதுகாக்கும் பணியினையும் உமக்கு அளிக்கின்றேன். எங்கள் இருவரில் யார் வெற்றி பெற்றாலும், வெற்றி பெற்றவரை வணங்கி நகர வாயில்களின் சாவிகளை முத்தமிட்டு அவரிடம் கொடுத்து விடும்; வெற்றி பெற்றவருக்கு கீழ்ப்படிந்து விசுவாசத்துடன் நடந்து கொள்'' என்று அலாவுதீன் கில்ஜி வீர உரை நிகழ்த்தினார்.

(Ziyauddin Barani, Fatwa-i-Jahandari, Translation by Afsar Begum and Muhammad Habib under the title 'political theory of the Sultanate of Delhi', Kitabmahal, Delhi, (nodate) pages 76&77) and (Ziyauddin Barani, Tarikh-i- firoz Shahi, page 258)

மங்கோலியர் படையெடுப்பு

அலாவுதீன் கில்ஜி தனது படைகளுடன் டில்லிக்கு வடக்கேயுள்ள ‘கீலி’க்குச் சென்று பாசறையை நிறுவினார். எதிரில் மங்கோலிய குத்லூகுவாஜின் படைகள் நின்று கொண்டிருந்தன. வழக்கம்போல் அலாவுதீன் கில்ஜி தனது படைகளை மூன்று பிரிவுகளாகப் பிரித்தார். வலது அணியில் ஜபர்கான், இந்து அரசர்கள் மற்றும் தேர்ச்சி பெற்ற வீரர்கள் இருந்தனர். அலாவுதீன் கில்ஜியின் படையில் இந்து அரசர்கள் இருந்தனர். அவனுக்கு ஆதரவாகப் போரிட்டனர் என்பது வரலாற்று உண்மை.

இடது அணிக்கு உலூக்கான் தலைமை தாங்கினார். போரில் ஏதாவது ஒரு அணி பாதிக்கப்படுகின்றபோது இந்தப் படையினர் வந்து உதவ வேண்டும் என்பது அலாவுதீன் கில்ஜியின் கட்டளை. அலாவுதீன் கில்ஜியும் நஸ்ரத் கானும் 12,000 வீரர்களுடன் மத்திய பகுதியில் களத்தில் நின்றனர் என்று கூறிய பெரிஷ்டா, அலாவுதீன் படையில் 3,00,000 குதிரைகளும் 2,700 யானைகளும் இருந்தது என்கிறார்.

(John Briggs, MRAS, History of the Rise of the Mohammedan Power in India Till the year A.D. 1162, Translated from original Persian of Mohamed Kasim Ferishta, Adam Publishers, New Delhi, Vol I, 2006, page 186).

ஒவ்வொரு அணியின் முன்னால் யானைகள் நிறுத்தப்பட்டிருந்தன. போர் அணிவகுப்பை பார்வையிட்ட அலாவுதீன் கில்ஜி, தமது கட்டளையின்றி எவரும் அசையக் கூடாது என்று உத்தரவிட்டிருந்தார். டில்லிப் பேரரசின் தலைவிதியை நிர்ணயிக்கும் போர் என்பதால் அவசியமேற்படும் போது மட்டுமே போரைத் துவக்க வேண்டும் என்று எண்ணியிருந்தார் அலாவுதீன் கில்ஜி. மங்கோலியர்களும் மறுபக்கத்தில் சளைக்கவில்லை. அவர்களும் தமது படைகளை மூன்று பிரிவுகளாகப் பிரித்தார்கள்.

வலப்புறத்தில் தமர் புகாவும் இடப்புறத்தில் ஹஜ்லக்கும் மத்தியில் குத்லூகுவாஜாவும் இருந்தனர். தர்கீ எனும் மங்கோலியத் தலைவர் மறைவான இடத்தில் இருந்து கொண்டு சமயம் வாய்க்கின்றபோது அலாவுதீன் கில்ஜியின் படைகளைத் தாக்கத் திட்டமிடப்பட்டது. இந்தப் போர் குறித்து இசாமி விரிவாகவே எழுதியுள்ளார். (Abdulla Malik Isami, பெர்சிய மொழியில் எழுதியது Futuhas Salatin, Agra, 1938, Page 246 - 260)

அலாவுதீன் அணியில் ஜபர்கான் வலது அணியில் இருந்தார். இவருக்குப் போரிடுவதில் மிகுந்த வெறி; அலாவுதீன் கில்ஜியின் அனுமதியைப் பெறாமலேயே மங்கோலியரைத் தாக்கத் துவங்கினார். அவருக்கு எதிராக நின்ற ஹஜ்லக் தலைமையிலான மங்கோலியப் படைகள் பின் வாங்கி ஓடியது. டில்லிப் படைகள் அவர்களைத் தொடர்ந்து விரட்டியது.

மங்கோலியத் தலைவர் தமர் புகாவும் அவருடைய வீரர்களும் ஓடிக் கொண்டே பின்னால் தொடர்ந்து வரும் ஜபர்கான் அணி படைகள் மீது அம்பு மாரி பொழிந்தனர். மங்கோலியருக்கு இணை மங்கோலியர்களே.

மேற்கத்திய ஷியாவின் ஆயுதம் தாங்கிய எண்ணற்ற குதிரைப் படையினரை, மகத்தான ஜின்னின் பத்து இலட்சம்

படையினரை, தெற்கத்திய சாங்கின் பத்து இலட்சம் கப்பல் படை மற்றும் குதிரைப்படையினரை, ரஷ்ய கிப்சாக்குகளை, ரோமின் டியூட்டன்களை சர்வ நாசமாக்கியவர்கள் மங்கோலியர்கள். மத்திய ஆசியா, ஹங்கேரி, போலந்து, முழு ரஷ்யா, பெர்ஷியா, ஈரான், சீனா, கிழக்கு ரோமப் பேரரசை கைப்பற்றியவர்கள் மங்கோலியர்கள். (ஜியாங் ரோஸ், ஓநாய் குலச்சின்னம், சி. மோகன் மொழிபெயர்ப்பு, சென்னை 2012, பக்கம் 143)

இவ்வளவு தூரம் போரில் கீர்த்தி வாய்ந்த மங்கோலியப் படையினர் மீது அலாவுதீன் கில்ஜியின் மத்திய அணி தாக்குதலைத் தொடுத்தது. ஏராளமான மங்கோலியர்களைக் கொன்றது; போரில் கொல்லப்பட்ட ஒவ்வொரு மங்கோலியத் தலைக்கும் ஒரு பொற்காசை தமது படை வீரர்களுக்கு கில்ஜி வழங்கியதாக அமீர் குஸ்ரூ தெரிவித்துள்ளார். (The Ashiqa or Khidar K-o- Dewalrani, India office library, 1215 A.D. (715 Hijiri) Deval Rani, Aligarh, 1917, page 61) மங்கோலியர்களை வெற்றி கொண்டதன் விளைவாக முன்பு மங்கோலியர்களால் சிறைபிடிக்கப்பட்டிருந்த இந்தியர்களை விடுதலை செய்தார் அலாவுதீன் கில்ஜி. (கே.எஸ். லால், முற்கூறிய ஆங்கில நூல், பக்கம் 137)

ஜபர்கானுடைய தாக்குதலை சமாளித்து ஹஜ்லாக் முன்னேறி தாக்க முற்பட்டார். தனது அனுமதியின்றிப் போரைத் துவங்கியதால் ஜபர்கான் மீது அலாவுதீன் கில்ஜி ஏற்கெனவே கோபத்தில் இருந்தார். எனவே தமது படைகளை அவருக்கு அனுப்பவில்லை. ஜபர்கான் மீது பொறாமை கொண்ட உலூக்கானும் படையை அனுப்பவில்லை.

மங்கோலியர் தாக்குதல் வலுத்தது. ஜபர்கான் எதிர்த்துப் போராடினார். மங்கோலிய ஹஜ்லாக் பின் வாங்கி ஓடினார். ஜபர்கான் பகைவர்களை விடாது விரட்டினார். மங்கோலியர் பலர் மரணத்தைத் தழுவினர். மங்கோலிய தர்கீ தமது 10,000 படைவீரர்களுடன் மறைந்து நின்று கொண்டு ஜபர்கானை முன்னேறிச் செல்ல வழிவிட்டார். பதினெட்டு கரோக்கள் வரை பகைவரை பின்தொடர்ந்து சென்ற ஜபர்கான் திரும்பிப் பார்த்த போது 1000 குதிரை வீரர்களே தனக்குப் பின்னால் வருகின்றனர்

என்று அறிந்தார். தொடர்ந்து செல்லாமல் திரும்பினார். இதுதான் சமயம் என்று உணர்ந்த மங்கோலிய தர்கீ, ஜபர்கான் மீது தாக்குதலைத் தொடுத்தார்.

அலாவுதீன் உத்தரவு வராமல் தாம் போரைத் தொடுத்ததால், அவர் தம் மீது கோபமாக உள்ளார், அதனால்தான் அவரது படைகளை அனுப்பாமல் நிறுத்திவைத்து வேடிக்கை பார்க்கிறார் என்று எண்ணிக் கொண்டார் ஜபர்கான். போர் செய்வதைத் தவிர வேறு வழியில்லை. வீரத்துடன் போரிட்டார். 5000 மங்கோலியர்களைக் கொன்றார். அவரின் பக்கமிருந்த 800 பேர்களும் மடிந்தனர். ஜபர்கானின் குதிரை இறந்தது; இருப்பினும் போர் தொடர்ந்தது.

மங்கோலியத் தலைவர் குத்லு குவாஜா, ஜபர்கானிடம் தூது அனுப்பினான். தனது அணியில் சேர்ந்து கொண்டால் அலாவுதீன் கில்ஜி அளிக்கும் மரியாதையை விட உயர்ந்த அந்தஸ்தை தனது தந்தையிடம் பெற்றுத் தருவதாகக் கூறினார். அந்த வேளையில் கூட மாவீரன் ஜபர்கான் அதனை நிராகரித்தார். ஜபர்கானை மங்கோலியர்கள் உயிரோடு பிடிக்க முயன்றனர். எல்லா பக்கங்களும் மங்கோலியர் சூழ ஜபர்கான் படையில் ஒருவர் கூட மிஞ்சவில்லை. ஜபர்கானும் வீர மரணமடைந்தார்.

ஜபர்கானுடைய வீரம் மங்கோலியரை நிலை குலையச் செய்தது. ஜபர் கான் மங்கோலியர் உள்ளத்தில் ஏற்படுத்திய அச்சம் பல ஆண்டுகள் நீடித்தது. மங்கோலியர்கள் தங்களது கால்நடைகள் தண்ணீர் குடிக்க மறுத்திடும் வேளையில், 'நீங்கள் ஜபர்கானைப் பார்த்து விட்டீர்களா? அதனால்தான் நீர் அருந்த மறுக்கிறீர்களா?' என்று கேலியாக கூறுவதை வரலாற்றில் காணலாம். (பரணி, முற்கூறிய நூல் பக்கம் 263)

ஜபர்கான் வீழ்ந்ததற்குப் பின்னர், அலாவுதீன் கில்ஜியின் படைத்தலைவர்கள், "டில்லி கோட்டைச் சுவர்களுக்குப் பின்னிருந்து கொண்டு மங்கோலியரைத் தாக்குவோம்; எதிர் கொள்வோம்" என்ற யோசனையை அலாவுதீன் கில்ஜியிடம் சொன்னார்கள். ஆனால் அதனை ஏற்க மறுத்துவிட்டார் அலாவுதீன் கில்ஜி.

“எனது ஆணையை மீறி போரிட்ட படையின் ஒரு பகுதி (ஜபர்கான்) தோற்றுவிட்ட காரணத்தால் நாம் பின்னோக்கி செல்ல வேண்டும் என்பது சரியல்ல; நான் இப்போது இருக்கும் போர்க்கள இடத்திலிருந்து செல்ல நேர்ந்தால் அது முன்னேறிச் செல்வதற்காகவே அன்றி பின்டைவதற்காக இராது” என்று அலாவுதீன் கில்ஜி கூறினார்.

அலாவுதீன் கில்ஜியின் படைகளும் மங்கோலியப் படைகளும் நேருக்கு நேர் நின்று கொண்டிருந்தன. ஆனால் போரிடவில்லை. மூன்று நாட்கள் இதே நிலைமை நீடித்தது. மங்கோலியப் படைகள் தானாகவே ஊருக்குத் திரும்பினர். அவர்களைத் தொடர்ந்து சென்று விரட்டிடவில்லை. மாறாக அவர்கள் பத்திரமாக ஊர் போய்ச் சேரட்டும் என்று அமைதியாக இருந்தார் அலாவுதீன் கில்ஜி.

கி.பி. 1302ல் அலாவுதீன் கில்ஜி வங்காளம் வழியாக வாரங்கல்லுக்கு படையை அனுப்பினார். 1303 பிப்ரவரியில் சித்தூர் நோக்கி படையெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. அதனால் கில்ஜியின் படைகள் எல்லைப்புறத்திலிருந்து கூட திரும்ப அழைக்கப்பட்டிருந்தன. மங்கோலியர்கள் இதனை அறிந்தனர். பரணியின் கூற்றுப்படி, ஒரு இலட்சத்து இருபதாயிரம் குதிரை வீரர்களுடன் தர்கீ என்ற மங்கோலியத் தளபதி தலைமையில் படை விரைந்தது. அப்போது இரண்டு இலட்சம் குதிரைவீரர்கள் வந்தார்கள் என்று அமீர் குஸ்ரூ சொல்கிறார். 1,20,000 பேர்களுடன் மங்கோலியப் படை வந்தது என்று பெரிஷ்டா கூறுகிறார். எப்படியோ பெரும்படை டில்லியைக் கைப்பற்ற விரைந்து வந்தது.

வழியிலிருந்த கோட்டைகள், நகரங்களைத் தாக்காமல் மங்கோலியப்படை முன்னேறியது. ஆச்சரியப் படத்தக்க வகையில், அதிசயத் தக்க வகையில் அலாவுதீன் கில்ஜியும் மங்கோலியப் படைகள் டில்லிக்குள் வருவதற்குள் வந்து சேர்ந்தார். தலைநகரத்தில் இருந்த படைகளைத் திரட்டினார். வலுவாக்கிடும் முயற்சி தொடர்ந்தது. கிழக்கே யமுனை ஆறும் தெற்கே அடர்ந்த காடுகளும், தென்மேற்கே பழைய கோட்டைகளும் தக்க

பாதுகாப்பாக அமைந்திருந்தது.

மங்கோலியர் வடக்குப் பக்கத்தில் தங்களது பாசறையை அமைத்திருந்தனர். அலாவுதீன் கில்ஜியும் வடக்குப் பக்கத்தில் தமது பாசறையை அமைத்தார். சுற்றிலும் மரப்பலகைகளால் ஆன சுவர்களை எழுப்பினர். பாசறையைச் சுற்றி குழிகளை வெட்டச் செய்தார்; ஒவ்வொரு குழியின் பின்னால் ஐந்து பெரிய யானைகள், ஒரு பிரிவு குதிரை வீரர்கள், காவலர்படை நிறுத்தப்பட்டது.

தனக்கு மற்ற இடங்களிலிருந்து மேலும் உதவிகள் வரும் வரை, போரைத் தாமதித்தால் நல்லது என்று எண்ணிய அலாவுதீன் கில்ஜி, மங்கோலியர்களுடன் நேருக்கு நேர் போரிடுவதை ஒத்திப் போட்டு வந்தார். மங்கோலியர்களோ அலாவுதீன் கில்ஜி அமைத்திருந்த பாதுகாப்பு அரண்களில் ஏதாவது ஒன்றின் வழியாக ஊடுருவிச் சென்று தாக்கத் திட்டமிட்டனர். எனவே அலாவுதீன் கில்ஜி போரிடத் தயாராகவே இருக்க வேண்டியதாயிற்று.

கில்ஜி எதிர்பார்த்த படை உதவி வரவில்லை; வங்காளம் சென்ற மலிக்கும் ஜுஜுவும் திரும்பி வந்தனர். அவர்களுடன் சென்ற படை முழுவதும் அழிந்துவிட்டது. மூல்தான், சமானா, திபால்பூர் இடங்களிலிருந்து வந்த படைகள் டில்லிக்கு வந்து சேரவிடாமல் மங்கோலியர் தடுத்தனர். கிழக்கு மாகாணங்களில் இருந்தும் படைகள் டில்லிக்கு வருவதை வெற்றிகரமாக மங்கோலியர்கள் தடுத்து நிறுத்தினர். டில்லியைச் சுற்றியுள்ள பகுதிகளில் அவ்வப்போது சிறு தாக்குதல்களை நடத்தி உணவுப் பொருட்கள் டில்லிக்குள் கொண்டு செல்லப்படுவதையும் தடுத்தனர். சிலவேளைகளில் டில்லியின் ஓரப்பகுதிகளில் தாக்கி உணவுக் களஞ்சியங்களை சிறிய அளவில் கொள்ளையிட்டனர். அலாவுதீன் கில்ஜி இத்தனை இன்னல்களையும் இதயத்தில் தாங்கி நின்றார். அவர் அமைத்த அகழி சூழ்ந்த கோட்டை அல்லது வலிய காப்பிடம் பற்றி விரிவாக அறிய Journal of the Asiatic Society of Bengal பக்கங்கள் 199–218 இல் காணலாம்.

“அலாவுதீன் கில்ஜி மனம் தளர்வுறாமலும், தம் நிலையினின்றும் சிறிதும் அசையாமல் இருந்தார்” என்று சரித்திரப் பேராசிரியர்

டி.ஆர். இராமச்சந்திரம் தனது டில்லி சுல்தானியத்தின் வரலாறு 1206 முதல் 1320 வரை என்ற நூலில் போற்றியுள்ளார்.

டில்லியைக் கைப்பற்றும் நோக்கில் வந்த மங்கோலியத் தலைவன் தர்கீ, இரண்டு மாதங்கள் காத்திருந்தான். அலாவுதீன் அசையாமல் இருந்தார். இறுதியில் மங்கோலியப் படை பின்வாங்கி தாய்நாடு திரும்பியது. பலரை நம்ப முடியாமல், வியப்பிலும் அதிசயத்திலும் ஆழ்த்தியது இச்செய்தி. இச்சம்பவத்தை வரலாற்றில் நிகழ்த்தியவன் அதிசய அரசர் அலாவுதீன் கில்ஜி அல்லவா!

'தர்கீ' தாயகம் திரும்பியதும் அலாவுதீன் கில்ஜி அடிக்கடி ஏற்படுகின்ற மங்கோலியத் தாக்குதல்களை எதிர் கொள்ள தக்க பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டார். தனது முழுக்கவனத்தையும் அதற்கு செலவிட்டார். தலைமை இடத்தை 'சிரீ' க்கு மாற்றினார். தங்குவதற்கு அங்கு கோட்டையையும் அரண்மனையையும் கட்டி முடித்தார். டில்லி நகரத்திற்குள் பகைவர்கள் புகுந்திடாதவாறு அதைச் சுற்றிலும் பெரிய மதிற்சுவரை எழுப்பினார். பழைய கோட்டைகளை புதுப்பித்தார். மங்கோலியர்கள் டில்லிக்குள் வருவதற்கு தேர்ந்தெடுத்த பாதைகளில் வழி நெடுக கோட்டைகளை அமைத்தார். மங்கோலியர்களை எல்லைகளிலேயே தடுத்து நிறுத்திட தகுந்த தளபதிகளை நியமித்தார்.

டில்லிப் படைகளின் எண்ணிக்கையினை உயர்த்தினார். படைகளின் அமைப்பு முறையை மாற்றினார். போர் இயந்திரங்கள், போர்க் கருவிகளை உற்பத்தி செய்திட புதிய தொழிற் கூடங்கள் அமைக்கப்பட்டன. அரசாங்கத்தின் சார்பில் அதற்கென பொறியாளர்கள் பணியில் அமர்த்தப்பட்டனர். இவைகள் தொடரும் மங்கோலியப் படையெடுப்பை எதிர்கொள்ள துணை நின்றன. கி.பி. 1304 இல் அரிக்போக் தன் படைகள் இந்தியாவிற்கு அனுப்பினார். அலாவுதீன் கில்ஜி மங்கோலியர்களது முயற்சிகளை முறியடித்தார். (செங்கிஸ்கான், முகில், பக்கம் 181)

1305இல் மங்கோலிய அலீபேக், தர்தாக், தர்கீ ஆகியோர் 50,000 படையினருடன் இந்தியா நோக்கி விரைந்தனர். சிந்து நதிக்கு வடமேற்குப் பகுதியிலுள்ள மலைப் பிரதேசங்களைக்

கடந்து, சிந்துவையும் கடந்து டில்லியை நோக்கி வேகமாக முன்னேறி, தோவாப் பகுதியை அடைந்தனர். அங்கே தர்கீ அம்புத் தாக்குதலில் பலியானார். அலாவுதீன் கில்ஜி 30 முதல் 40 ஆயிரம் பேர்கள் கொண்ட பெரும் படையை மலிக் நாயக் தலைமையில் அனுப்பினார்.

அலாவுதீன் கில்ஜியின் படைத்தலைவர் மலிக் நாயக் ஓர் இந்து என்று அமீர் குஸ்ரூ குறிப்பிட்டுள்ளார். மலிக் நாயக் குதிரைப் படைத்தலைவர் ஆவார். 1305 டிசம்பர் 30இல் நடைபெற்ற போரில் அம்ரோஹா என்ற இடத்தில் இருபடைகளும் மோதின. மங்கோலியர் பலர் கொல்லப்பட்டனர். 20,000 குதிரைகள் மங்கோலியரிடமிருந்து கைப்பற்றப்பட்டன. அலி பெக், தர்தத் சிறைப்பட்டனர். டில்லிப் படைகள் வெற்றியைக் கேள்விப்பட்ட அலாவுதீன் கில்ஜி மகிழ்ச்சிக்கடலில் மூழ்கினார். தர்பார் ஆரம்பமாயிற்று.அலாவுதீன் கில்ஜியின் அரியாசனம் முதல் இந்தர்பத் வரையில் வெற்றிவாகை சூடிய படையினர் இரண்டு வரிசைகளில் நிறுத்தப்பட்டனர்.

சிறைபிடிக்கப்பட்ட மங்கோலியர்களைக் காணவும் அவர்களுக்கு அளிக்கப்படுகின்ற தண்டனைகளைக் காணவும் மக்கள் திரளாகக் கூடியிருந்தனர். மக்கள் கூட்டத்தின் வழியாக மங்கோலியர்கள் அலாவுதீன் கில்ஜியின் முன் கொண்டு வந்து நிறுத்தப்பட்டனர். 8000 மங்கோலியர்களின் தலைகள் அறுக்கப்பட்டன. மங்கோலியத் தலைவர்கள் யானைகளின் கால்களில் இட்டு கொல்லப்பட்டனர்.

அலீ பேக், தர்தாக் இருவரையும் அலாவுதீன் கில்ஜி மன்னித்தார்; அவர்களுக்கு தேவையானவற்றையெல்லாம் வழங்கினார். ஒருநாள் தர்தாக் குடிபோதையில் டில்லி அரசர் பதவி, போர்க் கருவிகள், படைகள் ஆகியவற்றைப் பற்றி விசாரித்தார். எனவே கோபமுற்ற அலாவுதீன் கில்ஜி அவரைக் கொல்ல உத்தரவிட்டார். அதுபோலவே அலீ பேக்கிற்கும் நடந்தது என்று இசாமி கூறுகிறார். இரு மங்கோலியப் படைத் தலைவர்களையும் முதலில் மன்னித்த அலாவுதீன் கில்ஜி, பின்னர் அவர்களது செயல்களால் அவர்களைக் கொன்றார் என்பதை அறிய முடிகிறது. அலி பேக் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்தார் என்றும் இருந்தும் அவர்

கொல்லப்பட்டார் என்றும் நஸஃப் தெரிவிக்கிறார்.

Abudulla Nassaf, Taiziyatul Amsar va Tajriyatul Asar, also known as Tarikh-i-Nassaf, 1327, Bombay, Text Persian, Pages 526 & 527)

கி.பி. 1306இல் தவாகான், தனது புதல்வர் குபக் தலைமையில் மங்கோலியப் படையினை அனுப்பி வைத்தார். சிந்து ஆற்றைக் கடந்து ரவி நதியை நோக்கி விரைந்த மங்கோலியப் படை வழியெங்கும் நகரங்களை, கிராமங்களைத் தீக்கிரையாக்கிக் கொண்டே வந்தது. பலர் கொல்லப்பட்டனர்.

இக்பால் மண்ட் தலைமையில் மங்கோலியப் படையின் மற்றொரு பிரிவு நாகோருக்கு வந்து சேர்ந்தது. நாசவேலைகளில் ஈடுபட்டது. மலிக் நாயீப் கபூர் தலைமையில் அலாவுதீன் கில்ஜி தனது படைகளை மங்கோலியர்களை எதிர்த்துப் போரிட அனுப்பி வைத்தார். அவரை வானளாவப் புகழ்ந்து போருக்கு அனுப்பினார் அலாவுதீன் கில்ஜி. தீபால்பூரின் ஆளுநராக இருந்த மாலிக் துக்ளக் என்ற அனுபவமிக்க படைத் தலைவரும் உடன் அனுப்பப்பட்டார்.

அலாவுதீன் கில்ஜி தனது படைவீரர்களை உற்சாகப்படுத்த ஒவ்வொருவருக்கும் ஓராண்டு சம்பளம் கூடுதலாக அளித்தார். மங்கோலியர்களை நெருங்கும் வரை அலாவுதீன் கில்ஜியின் படை இரவு, பகல் எனப் பாராமல் விரைந்தது. போர் தொடர்ந்தது; முதலில் கில்ஜியின் படைகளுக்குப் பின்னடைவு ஏற்பட்டது. இறுதியில் மலிக்காபூர் தம்படைகளைத் திரட்டிக் கொண்டு வீரத்துடன் போரிட்டார். மங்கோலிய குபக் சிறைபிடிக்கப்பட்டபோது டில்லி வீரர்கள் சிலர் அவரைக் கொன்றனர். மங்கோலியர்கள் தலை தெறிக்க ஓடினார்கள். இக்பால் மண்ட், தாயிபூ உள்ளிட்ட மங்கோலியத் தலைவர்கள் ஒடிந்து போனார்கள். இறுதியில் டில்லிப் படை வென்றது.

1306இல் தாவா கான் மரணமடைந்தார். மங்கோலியரிடையே குழப்பம் ஏற்பட்டது. மூன்று ஆண்டுகளில் மூன்று கான்கள் பட்டத்திற்கு வந்தனர். இந்த குழப்ப நிலையைப் பயன்படுத்திக் கொண்டு அலாவுதீன் கில்ஜியின் எல்லைப்புற படைத்தலைவர் காஜி மலிக் துக்ளக் ஒவ்வொரு ஆண்டும் சிந்துவைக் கடந்து சென்று காபூல், கஜினி, காந்தகார் ஆகிய இடங்களைத் தாக்கி,

பொருட்களைக் கவர்ந்து வந்தார். தங்களது எல்லைகளைக் காத்திட மங்கோலியர் நடவடிக்கை எடுக்கவில்லை.

இப்னு பதூதா, முல்தானில் உள்ள ஜூம்ஆ மஸ்ஜித்தில் காஸி துக்ளக்கால் பொறிக்கப்பட்ட அரபு வாசகத்தை கண்டதாக கூறுகிறார். ''நான் மங்கோலியர்களை 29 முறை எதிர்கொண்டு அவர்களை தோற்கடித்தேன். எனவே நான் காஸி மாலிக் என்று அழைக்கப்படுகிறேன்'' என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.(Ibn Battuta voyages by Defremery, Paris, Vol III, p.202)

மங்கோலியர்களின் கொட்டத்தை அடக்கியது அலாவுதீன் கில்ஜியின் அருஞ்செயல்களில் ஒன்றாகும் என்பதில் மாறுபட்ட கருத்து எதுவும் இருந்திட வாய்ப்பில்லை. அலாதீன் கில்ஜி காலத்தில் சிந்து நதி வரை டில்லிப் பேரரசின் எல்லை சென்றது. ரவி நதிக்கு வடக்கே மங்கோலியர் ஏற்படுத்தியிலிருந்த ஆதிக்கம் அழிந்தது. காபூல், கஜினி இடங்களைக் கட்டுக்குள் கொண்டு வந்து மங்கோலியர்களின் ஆபத்துகளிலிருந்து இந்தியாவை மீட்ட பெருமை அலாவுதீன் கில்ஜியையே சாரும். அலாவுதீன் கில்ஜியின் போர்த்திறன், எத்தகைய இன்னல் வரினும் மனம் தளராத நிலை, அஞ்சா நெஞ்சம், மேற்கொண்ட காரியத்தை விடாப்பிடியாக இருந்து சாதிக்கும் ஆற்றல், இத்தோடு அவரது திறமைமிக்க படைத் தலைவர்கள் அவரின் வெற்றிக்கு உறுதுணையாய் இருந்தனர்.

மங்கோலியப் படையெடுப்பால் அலாவுதீன் கில்ஜியின் இராணுவத்துறை மேம்படுத்தப்பட்டது. அலாவுதீன் கில்ஜி மட்டும் 12 மங்கோலியப் படையெடுப்புகளை எதிர்கொண்டு அடக்கிய ஆற்றலாளர் ஆவார். (கி.ர. அனுமந்தன், ந.க. மங்கள முருகேசன், இந்திய வரலாறு, 1976, சென்னை, பக்கம் 47)

மங்கோலியர்கள் ஆப்கானிஸ்தானம், பாரசீகம் நாடுகளைக் கைப்பற்றி விட்டமையால் டில்லியில் ஆண்டு வந்த முஸ்லிம்கள் இந்தியாவிற்கு வெளியே இருந்த முஸ்லிம் அரசர்களுடன் நேரடித் தொடர்பு கொள்ள இயலாது போயிற்று. தங்கள் கவனத்தை இந்தியாவிலேயே செலுத்தினர். இந்தியாவைத் தங்களுடைய தாயகமாகக் கருதினர். அதன் விளைவாக இஸ்லாமிய

கலாச்சாரமும் இந்து கலாச்சாரமும் ஒன்றோடு ஒன்று கலந்து உறவாட வழி ஏற்பட்டது.

இங்கிலாந்தில் முதலாம் ஜார்ஜ் ஜெர்மானியனாக இருந்த போதிலும் அவரது மரபு ஆங்கிலத்தில் கலந்து ஆங்கில மாகிவிடவில்லையா? (கோவை கிழார், மா. இராசமாணிக்கனாரின் பல்லவர் வரலாறு நூலுக்கு அணிந்துரை, சென்னை, 1944, பக்கம் 4)

அதுபோல டில்லி சுல்தான்களும் தங்களை இந்தியராகவே மாற்றிக் கொண்டனர். பாரசீகம் போன்ற பல பகுதிகளில் வாழ்ந்த முஸ்லிம் அறிஞர்கள், கலைஞர்கள் மங்கோலியர்களிடமிருந்து தப்பித்துக் கொள்ள இந்தியாவிற்கு வந்து டில்லியில் அடைக்கலம் தேடினார்கள். டில்லி கலா கேந்திரமாயிற்று.

மக்கள் விரும்பிய மன்னர்

மகத்தான வெற்றி வீரராகவும் பேரரசை உருவாக்குபவராகவும் திகழ்ந்த அலாவுதீன் கில்ஜி பயனுள்ள சீர்திருத்தங்களையும் செய்தார். அவற்றிலே சில புதுமையானவை. தலைநகரிலும் அதன் சுற்று வட்டாரத்திலும் கண்டிப்பாக மது விலக்கை அமல்படுத்தினார். அவர் உருவாக்கிய ஒழுங்குமுறை விற்பனை மற்றும் விலைக் கட்டுப்பாட்டு முறை இடைக்காலத்துக்கே உரிய கொடூரமான வகையில் செயல்படுத்தப்பட்ட போதிலும் அவை அக்காலத்தில் மிகவும் முற்போக்கானவை. (எச். ஆர். கோஸாஸ். அதற்கு பிறகு எம்.சி. கேப்ரியல். தமிழாக்கம் பொ. இராஜாரம், பப்ளிகேஷன்ஸ் டிவிஷன், செய்தி ஒலிபரப்பு அமைச்சகம், இந்திய அரசு, புதுடில்லி, 1996 ‘இந்திய மக்களின் வரலாற்றுச் சித்திரம்’ நூலில் பக்கங்கள் 78, 79)

சிறந்த படைத் தலைவராகவும், சிறந்த நிர்வாகியாகவும் செயல்பட்ட அதிசய அரசர் அலாவுதீன் கில்ஜி நல்ல கூட்டிணைப்பாளர். அவரது கோன்மைக் கோட்பாடு (ஆட்சி முறை) அலாவுதீன் கில்ஜியின் நிர்வாகத் திறமைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

டில்லி சுல்தானியத்தில் முஸ்லிம் அல்லாதவரே பெரும்பான்மையினராக இருந்தனர். முஸ்லிம் அல்லாதவர்களின் நலன்களைப் பாதுகாத்திடும் வகையில் அரசியலில் மதம் செல்வாக்குப் பெறுவதை சில முஸ்லிம் அரசர்கள் அனுமதிக்கவில்லை. அவர்களுள் மிக முக்கியமானவர் அலாவுதீன் கில்ஜி.

உத்தரப் பிரதேசம் பரன் எனுமிடத்தில் 1285ல் பிறந்த ஜியா உத்தீன் பரணி கி.பி. 1359இல் எழுதிய நூல் தாரிக் இ பிருஸ்ஷாயி. இந்த நூலில் காஜி முகிஸ் உத்தீனிடம் அலாவுதீன் கில்ஜி நடத்திய இஸ்லாம் மார்க்கம் சம்பந்தமான உரையாடல்கள் மூலம் நான்கு முக்கியப் பிரச்சனைகள் குறித்து இருவரும் உரையாடியது தெரிய வருகிறது.

முதல் பிரச்சனை ஜிசியா வரிகுறித்து. அலாவுதீன் கில்ஜி ஜிசியா வரியைச் செலுத்த வலியுறுத்தினார்; வற்புறுத்தினார்; வசூலித்தார் என்பது வரலாற்று உண்மை; ஆனால் எவரையும், குறிப்பாக இந்துக்களை மிரட்டி இஸ்லாமிய மார்க்கத்தை அலாவுதீன் கில்ஜி தழுவச் செய்யவில்லை என்பதும் தெளிவான வரலாற்றுச் சான்றாகும்.

(Kishori Saran Lal, History of the Khaljis A.D. 1290 - 1320, New Delhi, 1967, page 276)

இரண்டாவதாக அரசாங்கப் பணத்தைத் திருடுதல், இலஞ்சம் வாங்குதல், தப்புக் கணக்கு எழுதுதல் போன்ற செய்கைகளில் ஈடுபட்டிருந்த அரசாங்க அலுவலர்களைக் கடுமையாகத் தண்டித்தார். அரசுப் பணத்தைக் களவாடியவர்களை, திருடு போன பணம் முழுவதும் திரும்பப் பெறும் வரையில் அவர்களைச் சங்கிலியால் கட்டிவைத்தார். அரசியல் குற்றவாளிகளுக்கு ஆயுட்காலச் சிறைத்தண்டனை அளிக்கப்பட்டது.

தனது படைகளின் கூட்டணி பார்வையீட்டின் போது, அதாவது படை வரிசையினைப் பார்க்கின்றபோது, ஆய்வு செய்கின்ற போது ஒரு குதிரை வீரர் வரத் தவறினால் அவரிடமிருந்து மூன்று ஆண்டுகளுக்குரிய சம்பளத்தைத் திருப்பி வாங்கும்படி கட்டளையிட்டவர் அலாவுதீன் கில்ஜி.

கலகங்கள் ஏற்படுகின்ற போது அதில் பங்கு கொண்ட அனைவரையும் கொல்ல உத்தரவிட்டார்.

“ஆயிரக்கணக்கானவர் அழிந்து விடக்கூடிய கிளர்ச்சிகளைத் தடுக்க நாட்டின் நலனுக்கு உகந்தவை (நல்லவை) எவை எனக் கருதுகின்றேனோ அச்சட்டங்களை வெளியிடுகிறேன். மனிதர்கள் கேட்கக் கூடியவர்களாகவும், பணிவானவர்களாகவும் என் கட்டளைகளை ஏற்று நடப்பவர்களாகவும் இல்லை. எனவே அவர்களைப் பணியச் செய்ய நான் கடுமையாக நடந்து கொள்ள வேண்டியுள்ளது. இது சட்டப் பூர்வமானதோ, சட்ட விரோதமானதோ எனத் தெரியாது. எது நாட்டிற்கு நல்லதோ, எது அவசர நிலைமைக்கு ஏற்றதோ அதனை வெளியிடுகிறேன்’

என்று அறிவித்தவர் அலாவுதீன் கில்ஜி.

மூன்றாவதாக அலாவுதீன் கில்ஜி, காஜி முகிஸ் உத்தினீடம் விவாதித்தது 'தேவகிரி'யிலிருந்து கொண்டு வந்த செல்வங்கள் பற்றியதாகும். அச்செல்வம் இஸ்லாமியப் படையினரின் வலிமையினால் பெறப்பட்டது. எனவே பொதுக் கருவூலத்தில் சேர்ப்பதுதான் முறை என்று காஜி முகிஸ் உத்தீன் கூறியதும் அலாவுதீன் கில்ஜி வெகுண்டெழுந்தார். ஆனால் அவரது விளக்கத்தைக் கேட்டு திருப்தி பெற்றார்.

இதிலே குறிப்பிட வேண்டிய செய்தி என்னவென்றால் இந்தப் போர் நடைபெற்ற காலத்தில் இருந்த சமகால வரலாற்று ஆசிரியரான ஜியாவுதீன் பரணி தேவகிரி அரசரிடம் பெற்ற செல்வங்கள் குறித்த பட்டியல் எதையும் தரவில்லை. சமகாலத்தவரான அமீர்குஸ்ரூவும் கற்பனை கலந்து உயர்த்தி எழுதி இருந்தாலும் அவரும், கில்ஜி பெற்ற செல்வங்களின் பட்டியல் எதையும் தரவில்லை. (எலியட் – டெலிசன் – இந்திய வரலாறு பாகம் III பக்கம் 544)

பெரிஷ்டா பாரசீக எழுத்தாளர். இந்தியாவில் இஸ்லாமியர்கள் வரலாற்றை விரிவாகத் தந்தவர். எனினும் இவர் அலாவுதீன் கில்ஜியின் சமகாலத்தவர் அல்ல.

அலாவுதீன் கில்ஜியின் தேவகிரி படையெடுப்பு கி.பி. 1296இல் இடம்பெற்றது. பெரிஷ்டாவின் நூலின் முதல் பகுதி வெளிவந்தது கி.பி. 1606இல். அதாவது தேவகிரி படையெடுப்பிற்கு 310 ஆண்டுகளுக்குப் பின் எழுதப்பட்டது.

இவர்தான் அலாவுதீன் கில்ஜி தேவகிரியிலிருந்து பெரும் பொருட்களைக் கொண்டு சென்றவர் என்ற பட்டியலைத் தந்துள்ளார் என்பதையும் எண்ணிக் கொள்க!

தேவகிரி அரசர் ராமச்சந்திர தேவாவின் மகள் இளவரசி ஜகதபாலி என்பவரை அலாவுதீன் கில்ஜி திருமணம் செய்தார் என்று இசாமி குறிப்பிடுகிறார். இந்துக் காவியங்கள் இந்த இளவரசியின் பெயரை சிகதாய் என்று குறிப்பிடுகிறது. இவர் சிகாபுதீன் உமர் கில்ஜியின் தாயார் என்றும் கூறப்பட்டுள்ளது. (Narayana Das, Chhitai - varta, edited by M.P. Gupta, Kashi, Sam, 2015)

இசாமி தவிர்த்து வாசப், முகம்மது பிகாமத்கான், ஹாஜி உத்பீர் ஆகியோர் இத் திருமணத் தகவலை உறுதி செய்கிறார்கள். அப்துல்லா பின் பாஸ்லுல்லா வாசப் பெர்சிய மொழியில் 1328இல் எழுதிய நூல் Tajziyatul Amsar va Tajriyatul Asar also known as Tarikhi-Vassaf)

முகமது பிகாமத் கான் எழுதியதும் பெர்சிய மொழியில். Muhamad Bihmad Khan, Tarikh-i-Muhammedi C. 842 H. Allahabad University MS, Fol, 122)

ஹாஜிதுபைர் பெரிஷ்டாவின் சமகாலத்தவர். இவரது நூல் Zafarul valibi muzaffar valih. இது கி.பி. 1605 இல் எழுதப்பட்டு 1611 இல் நிறைவு செய்யப்பட்ட நூலாகும்.

அலாவுதீன் கில்ஜியின் தேவகிரி படையெடுப்பிற்கு 300 ஆண்டுகளுக்குப் பிறகு எழுதப்பட்ட நூல்களில்தான் அலாவுதீன் கில்ஜி தேவகிரியிலிருந்து கொண்டு சென்ற பொருட்கள், அவர் இராமச்சந்திர தேவாவின் மகளைத் திருமணம் செய்தார் போன்ற தகவல்கள் சொல்லப்பட்டுள்ளன என்பதனை பதிவு செய்கிறேன்.

அரசாங்கக் கருவூலத்திலுள்ள பணத்தில் அரசரும் அவரது குடும்பத்தாரும் பெற்றுள்ள பங்கினைப் பற்றிய விஷயம் அலாவுதீன் கில்ஜிக்கும் காஜி முகிஸ் உத்தீனுக்கும் இடையேயான கலந்துரையாடலில் இடம்பெற்றது.

ஒரு குதிரை வீரர் 234 தங்காக்கள் (ஒரு தங்காவின் மதிப்பு ஒரு வெள்ளி ரூபாய்; அல்லது ஒரு ரூபாயின் மதிப்பை விடச் சற்றுக் கூடுதலாகும்) அல்லது அரச கௌரவத்திற்கு இழுக்கு நேராவண்ணம் பொதுக்கருவூலத்திலிருந்து எடுத்துக் கொள்ளலாம்.

ஆனால் கோடிக்கணக்கில் அரசுக் கருவூலத்திலிருந்து பொருள்களை எடுத்து அரசர் செலவளித்தால், நியாயத் தீர்ப்பு நாளன்று அரசர் வேதனையும் வருந்தவும் வேண்டி வரும் என்றார் காஜி முகிஸ் உத்தீன்.

இவ்வாறு சொன்னதால் அலாவுதீன் கில்ஜி தன்னை

தண்டிக்காமல் விடமாட்டார் என்று காஜி முகிஸ் உத்தீன் எண்ணினார். இறுதி விடையாக தனது மனைவி மக்களிடம் சொல்லிக் கொண்டுதான் வந்தார். ஆனால் எதிர்பார்த்ததற்கு நேர்மாறாக அலாவுதீன் கில்ஜி கௌரவ ஆடையை காஜி முகிஸ் உத்தீனுக்கு அணிவித்ததோடு நில்லாமல், ஆயிரம் தங்காக்கள் பரிசாகவும் வழங்கிவிட்டு அவர் சொல்லிய வாசகங்கள் இதோ:

“மௌலானா முகிஸ் அவர்களே! நான் பெரிய அளவில் படித்திருக்கவில்லை; போதிய ஞானமும் எனக்கு இல்லை. ஆனால் நான் ஒரு முஸ்லிமாகப் பிறந்துள்ளேன். என்னுடைய முன்னோர்கள் வழி வழியாக முஸ்லிம்களாக இருந்து வந்துள்ளனர். கலகங்கள் ஏற்படும் போது பல உயிர்கள் அழிகின்றன. சேதமடைகின்றன. எது நாட்டு மக்களுக்கும், நாட்டுக்கும் நன்மை பயக்கும் என்று நான் கருதுகிறேனோ அதனைத்தான் கட்டளையிடுகிறேன்.

ஆனால் இக்கால மக்கள் எதற்கும் அஞ்சாதவர்களாக இருக்கிறார்கள். எதையும் பொருட்படுத்துவதில்லை. எனக்கு சரியானபடி கீழ்ப்படிந்து நடப்பதில்லை. எனவே அவர்களைக் கீழ்ப்படியச் செய்ய கடுமையான தண்டனைகளை வழங்க வேண்டியிருக்கிறது. நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் நன்மை பயக்கும் என்று நான் கருதுகிறதை கட்டளையாகப் பிறப்பிக்கிறேன். அதனை இஸ்லாமிய மார்க்கச் சட்டம் (ஷரியத்) அனுமதிக்கிறதா? இல்லையா? என்பது எனக்குத் தெரியாது.

இறுதித் தீர்ப்பு நாளில் அல்லாஹ் என்னை எப்படி நடத்துவான் என்பதனையும் நான் அறிவேன். மாற்றானுடைய மனைவியை ஒருவன் அடைவதால், எனக்குத் தீங்கில்லை. ஒருவன் திருடும்போது எனது பரம்பரைச் சொத்து பாழாவதில்லை. ஒருவன் மது அருந்தும் போது எனக்கு பாதிப்பில்லை. ஒருவன் சம்பளத்தை வாங்கிக் கொண்டு படையில் சரியாகப் பராமரிக்கவோ, பணியாற்றவோ இல்லை என்பதால் படையின் பணி தடைபட்டு நின்றுவிடப் போவதில்லை. ஆனால் இவைகளை இறைவன் பார்த்துக் கொண்டிருக்கிறான். இந்த நான்கு வகையான குற்றவாளிகளையும் நான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கட்டளைப்படியே தண்டிக்கிறேன்.

ஆனால் இங்கே, மரணத்திற்குப்பின் தங்களுக்கு நேர இருப்பதைப் பற்றிக் கவலைப்படாதவர்கள், துரோகங்களில் ஈடுபடுவோர் தொகை இலட்சத்திலிருந்து பத்து இலட்சங்களாக உயர்ந்துள்ளது. திருமணமான ஒருவன் மாற்றான் மனைவியுடன் தகாத முறையில் நடந்து கொண்டால், அவனது ஆண்மையை அழித்து விடும்படி கட்டளையிட்டுள்ளேன். இவ்வளவு பயங்கரத் தண்டனையை நான் விதித்ததற்குப் பின்னரும் என் முன்னே மாற்றான் மனைவிமார்களைக் கெடுத்து விட்டவர்கள் பலர் கொண்டு வந்து நிறுத்தப்படுகிறார்கள்.

மூன்று ஆண்டுகள் சம்பளத்தைத் திருப்பித் தர வேண்டும் என்று நான் கூறியிருப்பினும் நூறு அல்லது இருநூறு குதிரை வீரர்களுக்குக் குறையாமல் ஒவ்வொரு படையணிக் கூட்ட மேற்பார்வையீட்டின் போது குதிரைப்படை வீரர்கள் வேலைக்கு வராமல் போவதால், அவர்களது வாழ்வு சிறையில் கழிகிறது.

ஊழல் காரணத்திற்காக வருவாய்த் துறை எழுத்தர்களையும் அமீர்களையும் ஆயிரக்கணக்கில் தண்டித்து அவர்களை வறுமையில் வாடச் செய்துள்ளேன். அவர்களது உடம்பில் புழுக்களை உட்புகுத்தியுள்ளேன். ஆயினும் அவர்கள் இலஞ்சம் வாங்காமல் இருப்பதில்லை. தீய வழிகளை விடுவதில்லை. மது விற்பனை செய்தல், மது அருந்துதல் ஆகிய குற்றங்களுக்காக அநேகரை நீரில் ஆழ்த்தி அல்லது ஆழமான குழிகளில் தள்ளிக் கொன்றிட உத்தரவிட்டுள்ளேன். இறைவனின் பிள்ளைகளை திருத்தும் பணியில் யாருமே வெற்றிகண்டதில்லை. அப்படியிருக்க நான் மட்டும் எங்ஙனம் முழுவதுமாக வெற்றிகாண முடியும்?'' என்று அலாவுதீன் கில்ஜி காஜி முகிஸ் உத்தீனிடம் சொன்னார்.

மக்கள் விரும்பிய அமைதியையும் ஒழுங்கையும் அலாவுதீன் கில்ஜி நிலை நாட்டியதால் அவரது ஆட்சியின் கீழ் இருந்த மக்கள் அவருக்கு அடி பணிந்தனர். அரசனுக்கு மக்கள் கொடுத்த ஆதரவினால் அவர் உயிருடன் இருக்கும் வரையில் உறுதிபெற்றே விளங்கினார்.

அலாவுதீன், காஜி முகிஸ் உத்தீனிடம் கூறும் போது ''நான் விஞ்ஞானம் அல்லது நூல்களைக் கற்றதில்லை. ஆயினும்

முஸ்லிம்கள் கூட்டத்தில் நான் ஒரு முஸ்லிம்' என்றார். அலாவுதீன் கில்ஜியின் நினைவுச் சின்னங்களின் மீது காணப்படும் சாசனங்களும், "அவர் இஸ்லாத்தில் நம்பிக்கை இழக்கவில்லை' என்று கூறுகின்றன என்று வரலாற்றுப் பேராசிரியர்கள் ஆர்.சி. மஜும்தார், ஹெச். சி. ராய சௌத்ரி, கலிகின்கர் தத்தா ஆகியோர் குறிப்பிடுகின்றார்கள்.

இதோ அவர்களது வரிகள்...

"Ala-ud-din himself said to the Qazi: "Although I have not studied the science or the book, I am a Mussalman of a Mussalaman stock". The inscriptions on "Ala-ud-din's monuments also show that he had not lost faith in Islam" R.C. Majumdar, H.C. Raychdhuri, Kalikinkar Datta, An advanced History of India, London, 1963, Page 307.

அலாவுதீன் கில்ஜி தன் மனதிற்கு எது சரி என்று பட்டதோ அதில் உறுதியுடன் நடந்து கொண்டார். வலிமை வாய்ந்த ஓர் ஆட்சியை ஏற்படுத்துவதில் அவர் தீவிரமாக இருந்தார்.

மதுவை தடை செய்த மன்னர்

அலாவுதீன் கில்ஜியின் துவக்க கால ஆட்சியில் உள்நாட்டுக் கிளர்ச்சிகள் நடந்தன. கி.பி. 1299இல் நஸ்ரத் கான் தலைமையில் குஜராத் மீது படையெடுப்பை நடத்திட உத்தரவிட்டார். இப்படையெடுப்பு குறித்து முன்பே விளக்கியுள்ளோம். குஜராத் படையெடுப்பின் போது கிடைத்த பொருட்களின் பெரும் பகுதியை படைவீரர்களே மறைத்து வைத்துக் கொண்டனர். சுல்தானுக்குச் சேர வேண்டிய பொருளைக் கேட்டதால் படையில் கலகம் ஏற்பட்டது. அதில் புதிதாக வந்த முஸ்லிம்கள் பெருவாரியாக ஈடுபட்டனர். முஹம்மது ஷா, கப்ரூ, யல்ஹக், புர்ராக் ஆகியோர் தாங்கள் அபகரித்த பொருட்களை அலாவுதீன் கில்ஜியிடம் சேர்க்க மறுத்தனர். இன்னும் பல புதிய முஸ்லிம்கள் இதே நிலையில் இருந்தனர். இது குறித்த விவரங்களை யஹியா தம் நூலில் குறிப்பிட்டுள்ளார். (Yahya, Tariki-iMukarak Shalu. Page 76) அலாவுதீன் கில்ஜிக்குச் சேர வேண்டிய பொருட்களை அபகரிக்க முயன்ற அனைவரும் கடுமையான முறையில் தண்டிக்கப்பட்டனர்.

அலாவுதீன் கில்ஜிக்கு எதிராக முதன் முதலில் கலகம் செய்தவர்கள் புதிய முஸ்லிம்கள். இவர்கள் அடக்கப்பட்டனர்.

அக்கத்கானின் கலகம்

இரண் தம்பார் நோக்கி அலாவுதீன் கில்ஜி படையெடுத்துச் சென்றபோது வழியில் வேட்டையாடச் சென்றார். பழைய டில்லியில் இருந்து 12 மைல் தொலைவில் உள்ள கிழுக்காரிக்குத் தெற்கே உள்ள தில்பெத் என்ற இடத்தில் தங்கியிருந்தார். பகல் பொழுது கழிந்தது. இரவு நேரம். தமது குதிரை வீரர்களை அனுப்பி வேட்டைக்கான மிருகங்களைத் தம்மை நோக்கி வரும்படி மறுநாள் காலையில் துரத்துங்கள் என்று சொல்லி அனுப்பினார். அலாவுதீன் கில்ஜியின் காலஞ் சென்ற தம்பி முஹமதுவின் மகன் அக்கத்கானும் அவனோடு புதிய முஸ்லிம்கள் சிலரும் அங்கு வந்தனர். யாதொரு பாதுகாப்பின்றி அலாவுதீன் கில்ஜி தன்னந்தனியே அமர்ந்திருப்பதைப் பார்த்தார் அக்கத்கான். பேராசை பொங்கியது. அலாவுதீன் கில்ஜியைக் கொன்று

விட்டு தானே அரசராக ஆகி விட இதுவே தக்க தருணம் என எண்ணினார். அலாவுதீன் கில்ஜியைக் கொல்ல அம்புகளால் தாக்கினார்கள்.

குளிர் காலம் என்பதால் பஞ்சு நிரப்பப்பட்ட ஆடைகளை கனமாக அணிந்திருந்தார் கில்ஜி. இரண்டு பெருத்த அம்புக் காயங்களைத் தவிர வேறு காயம் ஏதும் அலாவுதீன் கில்ஜிக்கு ஏற்படவில்லை. மயங்கி வீழ்ந்தார். மெய்க் காவலர்களும் அடிமை ஒருவரும் விரைந்து வந்தனர். கையில் வாளை ஏந்தி அலாவுதீன் கில்ஜியைக் காத்து நின்றனர். அக்கத்கான் தனது வாளால் அலாவுதீன் கில்ஜியின் தலையை வெட்டி எடுத்திட நெருங்கிய போது அவரது தலையைக் கொய்து எடுப்பதால் எந்தப் பயனும் இல்லை; அவர் இறந்து விட்டார் என்று உரக்கக் கத்தினார்கள் மெய்க் காவலர்கள்.

முட்டாள் தனமான, அனுபவமில்லாத அக்கத்கான் அதனை உண்மையென்று நம்பி அங்கிருந்து அரசருடைய பாசறைக்கு விரைந்தார். ‘அலாவுதீன் கில்ஜியை கொன்று விட்டேன்; இனி நானே அரசர்’ என்று கூறிக் கொண்டு அரியணையில் அமர்ந்தான்.

அலாவுதீன் கில்ஜி உயிருடன் இருந்தால் அக்கத்கானுக்கு அரியணையில் அமர்ந்திடும் அசாத்திய துணிச்சல் வராது என்று அமீர்களும் மலிக்குகளும் நம்பினர். அக்கத்கானை அரசராகக் கொண்டாடினார்கள். அந்தப்புரத்திற்கு நுழைந்தான் அக்கத்கான். ‘அலாவுதீன் கில்ஜியின் தலையை காட்டுங்கள்; அப்போதுதான் நாங்கள் நம்புவோம்’ என்று அந்தப்புரக் காவலர்கள் அறைகூவல் விடுத்தனர். அதுவரை அக்கத்கான் கூறுவதை நம்ப முடியாது என்றனர். அவர்கள் காண வேண்டிய தலையும் வந்தது. அந்தத் தலை அதற்குரிய தோள்களின் மீது அப்படியே இருப்பதை அங்கிருந்த அனைவரும் கண்டனர்.

(Stanley Lanepool. Medeival India under Mohammedan Rule (A.D. 712 - 1764). T.Fisher unwin ltd, London, First edition 1903 Fifteenth Impression, 1926, page 100)

தாக்குதலுக்கு உள்ளான அலாவுதீன் கில்ஜி மயக்கம் தெளிந்தார். ஜெயினில் உள்ள தமது சகோதரர் உலுக்கானிடம்

சேர்ந்துவிட முடிவெடுத்தார். “அவ்வாறு சென்றால் அக்கத்கான் பக்கம் சென்று விட்ட அமீர்கள் தங்களது உயிருக்குப் பயந்து அவர் பக்கமே சாய்ந்துவிடும் அபாயம் உள்ளது” என்று மலிக் ஹமீத் உத்தீன் (விவசாயத்துறை இயக்குநர்) அலாவுதீன் கில்ஜியிடம் ஆலோசனை சொன்னார். அதனை ஏற்றுக் கொண்டார் அலாவுதீன். ஜெயினுக்குச் செல்லும் திட்டத்தைக் கைவிட்டார். பாசறைக்குச் சென்றார். அலாவுதீன் கில்ஜி பாசறையை அடைவதற்கு முன்னரே அதனைக் கேள்விப்பட்ட நூற்றுக்கணக்கான குதிரை வீரர்கள் அலாவுதீன் கில்ஜி பக்கம் வந்து சேர்ந்து கொண்டனர்.

அலாவுதீன் கில்ஜி செல்வாக்குடன் திரும்பவும் வருவதை அறிந்த அக்கத்கான் ஆப்கானிஸ்தானத்திற்கு தப்பி ஓட முயன்றார். அலாவுதீன் கில்ஜியின் அரசு அதிகாரிகள் இரண்டு பேர், மாலிக் அஜியுத்தீன் மற்றும் மாலிக் நஸ்ருத்தீன் நூர்கான், ஆகியோர் அக்கத்கானைப் பிடித்துக் கொன்று, அவனது தலையை வெட்டி எடுத்து வந்தனர். பல நாட்கள் தனது மடியிலே வைத்துச் சீராட்டிய தலை ஆப்கான்பூரில் சற்று முன்னர் அறுபட்டு விரைவாகத் தம்மிடம் கொண்டு வரப்பட்டபோது அலாவுதீன் கில்ஜி ஒரு கணம் மனமுடைந்து நின்றார். அக்கத்கானின் தம்பி குத்லூகானும் கொல்லப்பட்டார். சதித்திட்டத்தில் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் தண்டனைக்குட்பட்டு பலியாயினர்.

அலாவுதீன் கில்ஜியைக் கொன்றுவிட்டு அரசராக எண்ணியவர்கள் இவ்வாறு அழிந்தனர். அலாவுதீன் கில்ஜியின் ஆட்சியை எதிர்த்து அடுத்து கலகம் செய்தது யார் தெரியுமா? அலாவுதீன் கில்ஜியின் சகோதரியின் புதல்வர்கள் உமர்கான் மற்றும் மங்குகான் (அவுத்தின் ஆளுநர்). இரண்தம்பூர் படையெடுப்பில் அலாவுதீன் கில்ஜி ஈடுபட்டிருந்த வேளையில் அவரது சகோதரியின் புதல்வர்களும், இரு பகுதியின் கவர்னர்களுடன் இணைந்து கலகம் செய்தனர். இக்கலகத்திற்கு காரணம் என்னவென்று உறுதியாக கூற இயலாது. (K.S. Lal, முற்கூறிய நூல் பக்கம் 89) கலகத்தை அடக்க அனுபவம் வாய்ந்த அதிகாரிகள் அனுப்பப்பட்டனர். கலகத்தில் ஈடுபட்டவர்கள் கைது

செய்யப்பட்டனர். தண்டிக்கப்பட்டு கொல்லப்பட்டனர்.

ஹாஜி மௌலாவின் கலகம்

டில்லியில் முன்பு கொத்வாலாகப் பணியாற்றிய மலிக் பக்ருத்தீன் அடிமையாய் இருந்தவர் ஹாஜி மௌலா. டில்லியின் வடகிழக்கில் 15 மைல் தொலைவில் உள்ள ரதோல் என்ற ஊரில் நிலங்களைக் கவனித்துக் கொண்டிருந்தார் ஹாஜி மௌலா.

டில்லியின் கொத்வாலான திர்மீசீ, பதௌன் வாயிலைச் சீர்படுத்துவதற்காக அதன் அருகே தனது இருப்பிடத்தை அமைத்துக் கொண்டு 'சீரி'யில் புதிய கோட்டையைக் கட்டிக் கொண்டிருந்தார். அதனால் அங்கேயே தங்கியிருந்தார். அலாவுதீன் கில்ஜி இரண்தம்பூர் போர்க்களத்தில் இருக்க, டில்லியின் கொத்வால் திர்மீசி, 'சீரி'யில் கோட்டை கட்டும் பணியில் இருந்த சூழலைப் பயன்படுத்த விரும்பிய ஹாஜி மௌலா போர் வீரர்கள் சிலரைத் திரட்டிக் கொண்டு, திர்மீசியின் வீட்டிற்குச் சென்று, 'அலாவுதீன் கில்ஜியிடமிருந்து உங்களுக்கு செய்தி வந்துள்ளது. பெற்றுக் கொள்ளுங்கள்' என்று அழைத்தார். திர்மீசி வெளியே வந்தார்; ஹாஜி மௌலா அவரைக் கொன்றார்.

கள்ளக் கையெழுத்திட்ட காகிதம் ஒன்றை கூடியிருந்த மக்களிடம் காண்பித்தார் ஹாஜி மௌலா. அலாவுதீன் கில்ஜியின் உத்தரவுப்படியே திர்மீசி கொல்லப்பட்டார் என்ற தவறான தகவலை அங்கு சொன்னார். அதன் பின்னர் நகர வாயில்கள் அனைத்தையும் மூடச் சொன்னார்.

அலாவுதீன் கில்ஜியின் ஆதரவாளர்களைக் கொல்லவும் முயன்றார். அத்தோடு சிறைக் கதவுகளைத் திறந்துவிட்டார். சிறையிலிருந்து வெளியேறியவர்கள் ஹாஜி மௌலா பக்கம் சேர்ந்து கொண்டனர். அரசாங்க கஜானா கொள்ளையிடப்பட்டு பணம் சூறையாடப்பட்டது. அரசாங்கக் குதிரை லாயங்களிலிருந்து குதிரைகள் அவிழ்த்துவிடப்பட்டன. ஆயுதக்கிடங்குகளில் இருந்து ஆயுதங்கள் அபகரிக்கப்பட்டன. டெல்லி முழுவதும் ஹாஜி மௌலாவின் கரங்களுக்கு வந்தது. இல்துத்மிஷ் (1211–1236) வழி வந்த அலவி என்பவரை அரசர் போல நடத்தி

மரியாதை செலுத்த வேண்டும் என்றார் ஹாஜி மௌலா.

செய்தியறிந்த அலாவுதீன் கில்ஜி மாலிக் ஹமித் உத்தீன் என்பவரை படைகளுடன் டில்லிக்கு அனுப்பி வைத்தார். அம்ரோவிலிருந்து ஜபர்கான் படைகளும், கஜினி வாயில் வழியாக டில்லிக்கு வந்தது. உலுக்கானும் டில்லிக்கு வந்து சேர்ந்தார். ஹாஜி மௌலாவை நடுத் தெருவில் ஹமீத் உத்தீன் கொன்றார். அலவி கொல்லப்பட்டு அவரது தலை தொங்கவிடப்பட்டது. அலாவுதீன் கில்ஜி இரண்தம்பூர் முற்றுகையிலிருந்த வேளையிலே அவர் வராமலேயே ஹாஜி மௌலாவின் கலகமும் அடக்கப்பட்டது.

நாட்டில் இவ்வாறு கலகங்கள் ஏற்படுவது எதனால் என்பதை அறிய அலாவுதீன் கில்ஜி ஆலோசனைக் கூட்டத்தைக் கூட்டினார். மலிக் ஹமீத் உத்தீன், மலிக் ஆயிஸ் உத்தீன், மலிக் அயின் உல்முல்க் மூல்தான் போன்ற அறிஞர்களை கூட்டத்திற்கு வரவழைத்தார்; விவாதங்களைத் தொடர்ந்தார்.

நாட்டில் மக்கள் அடிக்கடி மது அருந்துவதற்கான விருந்துகளை ஏற்பாடு செய்தனர். குடிபோதையில் இஷ்டம் போல பேசினர்; நினைவிழந்த நிலையில் ஒருவரோடு ஒருவர் பேசிய பேச்சுகள் சதித்திட்டங்களின் அடித்தளங்களாக மாறிவிடுகின்றது என்ற கருத்து கூறப்பட்டது.

இஸ்லாம் மார்க்கம் மதுவை முற்றிலும் தடை செய்துள்ளது. எனவே நாட்டில் மதுக் குடிப்போருக்கு எதிராக சில சட்டங்களை அலாவுதீன் கில்ஜி கொண்டு வந்தார்.

அரசவையில் பிரபுக்கள், உயர் பதவி வகித்தோர் மது குடிக்கும் பழக்கத்தைக் கொண்டிருந்தனர். அலாவுதீன் கில்ஜியும் ஆரம்பத்தில் குடிகாரர்தான். ஆனால் அறிஞர்கள் கூட்டிய விவாதத்தில் மதுவின் தீமைகளை வெகுவாக உணர்ந்தார் அலாவுதீன் கில்ஜி. அனைவரும் பாராட்டும் வகையில் முதன்முதலில் அவர் மதுப் பழக்கத்தைக் கைவிட்டார். நீங்கள் மதுவை விட்டு விட்டால் சிறந்த ஆட்சியாளராக முடியும் என்று ஏற்கெனவே அலா முல்க் கூறினார். அதனை அலாவுதீன் கில்ஜி ஏற்றுக் கொண்டார்.

அலாவுதீன் கில்ஜி தனக்குச் சொந்தமான கண்ணாடி, பீங்கான் ஆகியவற்றால் செய்யப்பட்ட மதுக் கோப்பைகளை பதௌன் வாயிலின் முன் உடைக்கும் படி கட்டளையிட்டார். அரசருக்குச் சொந்தமான பொன், வெள்ளி ஆகியவற்றைக் கொண்டு செய்யப்பட்ட கோப்பைகளை உருக்கி, நாணயங்களை அச்சிடச் செய்தார் என்று பெரிஷ்டா குறிப்பிட்டுள்ளார். J. பிரிக்ஸ் இந்தியாவில் இஸ்லாமிய ஆட்சி வரலாறு என்ற நூலில் டில்லியில் பெரிய பெரிய ஜாடிகளில் இருந்த மதுவை தெருக்களில் கொட்டச் செய்ய உத்தரவிட்டார் என்று குறிப்பிட்டுள்ளார். மழைக்காலத்தில் சேறும் சகதியுமாக தெருக்கள் இருப்பதுபோல் அப்போது டில்லியின் தெருக்கள் காட்சியளித்தன. (கே.எஸ்.லால், முற்கூறிய நூல் பக்கம் 176)

''அல்லாஹ்வின் தூதரே, அண்ணல் முஹம்மது (ஸல்) அவர்களே, மதுவையும், சூதாட்டத்தையும் பற்றி எங்களுக்கு தீர்ப்பு வழங்குவீர்களாக'' என்று ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்களும் சில அன்சாரித் தோழர்களும் (மதீனா வாசிகள்) கேட்டபோது திருக்குர்ஆனின் 2வது அத்தியாயம் 219–வது வசனம் இறக்கி அருளப்பட்டது. அதனைத் தொடர்ந்து அல்மாயிதா 5வது அத்தியாயம் 90, 91 வசனங்கள் வந்தன.

பெருமானார் (ஸல்) மது சம்பந்தமாக பத்துப் பேர்களைச் சபித்துள்ளார்கள். மதுவைக் காய்ச்சுபவர், அதைக் காய்ச்சுவதற்கு உதவுபவர், அதைக் குடிப்பவர், அதனைப் புகட்டுபவர், அதனை சுமந்து செல்ல ஏற்பாடு செய்தவர், அதனை விற்பவர், அதனை வாங்குபவர், அதனை வெகுமதியாகக் கொடுப்பவர், அதை விற்றுப் புசிப்பவர் என்ற 10 பேர்கள் அவர்கள் ஆவார்கள். (அறிவிப்பவர்: அனஸ் (ரலி) நூல்: தீர்மீதி)

ஹஸ்ரத் அபூதல்ஹா (ரலி) அண்ணலாரை (ஸல்) நோக்கி, ‘என் மடியில் வளரும் அனாதைகளுக்காக கள்ளை வாங்கியுள்ளேன்’ என்று கூறியபோது, ‘கள்ளைக் கீழே கொட்டி விடுங்கள்; அதன் பாத்திரத்தையும் உடைத்தெறிந்து விடுங்கள்’ என்று மிகக் கடினமாகப் பெருமானார் (ஸல்) கட்டளையிட்டார்கள். (நூல்: திர்மீதி)

அரசரது அதிகாரிகள் யானைகள் மீது ஏறிக் கொண்டு டில்லியிலுள்ள சந்து பொந்துகளிலும் சாலைகளிலும் சென்று மதுவை யாரும் அருந்தவோ விற்கவோ கூடாது என்று அலாவுதீன் கில்ஜியின் அறிவிப்பை மக்களுக்கு அறிவித்தனர்.

அனுமதி பெற்றிருந்த மதுக்கடைக்காரர்கள், மது காய்ச்சுபவர்கள் டில்லியை விட்டுத் துரத்தப்பட்டனர். அவர்கள் அலாவுதீன் கில்ஜியின் அரசாங்கத்திற்குத் தர வேண்டிய பாக்கித் தொகையும் தள்ளுபடி செய்யப்பட்டது. மேல் குடிமக்கள் கஷ்டப்பட்டு குடிப்பதை நிறுத்தினர். அடித்தட்டு மக்கள் இரகசியமாக சாராயம் காய்ச்சினர். டில்லிக்கு வெளியே இருந்து திருட்டுத்தனமாக சாராயத்தை கொண்டு வந்து விற்கவும் செய்தனர். அலாவுதீன் கில்ஜி இது பற்றி அறிந்ததும் அதிகக் கோபங்கொண்டு, மதுவிலக்கு சட்டங்களை மீறுபவர்களை கைது செய்து பதௌன் வாயிலின் அருகே உள்ள பாதாளச் சிறையில் அடைத்திட உத்தரவிட்டார். பலர் சிறையில் மாண்டனர். ‘கஞ்சா’ குடிப்பதும், சூதாடுவதும் தடை செய்யப்பட்டது. மொத்தத்தில் அலாவுதீன் கில்ஜியின் மது ஒழிப்புத்திட்டம் எதிர்பார்த்த பலனை அளித்து விட்டது என்றே கூற வேண்டும் என்பார் பேராசிரியர் டி.ஆர். இராமச்சந்திரன்.

‘குடிக்கும் பழக்கத்தைத் தாமும் கைவிட்டு சுல்தான் ஓர் எடுத்துக்காட்டாக விளங்கினார். மது அருந்தும் அவருடைய கிண்ணங்கள் எல்லாம் பொடிப் பொடியாக்கப்பட்டன’ என்று An Advanced History of India இந்தியாவின் சிறப்பு வரலாறு நூலில் பேராசிரியர் ஆர்.சி. மஜூம்தார் குறிப்பிடுகிறார். (ஆங்கில நூல் பக்கம் 306. தமிழ் நூல் தொகுதி II பக்கம் 46)

மொத்தத்தில் மதுவை ஒழித்திட சட்டம் பிறப்பித்து கடுமையான தண்டனைகள் தரப்பட்டன. அதன்படியே வாழ்ந்து காட்டிய அதிசய அரசர் அலாவுதீன் கில்ஜியன்றோ.

விலைவாசி கட்டுப்பாட்டுத் திட்டம்

ஏழை எளிய மக்களை வாழ வைத்திடும் நோக்கத்துடன், குறிக்கோளுடன் இன்றைய அரசாங்கங்கள் பல திட்டங்களை

நாள்தோறும் செயல்படுத்தி வருவதை நாமும் பார்த்து வருகிறோம். ஆனால் சுமார் 700 ஆண்டுகளுக்கு முன்னரே அலாவுதீன் கில்ஜி அதுபோன்ற திட்டங்களை செயல்படுத்தினார். அவற்றில் மிக முக்கியமானது விலைவாசி கட்டுப்பாட்டு முறையாகும். அதன் மூலம் அலாவுதீன் கில்ஜியின் ஆட்சி சிறப்பை நாம் அறிந்து கொள்ள முடிகிறது. ஆனால் அத்திட்டம் அலாவுதீன் கில்ஜியால் கொண்டு வரப்பட்டதை வரலாற்றாசிரியர் சிலர் ஐயமும் கொள்வதுண்டு, ஆனால் அது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல.

வரலாற்றாசிரியர் மூர்லண்டு தனது நூலில் இது குறித்து தெள்ளத் தெளிவாக எடுத்துரைத்துள்ளார். (W.H. Moreland, The Agrarian system of Moslem India. Cambridge. 1929. Page 36, 37)

விலைவாசி கட்டுப்பாட்டுத் திட்டம், தான் கொண்டு வந்ததே என்பதை கற்பனையாகச் சொல்ல வேண்டிய அவசியம் அலாவுதீன் கில்ஜிக்கு இல்லை. அன்றைய பொருளாதார நிலை அத்தகைய திட்டத்தை தோற்றுவிக்கத்தக்கதாக இருந்தது என்பதை எவராலும் மறுக்க முடியாது. அலாவுதீன் கில்ஜி திறமையான அரசர். அவருக்கு ஆலோசனை கூற மதிநுட்பம் வாய்ந்த அமைச்சர்கள் பலர் இருந்தனர். எனவே விலைக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை உருவாக்குவது எளிதானது. அத்தோடு அதனை நடைமுறைப்படுத்திட அனைத்தும் அலாவுதீன் கில்ஜியிடம் இருந்தது. எனவே விலைவாசிக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைத் அலாவுதீன் கில்ஜியின் அரசு வகுத்தது என்பது ஏற்றுக் கொள்ளக் கூடியது என்பார் டபிள்யூ. எச். மூர்லண்டு.

ஊழலை ஒழித்த அதிசய மன்னர்

ஷேக் நசீர் உத்தீன் கி.பி. 1276–1277இல் அவுத்தில் பிறந்தவர். கி.பி. 1356 வரை வாழ்ந்தவர். தனது 43வது வயதில் நிஜாமுத்தீன் அவுலியாவைச் சந்தித்து அவரது இருப்பிடத்திலேயே சேர்ந்தார். அவர் கைர் உல் மஜாலிஸ் என்னும் நூலை எழுதியுள்ளார். இஸ்லாமிய சூபிகளைப் பற்றிக் கூறும் அந்த நூலில் பெரோஸ் ஷா துக்ளக் (1351–1386) ஆட்சியின் போது ஒரு நாள் ஷேக் நசீர் உத்தீன், காஜி ஹமீதை அவுத்தில் சந்திக்க நேர்ந்தது. உடனே அவர் தமது இல்லத்திற்கு விருந்துக்கு அழைத்துச் சென்றார்.

விருந்து நிறைவேறியதும், மற்றவர்கள் சென்றபின் அலாவுதீன் கில்ஜி பற்றிய அரிய தகவல் ஒன்றை ஷெய்க் நசீர் உத்தீனுக்கு காஜி ஹமீத்கான் எடுத்துரைத்ததை தனது கைர் உல் மஜாலிஸ் பாரசீக நூலில் பக்கம் 231இல் சொல்லியுள்ளார்.

அலாவுதீன் கில்ஜியின் அறைக்குள் காஜி ஹமீத் உத்தீன் ஒரு நாள் சென்றார். அப்போது அலாவுதீன் கில்ஜி தலைப்பாகை இன்றி சிறிய நாற்காலியில் அமர்ந்து ஆழ்ந்த சிந்தனையில் இருந்தார். காஜி ஹமீத் உத்தீன், அலாவுதீன் கில்ஜியின் அருகே சென்றபோதும் அதைக் கவனியாது அவர் இருந்தார். ஆகவே காஜி ஹமீத் உத்தீன் வெளியே வந்து, வெளியில் இருந்த மாலிக் காரா பெக்குவிடம் சொன்னார். உடனே மாலிக் காரா பெக் உள்ளே சென்று அலாவுதீன் கில்ஜியிடம் பேச்சுக் கொடுக்க ஆரம்பித்தார். காரா பெக்கைப் பின் தொடர்ந்த காஜி ஹமீத் உத்தீனும் அலாவுதீன் கில்ஜியிடம் பேச்சுக் கொடுக்க ஆரம்பித்தார். அப்போது அலாவுதீன் கில்ஜியிடம் வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பித்திட அனுமதி கேட்டார்; அலாவுதீன் கில்ஜியும் அனுமதி வழங்கினார்.

“அடியேன் தங்களது அறைக்கு வந்தபோது தாங்கள் தலையினைத் துணி கொண்டு மூடாமல் சிந்தனையில் மூழ்கியிருந்தீர்கள். அலாவுதீன் கில்ஜி அவர்களே! தாங்கள் எதைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கிறீர்கள்?” என்று

கேட்டார். அதற்குப் பதிலளித்த அலாவுதீன் கில்ஜி: “எல்லாம் வல்ல இறைவன் அநேகரைப் படைத்திருப்பினும், அவர்களுக்கெல்லாம் தலைவராக என்னை நியமித்திருக்கிறான். ஆகவே எல்லா மக்களுக்கும் நன்மை விளைவிக்கக் கூடிய நற்காரியத்தை அடியேன் செய்ய வேண்டும். அதற்காக நான் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி என்னை நானே கேட்டுக் கொண்டேன்; என்னுடைய சொத்துக்களை எல்லாம் பகிர்ந்து அளித்திடலாமா என ஒரு கணம் யோசித்தேன். நான் வைத்திருக்கும் சொத்துகளைப் போல நூறு மடங்கு சொத்துகள் வைத்திருந்தாலும் எல்லோரையும் திருப்தி செய்யும் அளவிற்கு எல்லோருக்கும் கொடுக்க இயலாது. என்னுடைய கிராமங்களையும் மற்ற பகுதிகளையும் அனைவருக்கும் பகிர்ந்தளித்திடலாமா என்று சற்று யோசித்தேன். எல்லோருக்கும் அளிக்கும் அளவிற்கு அவை என்னிடம் இல்லை என்பதையும் உணர்ந்தேன். ஆகவே அப்பிரச்சனையை எவ்வாறு தீர்ப்பது என்பதை மீண்டும் மீண்டும் யோசித்துக் கொண்டிருந்தேன். இப்போது எனக்கு ஒரு யோசனை தோன்றியுள்ளது.

டில்லிக்கு உணவு தானிய வகைகளைக் கொண்டு வரும் நாயக்குகளை டில்லி வருமாறு ஆணையிடப் போகிறேன். அவர்களுள் சிலர் ஓரிடத்தில் இருந்து மற்றோர் இடத்திற்கு தானிய வகைகளை எடுத்துச் செல்லப் பயன்படுத்துகின்ற மிருகங்கள் பத்தாயிரம் அளவில் உள்ளது. சிலர் இருபதாயிரம் வைத்துள்ளார். அவர்கள் அனைவரையும் அழைத்து, சிறப்பு ஆடைகளை அவர்களுக்கு அளித்து, வியாபாரத்திற்காகவும் அவர்களது குடும்பச் செலவிற்காகவும் அரசாங்கக் கருவூலத்திலிருந்து முன்பணம் கொடுத்திட ஏற்பாடு செய்ய இருக்கிறேன். அத்தோடு அவர்கள் உணவு தானியங்களை ஏனைய இடங்களில் வாங்கி டில்லிக்கு கொண்டு வந்து நான் நிர்ணயிக்கும் விலையில் விற்க வேண்டும். எனவே அதற்காக பல கட்டளைகளைப் பிறப்பிக்கப் போகிறேன்” என்று கூறினார்; அவ்வாறே கட்டளைகளையும் பிறப்பித்தார்.

அதன் விளைவாக எல்லாத் திசைகளில் இருந்தும் தானிய வகைகள், உணவுப் பொருட்கள் டில்லிக்கு வரத் துவங்கின.

சில நாட்களில் 7 ஜிட்டால்களுக்கு (ஓர் அளவு) ஒரு மணங்கு தானியம் கிடைக்குமளவிற்கு விலை குறைந்துவிட்டது. நெய், சர்க்கரை போன்ற ஏனைய உணவுப் பண்டங்களின் விலையும் மலிவாயிற்று. அலாவுதீன் கில்ஜியின் நடவடிக்கையால் எல்லா மக்களுமே நன்மை அடைந்தனர்.

இவ்வாறாக, காஜி ஹமீத் உத்தீன் கூறியதாக ஷேக் நசீர் உத்தீன் கூறியுள்ளார். அத்தோடு ''இவ்வளவு சிறப்பு மிக்க செயலைப் புரிந்த அலாவுதீன் கில்ஜிக்கு இறைவன் அருள் புரிய வேண்டும்'' என்று அவர் கூறி முடித்தார்.

அமீர் குஸ்ரு 1311இல் வெளியிட்ட கஸாயின் உல் ஃபுதூஹ் நூலில் அலாவுதீன் கில்ஜி, தானிய வகைகளை மலிவாகக் கிடைக்கும்படி செய்தார் என்றும் அதனால் பட்டணங்களிலும் கிராமங்களிலும் வாழ்ந்த மக்கள் பஞ்சகாலத்தில் பெரும்பயன் அடைந்தனர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

சிறு குழந்தைகளைக் கூட அனுப்பி, சாமான்களை வாங்கி வரச் சொல்லி, கடைகளில் குறிப்பிட்ட பொருட்கள், குறிப்பிட்ட விலையில் விற்கப்படுகின்றதா என்று கண்டறியவும் அலாவுதீன் கில்ஜி ஏற்பாடு செய்திருந்தார் என்றும் அமீர் குஸ்ரு தெரிவித்துள்ளார். (Mohammed Wahid Mir, The life and works of Amir Khusru, First Edition 1935, reprint 2012, Delhi, Page 109)

தாருல் அதல்

அலாவுதீன் கில்ஜி தார் உல் அதல் எனும் அமைப்பை நிறுவினார். அதன் மூலம் பொதுமக்களுக்கு தேவைப்படுகின்ற அனைத்துப் பொருட்களையும் கொண்டு வந்து சேர்த்தார்.

வெளியிலிருந்து கொண்டு வரப்பட்ட எல்லா வகையான துணி மூட்டைகளும், ஏனைய பொருட்கள் அடங்கிய மூட்டைகளும் அங்கு விற்கப்பட்டன. துணிகளின் சந்தைக்கு மாலிக் யாகூப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார்.

துணிக்கடைகள் காலைத் தொழுகைக்குபின் திறக்கப்பட்டு, இரவுத் தொழுகைக்கு முன் மூடப்படும். விற்பனையாகாதவற்றை

மீண்டும் மூட்டைகளாகக் கட்டி எடுத்துச் செல்ல அனுமதி கிடையாது. அதன் விளைவாக ஒவ்வொருவரும் தமக்குத் தேவைப்பட்ட பொருட்களை தேவையான அளவு ஆரவாரமின்றி வாங்கிக் கொள்ள வழி ஏற்பட்டது என்று அமீர் குஸ்ரூ எழுதியுள்ளார். (தாரீக் இ அலாயி அல்லது கஸாயின் உல் ஃபுதூஹ், பக்கம் 21-24) மலிக் கபூல் உலூக் கானி என்பவர் தானிய அங்காடியின் மேற்பார்வை அதிகாரி. அவருக்கு உதவி செய்திட படை ஒன்றும் அளிக்கப்பட்டது. அவருக்கு அதிகளவில் அதிகாரங்கள் அளிக்கப்பட்டன. அவருக்கு பெரிய இக்தா (நிலம்) வழங்கப்பட்டது. நகர வியாபாரிகள், ஊர் ஊராகச் செல்லும் வணிகர்கள் அவரது கட்டுப்பாட்டின் கீழ் இருந்தனர். உரிய காலத்தில் டில்லிக்குள் தானியங்களை கொண்டு வந்து சேர்க்கச் செய்வது அவரது முக்கிய பணியாகும்.

அரசு நிர்ணயித்த விலைக்கு அவர்கள் பொருட்களை விற்கிறார்களா என்று கண்காணித்தும் பதுக்கல் ஏதும் நடைபெறாமல் பாதுகாத்துக் கொள்ளவும், என்ன பொருள் என்ன விலைக்கு விற்கப்பட்டது என்ற தகவலையும் அவர் அலாவுதீன் கில்ஜியிடம் அறிவித்திட வேண்டும். அங்காடி நிலவரங்களை அலாவுதீன் கில்ஜி வேறு வழிகளிலும் அறிந்து கொள்வார். அங்காடி மேற்பார்வையாளர் அளிக்கும் செய்திக்கும் மற்றவர்கள் அளித்திடும் செய்திக்கும் வித்தியாசம் இருந்தால் அலாவுதீன் கில்ஜி உடனடியாக விசாரணைக்கு ஏற்பாடு செய்வார்.

தவறான தகவலைத் தந்தவர் எந்தப் பொறுப்பில் இருந்தாலும் அவர்களுக்கு கடுமையான தண்டனைகள் தரப்படும். இதனால் அனைவரும் பயந்து பணியாற்றினர். மழையில்லாததால் பஞ்சமேற்பட்டது. வியாபாரிகள் துயரப்படுகிறார்கள். எனவே விலையை உயர்த்த பரிந்துரைக்கப்பட்டபோது, அலாவுதீன் கில்ஜி கோபமுற்றார். அருகிலிருந்தவரை அழைத்தார். மேற்பார்வை யாளருக்கு இருபது பிரம்படிகள் தரப்பட்டது. இது அலாவுதீன் கில்ஜி தனது விலைக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை எவ்வளவு கடுமையாக நிறைவேற்றினார் என்பதற்கு சான்றாகும். (Maulana Ziyauddin Barani, Tariki-i-Firoz Shahi, Calcutta, 1862, Page 308) அங்காடியை கவனமாக கண்காணித்திட பரீத் இ மண்டி என்பவரை நியமித்து,

அங்காடிக்கு கொண்டுவரப்பட்ட பொருட்களின் தரத்தைக் கண்காணிக்கும் பணியை அவரிடம் வழங்கினார். முன்கியான் எனும் தற்கால இரகசிய காவல்காரர்களையும் தனக்கு தனியாகச் செய்தி அனுப்ப நியமித்தார். யாரேனும் ஒரு அதிகாரி மற்றொரு அதிகாரியை சரிகட்டிக் கொண்டு, தங்கள் விருப்பம் போல பொருட்களை விற்க வியாபாரிகள் முயற்சி செய்யாமலிருக்க இம்முறை பின்பற்றப்பட்டது. அதிகாரிகளும் வியாபாரிகளும் ஒழுங்காக நடந்து கொள்ள இதுவழி வகுத்தது. W.H. மேள்லெண்டும், A.C. சாட்டர்ஜியும் எழுதிய இந்திய வரலாற்றுச் சுருக்கம் என்ற நூல் 1951இல் M.W. பெருமாள் முதலியாரால் தமிழாக்கம் செய்யப்பட்டு, 687 பக்கங்களில் வெளிவந்தது.

அதில் பக்கம் 209:

"டில்லியில் ஆட்சி செய்த துருக்கிய அரசர்கள் எல்லோரிலும் அலாவுதீன் கில்ஜியே மிகுந்த திறமை வாய்ந்தவர்".

பக்கம் 209–210:

"அலாவுதீன் கில்ஜி மிகுந்த திறமையுடையவன் என்பதை யாரும் மறுக்க முடியாது"

பக்கம் 215:

உணவுப் பொருள்களின் விலைகளைக் குறைப்பதற்கு அலாவுதீன் கில்ஜி கையாண்ட முறைகள் அடிப்படையில் மிகவும் புத்திசாலித்தனமானவை. உணவுப் பொருள்களின் விநியோகத்தைக் கட்டுப்படுத்தினார்.

பக்கம் 216:

"கடைக்காரர்கள் பொருள்களின் எடையைக் குறைத்து விற்றார்களானால் அவர்கள் எவ்வளவு எடை குறைத்து விற்றார்களோ அவ்வளவு எடையுள்ள சதையை அவர்கள் உடலிலிருந்து அறுத்து எடுத்துவிட வேண்டும் என்று அலாவுதீன் கில்ஜி உத்தரவு போட்டதால் கடைக்காரர்கள் அவ்வாறு திருட்டுத்தனம் செய்யும் வழக்கத்தை அறவே மறந்து விட்டார்கள். இவ்வாறு பல கொடூரமான முறைகளைக் கையாண்டதால் பங்கீட்டு முறை வெற்றியடைந்தது. அதனால் பொருள்களின் விலையும் குறைந்தது."

நியாய விலைக் கடைகளின் முன்னோடி

“சமகால வரலாற்று ஆசிரியர்களுக்கு, சந்தையைக் கட்டுப்படுத்துவதற்கான அலாவுதீன் கில்ஜியின் நடவடிக்கைகள் உலக அதிசயங்களில் ஒன்றாக விளங்குகிறது. உணவு தானியங்களில் ஆரம்பித்து, சர்க்கரை, சமையல் எண்ணெய் முதல் ஊசி வரை உள்ள அனைத்துச் சரக்குகளுக்கு மட்டுமல்லாமல் விலைமதிப்பான இறக்குமதித் துணிகள் மற்றும் குதிரைகள், கால் நடைகள், அடிமைகள் என்று அனைத்துச் சரக்கிற்கும் விலையை நிர்ணயம் செய்து டில்லியில் மூன்று சந்தைகளை அமைத்தார். வரலாற்று ஆசிரியர் பரணி ‘தானியச் சந்தையின் நிலையான விலை அக்காலத்தில் அதிசயம்’ என்று குறிப்பிடுகிறார். இத்தகவலைத் தருவது மத்திய கால இந்திய வரலாற்று நூலைத் தந்த சதீஷ் சந்திரா.

(Satish Chandra, History of Medieval India, Orient Black Swan, Hyderabad, First published 2007, reprinted 11th edition 2018, page 101, page, 103)

உணவிற்கு அடுத்த மக்களின் தேவை ‘உடை’ ஆகும். பதௌன் வாயிலின் அருகே காலியாக உள்ள இடத்தில் ரியாய அரண்மனையில் சராயே அதல் (Sarai Adl) அமைத்தார். விரைவில் கெட்டுப் போகாத துணிகள் வெகு நாட்கள் அங்கு வைக்கப்பட்டது. துணிகள் தவிர இதர பொருட்களும் காலை முதல் மாலை நேர பிரார்த்தனை நேரம் வரை திறந்து வைக்கப்பட்டிருந்தது. (A Comprehensive History of India, Edited by M.Habid and K.A.Nizami, Delhi 2006, page 382)

பொருள்களை உற்பத்தி செய்ததற்காக செலவிடப்பட்ட தொகையை அலாவுதீன் கில்ஜி கருத்தில் கொண்டே மார்க்கெட்டில் விலையை நிர்ணயித்தார்.

வியாபாரிகள் தொலைதூரத்திலிருந்து பொருள்களைக் கொண்டு வரும்போது நஷ்டம் ஏதும் ஏற்பட்டால் அரசு உதவிப் பணமும் அளித்துள்ளது. மூல்தானிய வியாபாரிகளுக்கு இரண்டு

லட்சம் டங்காக்களை அலாவுதீன் கில்ஜி வழங்கினார்.

ஆனால் வியாபாரிகளுக்கு நியாயமான அளவில் இலாபம் கிடைத்திடும் வகையிலேயே மார்க்கெட்டில் விலை நிர்ணயம் செய்யப்பட்டது என்று பரணி குறிப்பிடுகிறார்.

டில்லியில் இந்த அங்காடியில் விற்பனையாகும் உயர் ரகத்துணிகளை வியாபாரிகள் விலைக்கு வாங்கி, டில்லிக்கு வெளியே கொண்டு சென்று அங்கு அதனை அதிக விலைக்கு விற்பதாக அலாவுதீன் கில்ஜி அறிந்தார். அதனைத் தடுத்து நிறுத்திட வழி கண்டார். அதன்படி விலை உயர்ந்த துணி மணிகள் அனுமதி பெற்றவர்களுக்கே விற்கப்பட்டன. அத்தகைய துணிகள் வாங்க விரும்புவோர் அதற்கென நியமிக்கப்பட்ட அரசாங்க அதிகாரியை நாடி அந்தப் பொருளின் பெயரையும், அளவையும் அவர்களிடம் கொடுக்க வேண்டும். அவர்களது வருமானத்தையும் அறிவித்தனர். அதிகாரிகள் பரிசீலனை செய்த பிறகு அவை சொந்த உபயோகத்திற்காக வாங்கப்படுகிறது என்று அரசாங்க அதிகாரி கருதினால் மட்டும் அனுமதி பத்திரம் வழங்கப்பட்டது. இத்திட்டம் அடியோடு ‘கள்ளமார்க்கெட்டை’ ஒழித்தது. (கே.எஸ். லால், முற்கூறிய நூல், பக்கம் 210)

எல்லாப் பொருட்களுக்கும் அன்றைய அரசு அறிவித்த விலைப்பட்டியல் உள்ளது. அது இன்று அவசியமில்லை என்பதால் அவைகளை விட்டு விடுகிறேன்.

குதிரைகள் அங்காடி

குதிரை வியாபாரிகள் அடக்கப்பட்டனர். குதிரைகள் விலை ஏறுவதற்கு காரணமான தரகர்களை முற்றிலுமாக ஒழித்திடாமல், அவர்கள் உதவியுடன் தரமான குதிரைகளை வாங்கிட வேண்டியிருப்பதால், அவர்களைத் தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொண்டார் அலாவுதீன் கில்ஜி.

நாற்பது அல்லது அறுபது நாட்கள் கழிந்த பிறகும் விற்கப்பட்ட குதிரையும் அதற்கு உடந்தையாக இருந்த தரகரும் அலாவுதீன் கில்ஜி முன்னால் கொண்டு வரப்பட்டு விசாரணை நடைபெற்றது. தரகர்கள் தவறிழைத்திருந்தால் கடுமையான தண்டனைகள்

தரப்பட்டது. ஒற்றர் படையும் தனது பணியினைச் செம்மையாக செய்தது. அதனால் குதிரைகளின் விலை கட்டுப்பாட்டிற்குள் இருந்தது. அதற்குப் பிறகு குதிரை வியாபாரிகளிடம் அலாவுதீன் கில்ஜி கருணை காட்டினார். அவர்களை சிறையிலிருந்து விடுவித்தார். குதிரைகளை வாங்கவும் விற்கவும் அனுமதித்தார். ஆனால் அரசாங்கம் குறிப்பிட்டிருந்த விலைகளுக்கு மேலாக அவர்கள் குதிரைகளை விற்க முடியாது.

(கே.எஸ். லால், முற்கூறிய நூல், பக்கம் 212)

கால்நடைகளின் விலைகளையும் அலாவுதீன் கில்ஜி நிர்ணயித்திருந்தார். முந்தைய குதிரை வணிகத்திற்கான சட்டங்களே இங்கேயும் பின்பற்றப்பட்டது.

பொது அங்காடிகள்

நகரின் எல்லாப் பகுதிகளிலும் பொது அங்காடிகள் அமைக்கப்பட்டன. அது வணிக அமைச்சரின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது.

தொப்பி, சீப்பு, ஊசி, பால், காய்கறிகள், ரொட்டி, மீன், வெற்றிலைபாக்கு, பூக்கள் அவற்றின் விலையை அலாவுதீன் கில்ஜியே நிர்ணயித்து அங்காடிகளுக்கு அனுப்பி வைத்தார்.

மாலிக் யாகூப் வணிக அமைச்சர், முஹ்தாசிப் (தணிக்கை அதிகாரி); நாசீர் (அளவை மேற்பாவையாளர்) இவ்மூன்று பேர்களும் இணைந்தே பணிபுரிந்தனர்.

அங்காடிகளில் பொருட்கள் அனைத்தும் விற்பதற்காக அலாவுதீன் கில்ஜியால் தயாரிக்கப்பட்ட விலைப் பட்டியல்கள் திவான்– சி – ரியாசத் வணிக அமைச்சகத்திற்கு அனுப்பப்பட்டன.

வணிக அமைச்சகத்திலிருந்து பட்டியல்கள் மேற்பார்வை யாளர்களுக்கு அனுப்பப்பட்டது. அவர்கள் கடைகளில் சென்று அங்கு பொருட்கள் எந்த விலையில் விற்கப்படுகிறது என்பதனை தெரிந்து கொடுக்கப்பட்ட விலைப் பட்டியலும், விற்கப்பட்ட விலையும் சரியாக இருக்கிறதா என்பதனைக்

கண்டறிந்திட அலாவுதீன் கில்ஜி ஆணையிட்டிருந்தார். அரசு அறிவித்த விலையை விட அதிகமான விலையில் விற்றிருந்தால் கடுந்தண்டனை வழங்கப்பட்டது. கடைக்காரர்கள் சவுக்கடிகளை சன்மானமாகப் பெற்றனர்.இவ்வளவையும் மீறி சில நேரங்களில் கடைக்காரர்கள் ஏமாற்றுகிறார்கள்; எடை போடும் போது குறைக்கிறார்கள் என்பதை அறிந்து சிறிய பையன்களைச் சந்தைக்கு அனுப்பி சாமான்களை வாங்கி வரச் சொல்லி அதன் எடை சரியாக இருக்கிறதா என்று எடை போட்டு சரிபார்ப்பார் அலாவுதீன் கில்ஜி.

எடை குறைவாக இருந்தால் வணிக அமைச்சக அதிகாரியிடம் கொடுத்து அனுப்புவார். அவர் அந்தக் கடைக்கு விரைவார். எவ்வளவு எடை குறைந்ததோ அந்த அளவு அந்த வியாபாரியின் சதை வெட்டி எடுக்கப்படும். இவ்வாறு அச்சுறுத்தி, விலைக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை அலாவுதீன் கில்ஜி வெற்றிகரமாக செயற்படுத்தி வந்தார். அது அலாவுதீன் கில்ஜியின் மிகச் சிறந்த சாதனைகளில் ஒன்றாகும். (K.S. Lal, முற்கூறிய நூல், பக்கம் 215)

இத்திட்டம் நகரங்கள், பேரரசு பகுதிகளில் செயல்பட்டதாக பரணி குறிப்பிடுகிறார். சிலர் அதை மறுக்கிறார்கள். டில்லியில் மட்டுமே இருந்தது என்கிறார்கள். அதுவும் அவரது படைவீரர்கள் இருந்ததால்தான் என்கிறார்கள். டில்லியில் மட்டுமா படைவீரர்கள் இருந்தனர். அலாவுதீன் கில்ஜியின் ஏனைய ஆட்சிப் பகுதிகளிலும் அவர்கள் இருந்தனர். எனவே அத்திட்டம் அலாவுதீன் கில்ஜி ஆட்சிப் பகுதிகளில் முழுவதுமாக நடைமுறைப்படுத்தப்பட்டது என்பதே சரியாகும்.

ராஜபுத்திரர்கள்

ராஜபுத்திரர் என்ற சொல் அரச குமாரர்கள் அல்லது அரசவம்சத்தைச் சேர்ந்தவர்கள் என்ற பொருளில் பழைய நூல்களில் காணப்படுகிறது.

ராஜபுத்திரர் - ஆண் பாலருக்கும் ராஜபுத்திரி - பெண் பாலருக்கும் பயன்படுத்தப்பட்ட சொல்லாகும்.

சத்திரிய குலத்தைச் சேர்ந்தவர்களும் இராஜபுத்திரர்கள் என்று அழைக்கப்பட்டனர் இதனை மகாபாரதம் அறிவிக்கிறது என்று சி.வி. வைத்யா (C.V. Vaidya, History of Medieval Hindu India) சுட்டிக் காட்டுகிறார். எனினும், ராஜஸ்தானத்தை அல்லது ராஜபுதனத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமே ஏன் ராஜபுத்திரர்கள் என்று அழைக்கப்பட்டனர் என்ற கேள்விக்கு விடை காணுவதற்குப் போதிய, போதுமான சான்றுகள் இல்லை.

மற்றப்பகுதிகளைச் சேர்ந்த சத்திரியர்கள் பலரும் இந்து மதத்தைக் கைவிட்டு பௌத்தம், சமணம் போன்ற பிற மதங்களைத் தழுவிக் கொண்டனர். அப்போது ராஜஸ்தானத்தைச் சேர்ந்த சத்திரியர்கள் மட்டுமே தொடர்ந்து இந்து சமயத்தைச் சார்ந்தவர்களாக இருந்தார்கள். எனவே உண்மையான ஆளும் வகுப்பைச் சேர்ந்த தூய்மையான சத்திரியர்கள் தாங்களே என்று அறிவித்துக் கொள்ளும் வகையில் ராஜபுத்திரர்கள் என்ற பெயரை இவர்கள் தங்களுக்கு சூட்டிக் கொண்டிருக்கலாம் என்று சி.வி. வைத்யா (முற்கூறிய நூல்) கருதுகின்றார். ராஜபுத்திர வம்சங்கள் இந்து சத்திரிய வம்சங்கள் என்று யுவான் சுவாங் குறிப்பிட்டுள்ளதையும் சி.வி. வைத்யா சுட்டிக்காட்டுகிறார்.

யுவான் சுவாங்கின் நூலான சி-யூ-கி-யில் சத்திரியர்கள் என்று அழைக்கப்படுகின்றனரேயொழிய, 'இராஜபுத்திரர்கள்' என்று குறிப்பிடப்படவே இல்லை.

பத்து அல்லது 11ஆம் நூற்றாண்டுக்கும் பின்னரேதான் இராஜபுத்திரர் என்ற பெயர் இவர்களுக்கு வழங்கலாயிற்று.

"வெளியிலிருந்து வந்து, கி.பி. ஐந்தாம், ஆறாம்

நூற்றாண்டுகளில் இந்தியாவிற்குள் புகுந்து நாளடைவில் ஹிந்து சமுதாயத்தில் கலந்து, சத்திரியர்களாக மாறிப்போன அந்நியர்களே இராஜபுத்திரர்கள் என்று கர்னல் டாட் கருதுகிறார். வரலாற்றிஞர் D.R. பண்டார்கரும் அதனை ஆமோதிக்கிறார்.

இராஜபுத்திர குலங்களில் பல இந்தியாவின் மீது படை எடுத்து வந்த சாகர்கள் அல்லது குஷாணர்கள் காலத்தைச் சேர்ந்தவர்கள்; குறிப்பாக கி.பி. 480 இல் குப்தப் பேரரசை அழித்த வெள்ளை ஹூணர்கள் காலத்தைச் சேர்ந்தவர்கள். பிற்காலத்திய மக்களோடு தொடர்புடைய கூர்ஜரக் குலமானது இந்து சமயத்தைத் தழுவிற்று. அக்குலத்தின் தலைவர்களின் வம்சத்திலேயே முக்கியமான இராஜபுத்திரக் குடும்பங்கள் பிற்காலத்தில் தோன்றின. அரசாட்சி புரியத் தலைப்பட்ட இக்குடும்பத்தினர் தமது செல்வாக்கை விரிவாக்கிக் கொள்ளும் நோக்கத்துடன் பிராமண சமயத்தையும் பழக்க வழக்கங்களையும் தழுவலாயினர். அப்பொழுதுதான் இராமாயணம், மகாபாரதம் ஆகிய இதிகாசங்களின் கதாநாயகர்களோடு, தங்களைத் தொடர்புபடுத்திக் கொள்ளும் பல கதைகளை உருவாக்கினர். இராஜபுத்திர வம்சங்கள் சூரியனுடனும், சந்திரனுடனும் தொடர்பு உடையவை என்ற கதைகள் இவ்வாறு தோன்றியமையே என்பார் வில்லியம் குருக்.

(முற்கூறிய டாட் எழுதிய நூல் பதிப்பாசிரியர் வில்லியம் குருக் எழுதிய முன்னுரை பக்கம் XXXI)

வரலாற்று அறிஞர் வின்ஸ்டன் ஸ்மிதி அவர்களும் இதையொத்த கருத்துகளையே வெளியிட்டார்.

“ராஜஸ்தானத்திலும், மேற்கு கங்கைச் சமவெளியிலும் புகுந்த அந்நிய குலத்தினர். சுதேச அரசர்களுடன் மோதிய போர்களில் முற்றிலுமாக அழிந்து போகவில்லை. அவர்களில் பலர் மடிந்து போனாலும் வேறு பலர் உயிருடன் எஞ்சியிருந்து இந்திய மக்களோடு கலந்து போயினர்.

தங்களுக்கு முன்பு இந்தியாவிற்குள் வந்த சாகர்கள் யுவேச்சியர்களைப் போலவே இவர்களும் இந்து சமுதாயத்தில் கலந்து இந்துக்களாயினர். இவர்களுள் குறுநில மன்னர்களாகவும்

சிற்றரசர்களாகவும் உயர்ந்த சிலரும் அவர்களது சுற்றத்தினரும் வம்சத்தினரும் சத்திரியர்கள் எனவும் இராஜபுத்திரர்கள் எனவும் மற்ற இந்து அரச குடும்பங்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டனர். ஐந்து, ஆறாம் நூற்றாண்டுகளில் வட இந்தியாவிற்குள் நுழைந்த பல அநாகரிக அந்நிய குலத்தினரே பிரதிகாரர்கள் அல்லது பரிகாரர்கள் போன்ற பல புகழ்மிக்க இராஜபுத்திர குலங்களாகப் பின்னர் உருவாயினர்.

அந்த அந்நியர்களில் கீழ்மட்டத்தைச் சேர்ந்த சாதாரண மனிதர்களே கூஜர்கள்; இராஜபுத்திரர்களுக்குக் கீழானவர்களாக ஆனார்கள். இவர்களுக்கு தெற்கில் வாழ்ந்து வந்த சுதேசப் பழங்குடி மக்களும் இதுபோல இந்துக்களாக மாறிப் பரிணாமடைந்தனர்.

கோண்டுகள், பார்கள், கார்வாக்கள், போன்ற பழங்குடியினர் இவ்வாறு தான் சந்தெல்லர்கள், ரத்தோர்கள், சகர்வார்கள் போன்ற இராஜபுத்திர குலங்களாக நாளடைவில் மாறினர். சூரியன், சந்திரன் ஆகியவற்றின் வழியில் தாங்கள் வந்தவர்கள் என்று தங்களது வம்சாவளிகளில் இவர்கள் கூறிக் கொள்ளலாயினர்.

எவ்வாறாயினும் இராஜபுத்திரர்கள் நீண்ட நெடுங்காலமாக இந்தியாவில் வாழ்ந்து வந்தவர்களே என்று உறுதியாகக் கூறலாம்.

அலாவுதீன் கில்ஜியின் படையெடுப்பு

G.V. ராமய்யர் தனது நூலில் (இந்திய தேச சரித்திரம்) பக்கம் 57இல் தெரிவித்துள்ள ஒரு வாசகத்தை அப்படியே தருகிறேன். 'இராஜபுத்திரர்களிடம் நற்குணங்கள் பொருந்தியிருந்தபோதிலும், அவர்களுக்குள் ஒற்றுமை சிறிதேனும் கிடையாது. போர் புரிவது சத்திரியர்களுக்கு அழகு என்று நினைத்து ராஜபுத்திர வீரர்கள் அடிக்கடி போர் புரிந்து வந்தார்கள். அதனால் அவர்கள் பலமற்றவர்களாகி முகம்மதியர்களுக்கு (முஸ்லிம்களுக்கு) கீழ்படியும் படி ஏற்பட்டது'' என்று தெரிவித்துள்ளார்.

இராஜஸ்தானில் பொறுக்கி எடுக்கப்பட்டு ஆட்சியிலிருந்த சிலரின் வழி வந்தவர்களாக இராஜபுத்திரர்கள் இருக்கலாம். ஆனாலும் இவற்றிற்குரிய சான்று உறுதியாக எதுவுமில்லை.

இவர்கள் புதிய சத்திரியர்கள். ஆனால் அவர்கள் புராணங்களில் கூறப்படவில்லை என்பார் வரலாற்றாசிரியர் ரொமிலா தாப்பர். (The History of Early India, From the origins to AD 1300, Romila Thapar, Penguin, Gurgaon, Haryana, 2002, page 419)

இனி இராஜபுத்திர நாடுகள் மீது அலாவுதீன் மேற்கொண்ட போர் நடவடிக்கையை தொடர்ந்து பார்ப்போம்.

மாவீரன் அலெக்சாந்தரைப்போல் நாடுகளை தான் வெல்ல வேண்டும் என்றும் தன்னை இரண்டாம் அலெக்சாந்தர் (அலெக்சாந்தர் சிக்கந்தர் சானி) என்ற பட்டத்தைக் கொண்டும் அழைத்தார். அப்பட்டத்தை தனது நாணயங்களில் அச்சிட்டார். டில்லியில் தமக்குப் பதிலாக ஒருவரை ஆட்சியில் அமர்த்திவிட்டு, அலெக்சாண்டரைப் போல கிழக்கு நாடுகளையும் மேற்கு நாடுகளையும் வெல்லத் திட்டமிட்டார். அலாவுதீன் கில்ஜி ஆலோசனை நடத்தினார். அலா உல் முல்க், கிரேக்க நாட்டில் அலெக்சாந்தரது ஆட்சி உறுதியான அஸ்திவாரத்தில் அமைந்திருந்தது. ஆனால் அலாவுதீன் கில்ஜியின் ஆட்சியின் அடித்தளம் அத்தகைய தன்மையில் இல்லை என்றார்.

தமது படைகள், யானைகள், குதிரைகள் இவற்றை வைத்துக்

கொண்டு என்ன செய்ய என்று கேட்டார் அலாவுதீன் கில்ஜி. அதற்குப் பதிலளித்த அலாஉல் முல்க், ‘இந்துஸ்தானத்திலே சித்தூர், சாந்தேரி, மாளவம், தார், உஜ்ஜயினி, பீகார், வங்காளம் ஆகியவை இன்னும் டில்லியின் ஆதிக்கத்தினை ஏற்றுக் கொள்ளவில்லை. தென்னிந்தியாவிலும் முஸ்லிம்களின் ஆட்சி தொடங்கவில்லை என்றார். இறுதியில் அலாவுதீன் அலெக்சாந்தரைப் போல வெளிநாடுகளைப் பிடிக்கும் திட்டத்தைக் கைவிட்டார்.

மற்றைய படையெடுப்புகள் இப்போது நமக்கு அவசியமில்லை. இராஜபுத்திர நாடுகளின் மீது அலாவுதீன் கில்ஜி படையெடுத்ததைப் பற்றிப் பார்க்க வேண்டியது அவசியமாகிறது.

அலாவுதீன் கில்ஜியின் தாக்குதலுக்கு இலக்கான இராஜபுத்திர நாடுகளில் ஒன்று ஜெய்சால்மர் என்கிறார்கள். கோதுமை, பார்லி அங்கு விளையும்; அதோடு, மலை வளமும் உண்டு.

பால்பனது ஆட்சியில் கி.பி. 1286இல் இங்கு முதல் படையெடுப்பு நிகழ்ந்தது என்பார்கள். அது இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக நீடிக்கவில்லை. கி.பி. 1295இல் அலாவுதீன் கில்ஜி ஜெய்சால்மர் மீது படையெடுத்தார் என்று கூறப்படுகிறது.

அப்போது அதனை தூதா என்பவர் ஆட்சி புரிந்தார். சிறந்த போர் வீரரான இவர் துருக்கியர்கள் வசம் இருந்த பகுதிகளை அடிக்கடி தாக்கினார். பத்தாண்டுகள் ஆட்சி புரிந்த இவர் அஜ்மீர் வரை படையெடுத்துச் சென்றார்.

அனாசாகரில் நீர் அருந்த வந்த இஸ்லாமிய அரசரின் (அலாவுதீன் கில்ஜி) குதிரைகளைக் கைப்பற்றிக் கொண்டு தூதா தனது ஜெய்சால்மருக்குத் திரும்பினார். இது அலாவுதீன் கில்ஜியை ஆத்திரப்படுத்தியது. உடனே ஜெய்சால்மர் நோக்கிப் படையெடுத்தார். தூதா திலக்சிங் மற்றும் 700 பேர்கள் போரில் மாண்டனர். 16000 பெண்கள் போரின் போது தீ‘குளித்தனர்’ என்ற தகவல் தாரீக் இ மஆசூமி (Mirmasum, Tarikh-i-masumi, A History of Sindh Poona, 1938) நூலில் பக்கம் 44இல் காணப்படுகிறது. ஆனால் இந்த படையெடுப்பைப் பற்றி வேறு சமகால வரலாற்று

நூல்கள் எதிலும் காணப்படவில்லை. எனவே இப்படையெடுப்பே நடைபெறவில்லை என்று கூறுவோரும் உண்டு.

அலாவுதீன் கில்ஜி 1296இல்தான் அரசப் பொறுப்பிற்கு வந்தார். ஜெய்சால்மர் யுத்தம் 1286 இலிருந்து 1295க்கு இடையில் நடந்தது. எனவே இந்தப் படையெடுப்பை அலாவுதீன் கில்ஜி நடத்தவில்லை என்று சிலர் கூறுகின்றனர்.

இரண்தாம்பூர் படையெடுப்பு

இராஜபுத்திரர்களுக்கு எதிராக அலாவுதீன் கில்ஜி மேற்கொண்ட முதல் முக்கியமான படையெடுப்பு இரண்தாம்பூர் படையெடுப்பாகும். எளிதில் இரண்தாம்பூரை எவரும் கைப்பற்ற முடியாது என்றும், ஜலாலுதீன் அதைக் கைப்பற்றும் முயற்சியில் தோற்றார் என்றும் டில்லிக்கு வெகு அருகாமையில் அது இருக்கிறது என்றும் போர் நடவடிக்கைக்கு உகந்த முறையில் இரண்தாம்பூர் அமைக்கப்பட்டிருந்தது என்றும் பேசப்பட்டு வந்ததால் அதனை எப்படியும் வெல்ல வேண்டும் என்று அலாவுதீன் கில்ஜி முடிவெடுத்தார்.

குஜராத் படையெடுப்பிலிருந்து திரும்பி வரும்போது அலாவுதீன் கில்ஜியின் படைப்பிரிவினர் கலகம் செய்ததும், அது அடக்கப்பட்டதும் நாம் அறிந்ததே. அந்த வேளையில் முஹம்மது ஷா, அவரது சகோதரர் கெப்ரூ இருவரும் தப்பி ஓடி இரண்தாம்ரின் இராஜபுத்திர அரசரிடம் தஞ்சம் புகுந்தனர்.

இரண்தாம்பூரை அப்போது அரசு புரிந்தவர் சௌஹான் குலத்தைத் சேர்ந்த ஹமீர்தேவா, பிருதிவிராஜின் நேரடி வழித் தோன்றல் ஆவார். வீரமிக்க ஹமீர் தேவா மூன்று மாத பொன் வேய்ந்த அரண்மனை கட்டி அரசு புரிந்தவர் ஆவார். அலாவுதீன் கில்ஜியின் எதிரிகளான முஹமது ஷாவிற்கும் கெப்ரூவிற்கும் அடைக்கலம் கொடுத்த நிகழ்வு அலாவுதீன் கில்ஜிக்கு ஆத்திரத்தை அளித்தது. கி.பி. 1300இல் நஸ்ரத் கானும், உலூக்கானும் இரண்தாம்பூரைத் தாக்கினார்கள். 80,000 குதிரை வீரர்கள் கணக்கற்ற காலாட்படையினர் இரண்தம்பூரை நோக்கி போருக்குப் புறப்பட்டனர்.

ஹமீரின் அரசவையில் கவிஞராக விளங்கிய சாரங்கதர் 14ஆம் நூற்றாண்டில் 'ஹமீர்ராஸோ' 'ஹமீர் மகா கபிவ்யா' எனும் இருநூல்களைத் தந்துள்ளார். அதில் ஹமீர் மகா கபிவ்யாவில் ஆங்கில மொழிபெயர்ப்பில் முன்னுரையில் பக்கம் 29இல் இது குறித்த செய்தி காணப்படுகிறது.

உலூக்கான் போருக்குப் புறப்படுவதற்கு முன்பு தூதுவர்களை ஹமீரிடம் அனுப்பினார். தங்களது எதிரிகளான முகமது ஷா மற்றும் கெப்ரூ இருவரையும் கொன்று விடக் கோரினார். அதனை ஹமீர் ஏற்கவில்லை. என்னிடம் போதுமான அளவு பணமும், படையும் இருக்கின்றன; போர் புரிவதற்கு அஞ்சேன். என்னிடம் அடைக்கலம் புகுந்த துருக்கியர்களைக் கைவிடமாட்டேன் என்று பதில் தந்தார் இரண்தாம்பூரின் இராஜபுத்திர அரசர் ஹமீர்தேவா. (Abdulla Malik Isami, Futuhus Salatin, Agra 1938 page 261-263)

போர் துவங்கியது. இராஜபுத்திரர்களின் ஜெயின் நகரம் முதலில் கைப்பற்றப்பட்டது. அதன் பின்னர் டில்லி படைகள் இரண்தாம்பூரை முற்றுகையிட்டனர்.

கோட்டைக்குள் 12,000 குதிரை வீரர்கள், பல யானைகள், கணக்கற்ற காலாட்படையினர் இருந்தனர் என்று யகியா குறிப்பிடுகிறார். (Yahya, Tarikh-i-mubarak shahi ,page 77) 10,000 குதிரை வீரர்களை ஹமீர் தேவா வைத்திருந்ததாக அமீர் குஸ்ரு குறிப்பிட்டுள்ளார். (Amir khusru, Devai rani, Aligarh, 1917, page 65)

கோட்டைக்குள் அலாவுதீன் கில்ஜியின் வீரர்கள் வராதபடி இராஜபுத்திரர்கள் கவண்கற்களை வீசிக் கொண்டிருந்தனர். போரின் போது நஸ்ரத் கான் ஒரு நாள் கோட்டையின் மதில் அருகே சென்றுவிட்டார். அப்போது அவர் மீது கவண் கல் எறியப்பட்டது. அதனால் காயம்பட்ட நஸ்ரத் கான் இரண்டு அல்லது மூன்று நாட்களில் உயிர் நீத்தார்.

ஆற்றல் மிக்க படைத்தலைவர் நஸ்ரத் கானை இழந்த படைகள் துக்கத்தில் ஆழ்ந்தன. போர்க்களத்தில் மயான அமைதி நிலவியது. இந்தச் சூழ்நிலை தோல்வியின் காரணமாக ஏற்பட்டுள்ளது என்று இராஜபுத்திரர்கள் தப்புக் கணக்குப் போட்டனர். எனவே இரண்தாம்பூர் கோட்டையிலிருந்து வெளியேறிய இராஜபுத்திரர்கள்

கோட்டைக்கு வெளியே முஸ்லிம் படைகளைத் தாக்கினர். இன்னொரு தளபதி உலூக்கான் தோல்வியடைந்து பின் வாங்கி ஜெயின் நகருக்கு ஓடிப்போனார்.

இந்தத் துயர நிலையை விளக்கி அலாவுதீன் கில்ஜிக்கு அவசரமாக கடிதம் அனுப்பப்பட்டது. கடிதம் கிடைத்ததும் அலாவுதீன் கில்ஜி மேலும் படைகளுடன் இரண்தாம்பூரை நோக்கி விரைந்தார். முற்றுகை முழு மூச்சுடன் ஆரம்பம் ஆயிற்று.

கோட்டையின் வாயிலை நேரடியாகத் தாக்கிக் கைப்பற்றுவது கடினமானது என்பதனை அலாவுதீன் கில்ஜி எளிதில் கண்டு கொண்டார். ஏனெனில் கவண் கற்களை எறிவதிலும், கோட்டைக்கு மேலிருந்து அம்புகளை எய்துவதிலும் இராஜபுத்திரர்களுக்கு நல்ல வாய்ப்பு இருந்தது.

ஆகவே கோட்டையின் உச்சிக்குச் செல்வதற்கான மண் மேடையை அமைத்திட அலாவுதீன் கில்ஜி முயன்றார். அதை அமைப்பதற்கு அநேக உயிர்கள் பலியாகும் என்பதனையும் அறிந்திருந்தார். அதனை செய்து முடித்திட அதிக நாட்கள் ஆகும் என்பதும் அவருக்குத் தெரியும். ஆனால் மண் மேடை அமைப்பதைத் தவிர அவருக்கு வேறு வழி தெரியவில்லை.

பக்கத்துக் கிராமங்களில் இருந்து தையற்காரர்களை வரவழைத்தார். தோல்பைகளைத் தைத்திடச் சொன்னார். அந்தப் பைகள் படைவீரர்களிடம் தரப்பட்டது; பின்னர் அதில் மணலால் நிரப்பட்டது. மண்ணால் நிரப்பப்பட்ட பைகள் அகழியில் போடப்பட்டன.

தோல் பைகள் தீர்ந்து விட்டன. கால் சட்டைகளை பைகளாக பயன்படுத்தி அவற்றிலும் மணல் நிரப்பப்பட்டு அகழியில் வீசப்பட்டது. அதனை அடிக்கல்லாகக் கொண்டு மண்மேடை அமைக்கப்பட்டது. அந்த மேடையின் மேல் கட்டுமானம் அமைக்கப்பட்டது.

இப்பணிகள் நடைபெறும் வேளையில் இராஜபுத்திரர்கள் வீசிய கவண்கற்களும், அம்புகளும் ஏராளமான படைவீர்களைப் பலி வாங்கியது. இறுதியாக தரையிலிருந்து கோட்டை மதிலின்

உச்சி வரை சாய்வான ஒரு மண்சாலை அமைக்கப்பட்டுவிட்டது. அதன் வழியாக அலாவுதீனுடைய குதிரைகளும் படை வீரர்களும் கோட்டையின் உச்சிக்குச் செல்ல வழி ஏற்பட்டது.

இராஜதந்திரத்தோடு செயல்பட்ட அலாவுதீன் கில்ஜி, ஹமீரின் அமைச்சர் ரன்மல் என்பவரை தம் பக்கத்தில் சேர்த்துக் கொண்டார். அலாவுதீன் அவருக்கு மன்னிப்பு வழங்கி எழுத்து மூலம் கடிதம் கொடுத்தார். அந்தக் கடிதத்தை இன்னொரு அமைச்சரான ரதிபால் என்பவரிடமும் அவரது நண்பர்களிடமும் காட்டி அவர்களையும் தனது பக்கம் சேர்த்துக் கொண்டார். அவர்கள் அலாவுதீன் கில்ஜியிடம் பணம் வாங்கிக் கொண்டு, ராணா ஹமீரின் தானிய கிடங்கிலிருந்து தானியங்களை அப்புறப்படுத்திவிட்டார்கள் (ஹமீர் காவியம் இதனை உறுதி செய்கிறது. ஹமீர் காவியம் ஆங்கில நூல் முன்னுரை)

கோட்டைக்குள் பஞ்ச நிலை உருவானது. ஒரு மணி அரிசி வாங்கிட இரண்டு குண்டுமணி தங்கம் கொடுக்க வேண்டியதாயிற்று. (Journal of the Asiatic society of Bengal 1879, page 186-252 and Indian Antiquary 1879 page 55-73)

பசி கோரத்தாண்டவம் ஆடியது. அரண்மனையில் அனைவரும் பசியால் துடிதுடித்தனர். ராணி ரங்கா தேவி மற்றும் அநேகப் பெண்கள் தீக்குளித்து மாண்டனர். உயிரை மாய்த்துக் கொள்ளும் பொருட்டு இராஜபுத்திரர்கள் மஞ்சள் நிற ஆடை அணிந்து போராடினார்கள். போர்க்களத்தில் இரத்த வெள்ளம். இறுதியில் ஹமீர் தம் தலையைத் தானே கொய்து வீர மரணம் அடைந்தார். ஹமீரின் குடும்பத்தவர்கள் எவரும் உயிர் பிழைக்கவில்லை. (Isami, Fututus Salatin, page 267)

11.07.1301இல் செவ்வாய்க்கிழமை அன்று இரண்தாம்பூர் கோட்டை அலாவுதீன் கில்ஜியால் கைப்பற்றப்பட்டது.

ஹமீருடைய அமைச்சர்களாக இருந்து துரோகம் புரிந்து தன்னோடு சேர்ந்து கொண்ட இராஜபுத்திர அமைச்சர்கள் ரன்மல், ரதிபால் இருவரும் இதுகாலும் பதவியில் வைத்து போற்றிவந்த இராஜபுத்திர அரசர் ஹமீருக்கே துரோகம் செய்துவிட்டு

தன்னோடு சேர்ந்து கொண்டவர்களை எப்படி ஏற்றுக் கொள்வது, எவ்வாறு நம்புவது என்று ஆய்ந்து முடிவெடுத்த அலாவுதீன் கில்ஜி ரன்மல், ரதிபால் இருவரையும் கொல்ல உத்தரவிட்டார்.

இரண்தாம்பூர் கோட்டைக்குள் அலாவுதீன் கில்ஜி வெற்றி வீரராகச் சென்றபோது முகமது ஷா படுகாயமுற்று தரையில் கிடந்தார். அவர் பட்ட காயங்களைக் குணப்படுத்தி, அவரது உயிரைக் காப்பாற்றிவிட்டால் தன்னிடம் எவ்வாறு நடந்து கொள்வாய் என்று அலாவுதீன் கில்ஜி முகமது ஷாவிடம் கேட்டார்.

முகமதுஷா, காயம்பட்ட தான் குணம் அடைந்து எழுந்தால் முதலில் அலாவுதீன் கில்ஜியைக் கொல்வேன்' பின் ஹமீரின் மகனை இரண்தாம்பூரின் அரசராக்குவேன் என்றார்.

தன்னை அவமதித்து முகமது ஷா இவ்வாறு கூறியதும் அலாவுதீன் கில்ஜி முகமது ஷாவை யானையின் காலடியில் இட்டுக் கொல்ல உத்தரவிட்டார். ஆனால் இறக்கும் வேளையிலும் முகமது ஷா காட்டிய வீரம், விசுவாசம் இவைகளைக் கண்டு வியந்த அலாவுதீன் கில்ஜி அவரது உடலை தக்க மரியாதைகளுடன் புதைத்திடும்படி ஆணையிட்டார். (Ferishta Gulshon-i-Ibrahim, page 108).

வெற்றியுற்ற அலாவுதீன் காயமுற்றுக் கிடந்த ஒரு ராஜபுத்திர தளபதியைக் கண்டார். "தளபதியே உன்னைப் பராமரித்துச் சிகிச்சை செய்கிறேன். என் கீழ் பதவியும் தருகிறேன்" என்றார். தளபதி இகழ்ச்சிக் குறிப்புடன், "சுல்தானே, நான் உயிர்த்தெழுந்தால் என் முதல் காரியம் உன்னைக் கொல்வது. இரண்டாவது ஹமீரின் குமாரரை இங்கு அரியனையில் அமர்த்துவது." சினங் கொண்ட அலாவுதீன் அவனை யானைகளின் முன்போட்டு அவைகளால் இடறச் செய்தார். (து.கி. வெங்கடரான், பச்சையப்பன் கல்லூரி வரலாற்றுப் பேராசிரியர், நமது பாரதம், கலைமகள் காரியாலயம், சென்னை, 1965 பக்கம் 60) காயமமுற்ற தளபதி இராஜபுத்திரர். அவரையும் மன்னிக்க முயன்றவர் அலாவுதீன் கில்ஜி.

துரோகம் செய்தவர்களையும் கொன்றார்; வீரத்துடன் போரிட்டவர்களையும் மரியாதையுடன் நடத்தினார் அலாவுதீன்

கில்ஜி. இரண்தாம்பூரிலிருந்து உலூக்கான் ஆறுமாதம் கழித்து டில்லி திரும்பினார். அவரை விஷம் வைத்து அலாவுதீன் கில்ஜி கொன்றார் என்பார்கள். ஆனால் டில்லிக்குத் திரும்பும் போது மரணம் உலூக்கானைத் தழுவிக் கொண்டது என்றும் உலூக்கானின் மரணம் அலாவுதீன் கில்ஜிக்கு பெரும் வருத்தத்தை ஏற்படுத்தியது என்றும், உலூக்கானின் ஆன்மா சாந்திபெற பல தான தருமங்களை அலாவுதீன் கில்ஜி செய்தார் என்றும் பரணி குறிப்பிட்டுள்ளார். (Tarikhi Finiz Shahi, by Ziaud-din Barani (1355) Edited by Sir Sayyid Ahamed Khan, இந்தியப் பதிப்பு கல்கத்தா, 1862 பக்கம் 299) இதிலிருந்து உலூக்கான் மரணத்திற்கு அலாவுதீன் கில்ஜி காரணமில்லை என்று கூறலாம். இரண்தாம்பூரில் அலாவுதீன் கில்ஜி பெற்ற பெருவெற்றி அவர் மேலும் பல களங்களைக் காண ஊக்குவித்தது.

எனவே அவர் சித்தூர் பக்கம் சிந்தையை திருப்பினார். மேவாரின் தலைநகரான சித்தூர் படையெடுப்பில் பிரச்சனைக்குள்ளான பத்மினி என்ற பத்மாவத் பேசப்படுகிறார். அதன் உண்மைநிலை குறித்து விரிவாகவே ஆராய்வோம்.

சித்தூர் படையெடுப்பு

சித்தூர் தற்போது உதய்பூர் பகுதியில் உள்ளது. அலாவுதீன் கில்ஜியின் காலத்தில் சித்தூர் வட இந்தியாவில் முக்கிய பட்டணமாகும். சித்திரகாட் ரெயில்வே ஸ்டேசனுக்கு சமீபத்தில் சித்தூர் உள்ளது. 3 மைல் நீளம் (சுமார் ஐந்தரை கிலோ மீட்டர்) நீளமும், 500 அடி உயரமும் கொண்ட பரந்த குன்று காணப்படுகின்றது. அதன் உச்சியில் அதி விசித்திரமான கோட்டை; அதன் அடிப்பாகம் 13 கிலோ மீட்டர்.. அதுவே மேவார் நாட்டின் தலைநகரத்தின் திருமுகமாய் விளங்கிய ஊர்.

மூன்று முறை சித்தூர் தாக்குதலுக்கு உள்ளாகி உள்ளது. சித்தூர் இராஜபுத்திரர்களின் உயிர் மூச்சு. இராஜபுத்திரர் எவரும் தான் நினைத்த காரியத்தைச் செய்து முடிக்காவிட்டால் “சித்தூரை அழித்த பாவத்தில் போவேன்” என்று இன்றும் சொல்லிக் கொள்வர்.

மொகலாயச் சக்கரவர்த்தி ஹுமாயூன் காலத்திலும் முகலாயப் பேரரசர் அக்பர் காலத்திலும் சித்தூர் தாக்குதலுக்கு உள்ளாகி உள்ளது. அதுபோன்றே அலாவுதீன் கில்ஜி காலத்தில் சித்தூர் படையெடுப்பிற்குள்ளாகியது. முகலாயப் பேரரசர் பாபரின் மகன் ஹுமாயூன் (1530 – 1556) ஆட்சியின் போது, சித்தூர் இராணா சங்காவின் மறைவிற்குப்பின் அவரது குழந்தை உதயசிங்கும், அவனது தாயார், இராணா சங்காவின் மனைவி இராணி கருணாவதி ஆகியோரின் ஆட்சிப் பொறுப்பில் இருந்தது. சித்தூரை அழித்திட எதிரிகள் சூழ்ச்சி செய்தனர். இராணாசங்காவின் மறைவு அவர்களைத் துரிதப்படுத்தியது. இக்கட்டான நிலையில் ஆபத்திலிருந்து தன்னையும் தன் குழந்தையையும் காப்பாற்றிட ஹுமாயூனுக்கு ராணி கருணாவதி கடிதம் ஒன்றைக் கொடுத்து "நான் ஹுமாயூனை சகோதரராக ஏற்றுக் கொண்டேன்; எனக்கு அவர் உதவி செய்ய வேண்டினேன் என்று அவரிடம் சொல்’ என்றும் தூதுவனை அனுப்பிவைத்தார்.

ஆபத்துக் காலத்தில் தங்களைக் காத்துக் கொள்ள தனக்கு விருப்பமானவரை கங்கனா சகோதரராக ஏற்று கொள்ள நாம்ருகி

(ராக்கி) என்னும் பெயரையுடைய பட்டுக் கயிற்றுடன் தூதர் சென்றார்.

அதனை இஷ்டமிருந்தால் பெற்றுக் கொள்ளலாம் அல்லது மறுத்து விட்டாலும் மறுத்துவிடலாம், அது அவனுடைய இஷ்டம். ஆனால் அதனைப் பெற்றுக் கொண்டு விட்டால் ஆபத்திலிருக்கும் அபலைக்கு உதவியைச் செய்தே தீர வேண்டும். இராணி கருணாவதியின் கடிதத்தை கொண்டு சென்ற குதிரை வீரன் ஹுமாயூனிடம் விவரம் கூறினார்.

'தயாள தாயான குணம் படைத்த ஹுமாயூன் இராணி கருணாவதிக்கு உதவி செய்வதற்காகத் தம் சைனியங்களோடு சித்தூரை நோக்கிச் சென்றார். ஹுமாயூன் இருந்த இடத்திற்கும் சித்தூருக்கும் வெகுதூரம் இருந்தது. அதனால், அவர் வஞ்சனை இன்றி வேகமாகச் சென்றும், தருணத்தில் போய் இராணிக்கு உதவி செய்ய முடியவில்லை. இராணி கருணாவதியோ, ஹுமாயூன் வராமையைக் கண்டு ஏங்கினாள். அவளுடைய சித்தூர் சைனியங்கள் எதிரிகளோடு வெகு குரூரமாகச் சண்டை செய்தனர். இரத்த வெள்ளம் பெருக்குகெடுத்தோடியது. இனி ஜெயிக்க முடியாது என்பதை அறிந்த இராணி தன் குழந்தை உதய சிங்கை ஜாக்கிரதையாக வளர்க்கும்படி ஒப்படைத்து அக்கினி வளர்த்து விழுந்து மடிந்தார்.

அச்சமயத்தில் அங்கு வந்து சேர்ந்த ஹுமாயூன் கோபாவேசங்கொண்டு, எதிரிகள் அனைவரையும் எதிர்த்துச் சின்னாபின்னப்படுத்தி ஓடச் செய்தார். பிறகு கருணாவதியின் கதியை அறிந்து விசனித்துச் செய்வதின்ன வென்று தெரியாமல் மயங்கி, வந்த வழியே திரும்பிச் சென்றார்.

(எஸ். எஸ். அருணகிரிநாதர், இந்துஸ்தானத்து வீரர்கள், எடுகேஷனல் பப்ளிஷிங் கம்பெனி, 1939)

"சித்தூர் அரசி கர்ணாவதி (இராணா விக்கிரமாதித்தனின் தாயார்) ஹுமாயூனுக்கு 'உன் சகோதரியைக் காப்பாற்று" என்று வேண்டுகோள் விடுத்தார். உமாயூன் (ஹுமாயூன்) சரங்பூர் வரை சென்றார்.

(பேராசிரியர் தங்கவேலு, இந்திய வரலாறு பாகம் 3)

'சித்தூர் ராணி கருணாவதி, ஹுமாயூனுக்கு ராக்கி அனுப்பியதாகவும், பகதூர் ஷா மீது படையெடுக்கச் சொல்லிக் கேட்டுக் கொண்டதாகவும் அதை ஹுமாயூன் ஒப்புக் கொண்டதாகவும் ஒரு தகவல் உண்டு"

(முகலாயர்கள் - முகில் - சென்னை 2009, பக்கம் 75)

"சித்தூர் இராணுவ வீரனான விக்கிரமாதித்தியரின் தாயாரான இராணி கர்ணாவதியிடமிருந்து அவருக்கு ஓர் ஒலை வந்தது. பகதூர் ஷா தனது நாட்டின் மீது போர் தொடுத்துள்ளார். ஹூமாயூனை ஒரு சகோதரன்போல் பாவித்து தான் அனுப்பியுள்ள ராக்கி எனும் (மஞ்சள் கயிறு ஆவணி அவிட்ட நாளில் சகோதரனுக்கு சகோதரி கையில் கட்டி அன்பைத் தெரிவிப்பது. இன்றும் வட இந்தியாவில் பரவலாகக் காணப்படுகிறது) காப்பை வாங்கி அணிந்து கொண்டு உடனே தன்னைக் காப்பாற்ற வரும்படி எழுதி அனுப்பியிருந்தார். அதைக் கண்ட ஹூமாயூன் உடனே சித்தூரை நோக்கி விரைந்தார். (இந்திய வரலாறு, 1206–1773 வரை சென்னை 1976, டாக்டர் கி.ர. அநுமந்தன், ந.க. மங்கள முருகேசன் பக்கம் 295, 296)

ராணா சங்காவின் விதவை மனைவியான ராணி கர்னாவதி உதவி கோரி ஹூமாயூனுக்கும் சகோதரி யாகப் பாவிக்கும் ராக்கி கயிறை அனுப்பியதாகவும், ஹுமாயூன் மகிழ்ச்சியோடு அதை ஏற்றுக் கொண்டதாகவும் கூறப்படுகிறது. (Ashirbad Lal Srivastava, The Mughul Empire 1526 - 1803, Agra,1952, page 48)

முகலாயப் பேரரசர் ஹுமாயூனுக்கு சித்தூர் ராணி கர்ணாவதி ராக்கி அனுப்பி தன்னை சகோதரியாக ஏற்றுக் கொண்டு எதிரிகளிடமிருந்து தன்னைக் காப்பாற்றக் கேட்டுக் கொண்டார். அதனை ஏற்று ஹூமாயூனும் சித்தூருக்கு ஆதரவாகப் போரிடப் பயணமானார் என்று வரலாற்றாசியர் ஏ.எல். ஸ்ரீவத்ஸரா கூறியுள்ளார்.

ஆனால் ஹூமாயூன் ஆக்ராவிலிருந்து படைகளுடன் சித்தூர் நோக்கி திரும்பியதும், அவரது படையெடுப்பிற்கு அஞ்

சிய பகதூர் ஷா, கோட்டையை ஒப்பந்தம் செய்து கொண்டு ஒப்படைத்துவிட்டு, அதற்கு ஈடாக பணம் பெற்றுக் கொண்டு சென்றதும் உண்மையாகும். சித்தூர் கோட்டையைக் கைவிட்டு விட்டு, பகதூர்ஷா மண்ட் சோரில் பதுங்கினார். சம்பனிருக்கு ஓடினார். பின் அகமதாபாத்திற்கு தப்பினார்; இறுதியில் ஹுமாயூன் வென்றார்.

ஆபத்தான வேளையில் சித்தூர் முற்றுகையில் ஹுமாயூன் ராணி கர்ணாவதிக்கு உதவ முன் வந்தது வரலாற்று உண்மை; அது சதிகளால் நடைபெறாமல் போனதும் சரித்திரச் சான்று ஆகும்.

முகலாயப் பேரரசர் அக்பர் (கி.பி. 1556–1605) பாபரின் பேரன்; ஹுமாயூனின் மகன். இவரது காலத்திலும் சித்தூர் மீது படையெடுப்பு கி.பி. 1567–1568 இல் நிகழ்ந்தது. ராஜபுத்திர அரசுகளுக்குகெதிராக அக்பர் நடத்திய படையெடுப்புகளில் சித்தூர் முற்றுகை முக்கியமானது. மத்திய ராஜஸ்தானின் ஒரு திறவு கோலாகக் கருதப்படும் இக்கோட்டை அதன் வரலாற்றில் பல முற்றுகைகளை எதிர்த்து நின்றதாகும். எனவே இக்கோட்டையை வெற்றி கொள்ளாமல், தனது ஆட்சி அதிகாரத்தை மற்ற ராஜபுத்திர ஆட்சியாளர்கள் ஏற்கும்படிச் செய்ய முடியாது என்று அக்பர் உணர்ந்தார்.

ராணா உதய்சிங் தமது பிரபுகள் கூறிய ஆலோசனையின்படி, சித்தூர் கோட்டையைப் புகழ் பெற்ற போராளிகளான ஜெய்மால் மற்றும் பட்டா பொறுப்பில் விட்டுவிட்டு மலையில் சென்று பதுங்கிக் கொண்டார். கோட்டைச் சுற்றுப்புறத்தில் இருந்த விவசாயிகள் கோட்டையிலே தங்கிக் கொண்டு, போர் வீரர்களுக்கு பெரிதும் உதவினர். கடுமையான போர் நடைபெற்றது. 30,000 பேர் போரில் கொல்லப்பட்டனர். அக்பர் புரிந்த கொலைக் குவியல் இதுதான்.

ராஜபுத்திர வீரர்கள் பெரும் வீரத்தோடு போரிட்டு மடிந்தார்கள். போர்க் களத்தில் 'ஜெய்மால்' மற்றும் 'பட்டா' ஆகியோரின் வீரத்தைக் கண்டு வியந்து பாராட்டிய அக்பர், அவ்விரு தளபதிகள் யானையின் மீது அமர்ந்த நிலையில் இரு கற்சிலைகளை ஆக்ரா கோட்டையின் தலைவாயிலில் நிறுவிட உத்தரவிட்டார். (Satish

Chandra, History of Medieval India, 2018, Page 231)

இதனைத் தொடர்ந்து ரண்தம்பூர், ஜோத்பூர் கைப்பற்றப்பட்டது. பிகானிர், ஜெய் சால்மர் உட்பட பெரும்பான்மையான இராஜபுத்திர அரசுகள் அக்பரிடம் மண்டியிட்டன. மேவார் மட்டும் எதிர்த்து நின்றது.

முகாலயப் பேரரசின் விரிவாக்கத்திற்கு இராஜபுத்திரர்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் இன்றியமையாதவை; தவிர்க்க முடியாதவை என்று அக்பர் எண்ணினார். இராஜபுத்திரர்களோடு உறவை பலப்படுத்தினார். கி.பி. 1572 வரை தனக்குக் கீழ்படிந்த ராஜபுத்திர அரசர்களை தனது துணைவர்களாகக் கருதினார். கி.பி. 1578இல் வடமேற்கு இந்தியாவைக் கைப்பற்றும் வேளையில் ராஜா பகவந்தாகும், மான்சிங்கும் அக்பரின் போர் வாட்களாகப் பயன்பட்டனர். கி.பி. 1578க்குப் பிறகு புதிய சமயக் கொள்கையைப் பின்பற்றியதால் ராஜபுத்திரர்கள் அக்பரின் கூட்டாளிகளாயினர். நம்பிக்கைக்குரிய பங்காளிகளாயினர்.

கி.பி. 1562 ஆம்பர் அரசர் பிஹாரி மாலிக் மகளை திருமணம் செய்து கொண்டார்.

பிக்கானர் அரசர் கல்யாண்மால் தன் மகளை அக்பருக்கு மணம் செய்து வைத்தார். ராஜபுத்திரப் பெண்களை அக்பர் மணந்ததோடு நில்லாமல் அவர்களுக்கு உயர் பதவிகளையும் அளித்தார்.

ராஜா தோடர் மால், ராஜா பகவன்தாஸ், ராஜா மான்சிஸ் ஆகிய இராஜபுத்திரத் தளபதிகள் அக்பரின் நம்பிக்கைக்குரிய தளபதிகள் ஆவர்.

ஹுமாயூன், அக்பர் கால சித்தூர் முற்றுகை, இராஜபுத்திரத் தொடர்பு உறவு பற்றி கொஞ்சம் சொன்னேன். இனி அலாவுதீன் கில்ஜி கால சித்தூர் முற்றுகைக்கு வருவோம்.

ராஜஸ்தானின் பலமான அரசு சித்தூர். ஆகவே அதைப் பணிய வைக்க வேண்டியது அலாவுதீன் கில்ஜிக்கு அவசியமான ஒன்று. அதற்கு காரணமும் இருந்தது. குஜராத்திற்கு படையெடுத்துச்

சென்ற அலாவுதீன் கில்ஜியின் படைகளை மேவார் பகுதிகள் வழியாகச் செல்ல அனுமதிக்காமல் அதன் ஆட்சியாளர் ரத்தன் சிங், அலாவுதீன் கில்ஜியை அவமதித்திருந்தார். அஜ் மீரிலிருந்து மால்வாவிற்குச் செல்லும் வழியையும் சித்தூர் ஆக்கிரமித்திருந்தது. இவைகள் அலாவுதீன் கில்ஜி சித்தூர் மீது படையெடுக்க காரணம் ஆயிற்று. அதோடு சேர்த்து சொல்லப்படும் கதைதான் பத்மினியின் பேரழகில் அலாவுதீன் மயங்கி அதன் மீது படையெடுத்தார் என்ற கதையும்.

இனிபோர் குறித்த செய்திகளைப் பார்த்து விட்டு பத்மினி கதையையும் பார்ப்போம்.

சித்தூரை முற்றுகையிட அலாவுதீன் கில்ஜி 1303 ஜனவரி 8இல் புறப்பட்டார். இப்படையெடுப்பைப் பற்றி அமீர் குஸ்ரு விவரத்தை அளித்துள்ளார். ராணா சமர்சிங் மகனும், ஜெய்த்திரசிஸ் பேருமான ராணா ரத்தன்சிங் சித்தூரின் மன்னர்; இந்துஸ்தானத்தில் மிகப் பெருமை வாய்ந்தவர். சித்தூர் முற்றுகை எட்டு மாதங்கள் நடைபெற்றது. இறுதியில் அலாவுதீன் கில்ஜி வென்றார். உதய்பூர் பொருட்காட்சி சாலையில் பாதுகாக்கப்பட்டு வருகின்ற கல்வெட்டு ஒன்றில் மகாராணா லட்சுமி என்ற சிரோதியா இராஜபுத்திர சிற்றரசர் தம்முடைய ஏழு புதல்வர்களுடன் போரில் போரிட்டு மடிந்த செய்தி உள்ளது. இக்கல்வெட்டு 1460இல் எழுதப்பட்டது. இதிலிருந்து சித்தூர் போர் மிகக் கடுமையான வகையில் நடைபெற்றிருக்க வேண்டும் என்பது புலனாகிறது. (Reports of Archaeological Survey of India 1925 - 1936, page 14)

இராஜபுத்திர பெண்மணிகள் உயிரை மாய்த்திட தீயில் குதித்தனர். போரின் போதே ரத்தன்சிங் கொல்லப்பட்டார் என்று நாயின்சி குறிப்பிட முன்னாள் கர்னல் டாட்டும் இது போன்றே கூறி உள்ளார். (முற்கூறிய கர்னல் டாட் நூல் பாகம் 1 பக்கம் 311–312)

சித்தூர் கோட்டை 26 ஆகஸ்ட் 1303இல் கைப்பற்றப்பட்டது. கோட்டையில் போரின் போது ரத்தன் சிங், அலாவுதீன் கில்ஜியிடம் சரன் அடைந்தார். எனவே அவர் உயிருடன் வாழ

அனுமதிக்கப்பட்டார் என்று அமீர் குஸ்ரூ எழுதியுள்ளார். (Amir khusru, Khazainul Futch, Aligarh text 1927 and Allahabad University MS). இசாமியும் இதே கருத்தை நமக்கு அளித்துள்ளார். (Ismail Abdulla Malik, Futhhus Salatin, Agra 1938)

நாபி நந்தனா ஜினோ தாராபிரபந்தா என்ற ஜெயின் நூலில் (1336) ரத்தன் சிங்கை அலாவுதீன் கில்ஜி ஆட்டிப் படைத்தார் என்றும் குறிப்பு காணப்படுகிறது. ரத்தன் சிங் முடிவு கடைசி காலம் எவ்வாறு என்பது பற்றி தெளிவாக இல்லை. (முற்கூறிய கே.எஸ். லால் நூல் பக்கம் 102)

சித்தூர் கோட்டையைக் கைப்பற்றிய பிறகு அதனை கிஸர்கானிடம் ஒப்படைத்துவிட்டு அலாவுதீன் கில்ஜி டில்லி திரும்பினார். கோட்டையில் காவற்படை நிறுவப்பட்டது. கிஸர்கான் சித்தூரை ஆட்சி புரிவதை இராஜபுத்திரர்கள் விரும்பவில்லை. அவர்கள் கிஸர்கானுக்குத் தொல்லைகள் கொடுத்தனர். எனவே கிஸர்கான் அலாவுதீன் கில்ஜியின் ஆணைப்படி டில்லிக்குச் சென்றார்.

சித்தூர் மால்தேவா என்பவருக்கு அளிக்கப்பட்டது. ஜாலோரை ஆட்சி புரிந்த சௌஹான் அரசரின் சகோதரர் அவர். ஜாலோர் முற்றுகையின் போது அலாவுதீன் கில்ஜிக்கு நேர இருந்த ஆபத்திலிருந்து தப்பவைத்தவர். அதற்கு கைமாறு செய்யும் வகையில் சித்தூர் ஆட்சிப் பொறுப்பு அவரிடம் தரப்பட்டது. அவர் அலாவுதீன் கில்ஜி ஆட்சிக்கு கீழ்ப்படிந்து கப்பம் கட்டிவந்தார். இராஜபுத்திரர்கள் இது தங்களுக்கு இழுக்கு என்று கருதினர். மால்தேவாவின் சகோதரர் ஹமீர் என்ற சிகோதாவின் அரசர் தொல்லைகள் பல செய்தார். மால்தேவா அவரது மகளை ஹமீருக்கு திருமணம் செய்து கொடுத்தார். எனினும் பகைமை ஒழியவில்லை. 1321இல் ஹமீர் சித்தூரைக் கைப்பற்றிட மஹாராணா ஹமீர் என்ற பட்டத்தையும் சூட்டிக் கொண்டார்.

அரசன் ரத்னசேனன் சினமுற்றான்; படைகளைத் திரட்டினான். அலாவுதீன் கில்ஜி நீண்ட நாட்கள் சித்தூர் கோட்டையை முற்றுகையிட்ட வண்ணமிருந்தான். ஆனால் அதைத் தகர்ப்பது எளிதாக இல்லை. ஆகவே சூழ்ச்சி மூலம் ஒப்பந்தம் செய்தான்.

அலாவுதீன் கில்ஜியின் அழைப்பை அரசன் ஏற்றுக் கொண்டு அலாவுதீனுக்கு விருந்தளித்தான். விருந்து முடிந்து மன்னனுடன் சதுரங்கம் ஆடிக் கொண்டிருந்தான். அப்போது அலாவுதீன் கில்ஜியின் எதிரில் வைக்கப்பட்டுள்ள நிலைக்கண்ணாடியில் பத்மாவதி (பத்மினி)யின் எழில் உருவைக் கண்டு மூர்ச்சையுற்றான். அங்கிருந்து அலாவுதீன் விடைபெற்றுச் செல்லும் போது அவனை வழியனுப்ப வெளிவாசல் வரை வந்த மன்னனை பாதுஷாவின் மாறுவேடம் தரித்த சிப்பாய்கள் சூழ்ந்து கொண்டு கைது செய்து டில்லிக்கு அனுப்பி வைத்தனர்.

இதை அறிந்த பத்மாவதி துயருற்றாள். கணவனைக் காப்பாற்ற வழி வகுத்தாள்.

கோரா, பாதல் என்னும் சிறந்த வீரர்கள் இருவருடன் 700 பல்லக்குகளில் ஆயுதம் தரித்து சிப்பாய்களை மறைத்துக் கொண்டு தில்லியை அடைந்தனர். பத்மினி சிறிது நேரம் தன் கணவனைச் சந்தித்து அளவளாவிய பிறகு அந்தப்புறத்திற்கு வருவாள் என்று பாதுஷாவிற்கு செய்தி அனுப்பப்பட்டது.

ஓர் மூடப்பட்ட பல்லக்கு அரசனின் சிறைச்சாலை அருகே வைக்கப்பட்டது. அதிலிருது ஒரு கொல்லர் வெளிப்பட்டு அரசனின் விலங்குகளைத் தகர்த்தெறிந்தார். ரத்னசேனன் தயாராக இருந்த குதிரையின் மீது ஏறி வெளியேறினான்.

பாதுஷாவின் படைகள் பின் தொடர்ந்தன. வீரன் பாதல் மன்னனைக் காப்பாற்றி சித்தூருக்கு வந்து சேர்ந்தான். நடைபெற்ற போரில் கோரா மரணமுற்றான்.

ரத்னசேனன் சித்தூர் வந்து சேர்ந்ததும் பத்மினி, கும்பல்காகோட்டைக்கு அதிபதியான தேவபாலிடமிருந்து படையெடுக்கும் செய்தி வந்திருப்பதை அறிவித்தாள்.

இதை அறிந்ததும் ரத்னசேனன் பெரும்படையுடன் கும்பல்கரை முற்றுகையிட்டான்.

சித்தூர் அரசன் ரத்ன சேனனுக்கும் கும்பல் நேர் அரசன் தேவபாலுக்கும் இடையே கடும் போர் நடைபெற்றது. போரின்

போது இருவரும் மரணமடைந்தனர். ரத்ன சேனனின் உயிரற்ற உடல் சித்தூருக்கு கொண்டுவரப்பட்டது. அவனது முதல் மனைவி நாகமதி, இரண்டாவது மனைவி பத்மாவதி (பத்மினி) இருவரும் சிரித்துக் கொண்டே சிதையில் அமர்ந்து தீயில் பாய்ந்து உயிர்துறந்தனர்.

அலாவுதீன் கில்ஜி பெரும் படையுடன் சித்தூருக்கு வந்து பார்த்தபோது அங்கு சாம்பலைத் தவிர வேறு எதுவும் இருக்கவில்லை. அலாவுதீன் கில்ஜி ஏமாற்றமடைந்து பின் டில்லி சென்றான்.

இதுதான் பத்மாவத் கதை; மலிக் முஹம்மது ஜெய்ஸி 1540இல் எழுதிய கதை.

ஹிந்தி இலக்கிய வரலாறு A concise History of Hindi Literature (In Tamil) கிருஷ்ண மூர்த்தி, விஷ்ணுப்பிரியா, காமாட்சி எழுதியது. சென்னை 41, ஹிந்திஹ்ருதய வெளியீடு. அதில் பக்கம் 39 முதல் 45 வரை மலிக் முகம்மது ஜெய்ஸி பற்றியும், அவர் எழுதிய பத்மாவதி கதைச் சுருக்கமும் உள்ளது. அதைத்தான் மேலே தந்துள்ளேன்.

சித்தூரில் ரத்தன்சிங் இல்லாதபோது கும்பல்கர் கோட்டைக்கு அதிபதியான தேவபாலா பத்மினியை அடைய முயற்சித்தார் என்ற செய்தியை ரத்தன்சிங் அறிந்து கொண்டார். ஆகவே ரத்தன்சிங் கும்பல்கர் மீது போர் தொடுத்தார். தேவபாலாவைக் கொன்றார். ரத்தன் சிங்கும் படுகாயமுற்றார். போர் முடிந்து சித்தூர் திரும்பும் வழியில் உயிரிழந்தார். செய்தி அறிந்த பத்மினி, மற்றைய மனைவிமார்கள் சிதையில் வீழ்ந்து மடிந்தனர். அலாவுதீன் கில்ஜி சித்தூர் கோட்டையைக் கைப்பற்றி, தனது கொடியைப் பறக்க விட்டார். இதுவும் ஜெய்ஸி தரும் கதையில் உள்ளது. இக்கதையை பிற்கால வரலாற்று ஆசிரியர்கள் உண்மை என நம்பி தங்களுடைய நூலில் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தக் கதையை உண்மையென நம்பி பெரிஷ்டா சித்தூரைப் பற்றிய குறிப்புகளை இரண்டு இடங்களில் தந்துள்ளார். Muhammad Qasim Hindu Shah Ferishta, Gulshan -i- Ibrahimi, better know as

Tarikh-i- Ferishta, Lucknow 1867 பெர்சிய நூல் பக்கம் 111 – 115 தரும் விவரம் இதோ:

சித்தூரில் ஆறுமாத முற்றுகைக்குப் பிறகு அலாவுதீன் கில்ஜி சித்தூரை வென்றார். கிஸர்கானை ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தினார். (1303) கி.பி. 1304 ஆம் ஆண்டில் நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் பற்றி பெரிஷ்டா கூறும்போது, சித்தூர் படையெடுப்பின் போது பிடிக்கப்பட்ட ரத்தன் சிங் விநோதமான முறையில் சிறையில் இருந்து தப்பி ஓடினார் என்று குறிப்பிட்டுள்ளார்.

ரத்தன் சிங்கின் அந்தப்புரத்தில் பத்மினி என்ற மங்கையும் இருந்தாள். அவளது அழகைக் கேள்விப்பட்ட அலாவுதீன் கில்ஜி அவளை அடைய முயன்றார். பத்மினியைத் தன்னிடம் சேர்ப்பித்தால் ரத்தன் சிங்கை விடுவிப்பதாகக் கூறினார். ரத்தன் சிங்கும் அதற்கு இணங்கினார். ஆனால் அவரது உறவினர்கள் அதற்கு இசையவில்லை. அலாவுதீனிடம் சிக்கிக் கொள்வதைவிட அவரை விஷமிட்டுக் கொல்ல முடிவு செய்தனர்.

அது அறிந்ததும் ரத்தன் சிங்கின் மதி நுட்பம் வாய்ந்த மகள் ஒருத்தி பத்மினியிடம் ரத்தன் சிங்கைக் காப்பாற்ற திட்டம் வகுத்துக் கொடுத்தார்.

அத்திட்டத்தின்படி இராஜபுத்திரர்கள் மாறுவேடமணிந்து பல்லக்குகளில் சென்று டில்லி அடைந்து, ரத்தன் சிங் தப்பி ஓடி வர உதவி புரிந்தனர். தப்பிச் சென்ற ரத்தன் சிங் அலாவுதீன் கில்ஜிக்கு தொடர்ந்து தொல்லைகள் கொடுத்தான். எனவே சித்தூரிலிருந்த கிஸர்கானை அங்கிருந்து தில்லிக்கு வந்து விடுமாறு அலாவுதீன் கில்ஜி உத்தரவிட்டார். இது பெரிஷ்டா தரும் தகவல்.

அரபியில் ஹாஜி உத்தபீர் தந்துள்ள நூல் ஜபருல்வலி. Arabic History of Gujarat, Edited by Sir Denison Ross. மூன்று வால்யூம்கள், இலண்டன், முதற்பதிப்பு 1910, பக்கம் 786, 787, 788

ஹாஜி உத்தபீர் தரும் சித்தூர் கதை இதோ: அலாவுதீன் கில்ஜி சித்தூரைக் கைப்பற்றிய பிறகு சித்தூருக்கு அருகிலேயே

(ரத்தன் சிங்) இராணா சிறைவைக்கப்பட்டார்.

ஹாஜி உத்தபீர், ரத்தன் சிங் என்ற பெயரைக் குறிப்பிடவில்லை. ராணா என்று மட்டுமே கூறி உள்ளார்.

பின்னர் அவரது மனைவியை சுல்தானிடம் ஒப்படைத்தால் அவரை சிறையிலிருந்து விடுவிப்பதாக சுல்தான் டில்லியிலிருந்தபடியே ஒரு செய்தியை இராணாவிற்கு அனுப்பிவைத்தார். இது ஒரு வகையான கூற்று.

ஹாஜி உத்தபீர் இன்னொரு இடத்தில் இன்னொரு விதமாக இக்கதையைக் கூறி உள்ளார்.

சித்தூரிலிருந்து புறப்படுவதற்கு முன்பே இராணாவிடம் அலாவுதீன் கில்ஜி பத்மினியை தன்னிடம் ஒப்படைத்து விடுமாறு கேட்டார். அதற்குப் பதிலாக இராணாவை விடுதலை செய்வதாகக் கூறினார்.

மேவாரிலேயே தங்கி தமது மனைவியை சுல்தானுடைய மாளிகைக்கு அனுப்பி வைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள அனுமதி வழங்கும்படி இராணா கேட்டுக் கொண்டார். பத்மினி மீது உள்ள பற்றினால் அலாவுதீன் அதற்கு இசைந்தார். அலாவுதீன் கில்ஜி டில்லி சென்றதும் இராணா தமது நம்பிக்கைக்குரிய பிரபுக்களும், பணியாளர்களும் இனி செய்ய வேண்டியது எவை எவை என்று சொல்லி அனுப்பினார்.

2500 பேர் பல்லக்குகளில் வந்து சண்டையிட்டு இராணாவை பகைவரிடமிருந்து மீட்டனர். இதைக் கேட்டவுடன் அலாவுதீன் கில்ஜி சித்தூரை இராணாவின் சகோதரி மகளுக்குக் கொடுத்தார். இராணாவின் அமைச்சர்கள் அவளைக் கொன்று விட்டனர். அதன்பின்னர் இராணா மீண்டும் அரச பதவியில் சித்தூரில் அமர்ந்தார். இது ஹாஜி உத்தபீர் தரும் கதை. (Haji uddabir, Zafarul Vali, Page 788)

இக்கதையை 18ஆம் நூற்றாண்டில் கர்னல் டாட்டும் பெருமைபடத்தக்க முறையில் விவரித்துள்ளார். (முற்கூறிய டாட் நூல் முதற்பக்கம் 311, 312)

சித்தூர் பத்மினி கதையை பெரிஷ்டா, ஹாஜி உத்தபீர், கர்னல் டாட் ஆகியோர் அளிக்கும் விவரங்கள் சில ஒன்றுக் கொன்று மாறுபட்டிருப்பினும், மொத்தத்தில் அவர்கள் அளிக்கும் கதை மாலிக் முகம்மது ஜெய்ஸி அளிக்கும் கதையினைப் பெரும்பாலும் சார்ந்து ஒத்திருக்கிறது.

பெரிஷ்டா, ஹாஜி உத்தபீர், கர்னல் டாட் ஆகியோர் மாலிக் முஹம்மது ஜெய்ஸியின் கற்பனை கலந்த கதையினை உண்மையென்று நம்பி அப்படியே தங்களது நூல்களில் எழுதிவிட்டனர்.

மாலிக் முகம்மது ஜெய்ஸி 16ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். அவர் பத்மாவத்தை எழுதியது கி.பி. 1540இல். அவர் சித்தூர் இராணியின் வாழ்க்கையைக் கண்டவரல்ல. அவர் சித்தூர் இராணியின் வாழ்க்கை வரலாற்றினை நமக்கு அளிக்க முற்பட்டாரா என்பதே ஐயத்திற்குரியதாக உள்ளது.

மலிக் முகம்து ஜெய்ஸி இந்த நூலை வரலாற்றுச் சான்றுகளின் அடிப்படையில் எழுதவில்லை. சித்தூர் படையெடுப்பு, அங்கு இராஜபுத்திர பெண்கள் தீக்குளிப்பு இவைகளை மையமாக வைத்து உருவகக் கதை தீட்டியுள்ளார். ஜெய்ஸி எதைச் சொல்ல விரும்புகிறார் என்று தெளிவாகத் தெரியவில்லை.

என்ன சொல்கிறார், எதற்காகச் சொல்கிறார் என்பதும் விளங்கவில்லை. தெளிவாகவும் சொல்லவில்லை. உண்மையை ஜெய்ஸி எழுதியிருந்தால், எதற்காக தெளிவில்லாமல் எழுதுகிறார்? ‘‘நான் இதனை எழுதிட தேவையான விஷயங்களை எனக்குத் தந்தது கவி பெய்ன்’’ என்று ஒப்புக் கொள்கிறார் ஜெய்ஸி. (B.K. Karkra page 9)

இதிலிருந்து மலிக் முஹம்மது ஜெய்ஸி ஓர் உருவகக் கதை எழுத முற்பட்டாரேயன்றி உண்மைச் சம்பவத்தை, சரித்திரத்தில் நடைபெற்றதை அவர் எழுத முற்படவில்லை என்பதை எவரும் எளிதில் ஏற்றுக் கொள்ளலாம்.

அலாவுதீன் கில்ஜியின் சித்தூர் படையெடுப்பு இராணா பட்டத்திற்கு வந்த முதலாவது ஆண்டின் முடிவில் நடைபெற்றது.

இராணா பன்னிரெண்டு ஆண்டுகள் இலங்கையில் சந்நியாசி வேடத்தில் இருந்ததாக, பத்மினியின் அன்பிற்காக தவம் கிடந்ததாக மாலிக் முஹம்மது ஜெய்ஸி கூறுகிறார்.

இவை வரலாற்றில் ஒன்றுக்கு ஒன்று முரணாகவே உள்ளது.

இலங்கையின் அப்போதைய மன்னன் கோவர்த்தன் என்று மாலிக் முஹம்மது ஜெய்ஸி கூறுகிறார். இலங்கையை அப்போது ஆட்சி புரிந்தவன் ஹமீர் சங் என்று கர்னல் டாட் கூறுகிறார்.

இலங்கையில் அப்போது நான்காவது பராக்கிரம பாகு ஆட்சி புரிந்தார் என்பதே வரலாற்று உண்மையாகும்.

சித்தூர் ரத்தன் சிங் காலத்தில் இலங்கையை ஆண்டது நான்காம் பராக்கிரம பாகு என்று கௌரிசங்கர் ஓசா தனது நூலில் இரண்டாம் பாகத்தில் பக்கம் 461இல் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். (Gauri Shankar Osha, Rajputana ka Itihas 3 Volumes, Ajmer 1926 Volume II, page 461)

The Indian Antiquary 1930இல் 236வது பக்கத்தில் இலங்கையை அப்போது அரசு புரிந்தது நான்காம் பராக்கிரம பாகு என்று தெள்ளத் தெளிவாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மலிக் முகம்மது ஜெய்ஸி தனது உருவகக் கதை நூலில் சித்தூர் முற்றுகை எட்டு ஆண்டுகள் நடைபெற்றதாகக் கூறுகிறார். இதனை ஆமோதிக்கும் வகையில் அல்லது ஏற்றுக் கொள்ளும் வகையில் எந்த ஒரு வரலாற்று ஆசிரியரும் இவ்வாறு கூறுவில்லை. பெரிஷ்டா இராஜபுத்திர வீரர்கள் 700 பல்லக்குகளில் டில்லி சென்றதாக குறிப்பிட்டுள்ளார். மலிக் முஹம்மது ஜெய்ஸி தனது நூலில் 1600 பல்லக்குகளில் டில்லிக்கு இராஜபுத்திர வீரர்கள் சென்றதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மாலிக் முகம்மது ஜெய்ஸியும், பெரிஷ்டாவும் இராணா டில்லியில் சிறைவைக்கப்பட்டதாகச் சொல்கிறார்கள். இராணா டில்லிக்கு அனுப்பப்படவில்லை; சித்தூர் அருகே சிறை வைக்கப்பட்டதாக ஹாஜி உத்தபீர் குறிப்பிடுகிறார்.

பத்மினி இராணாவின் மனைவி என்கிறார் மாலிக் முஹம்மது

ஜெய்ஸி. பத்மினி இராணாவின் மனைவியா? மகளா? என்பது பெரிஷ்டாவிற்கு சந்தேகமாகவே இருந்தது. சிறையிலிருந்து தப்பிச் செல்வதற்கான திட்டத்தை இராணாவே வகுத்தார் என்பது ஹாஜி உத்தபீருடைய கருத்து. இராணாவின் மகளே சிறையிலிருந்து தப்பிச் செல்லும் திட்டத்தை வகுத்தார் என்று பெரிஷ்டா கூறுகிறார். பத்மினியே இத்திட்டத்தை வகுத்ததாக மாலிக் முஹம்மது ஜெய்ஸி குறிப்பிடுகிறார்.

சித்தூர் முற்றுகை நடைபெற்றது கி.பி. 1303இல். இந்தப் படையெடுப்பில் அலாவுதீன் கில்ஜியோடு கலந்து கொண்ட கவிஞரும், வரலாற்று ஆசிரியருமான அமீர் குஸ்ரூ பத்மினி கதையைப் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை.

சித்தூர் படையெடுப்பிற்கு பத்மினி முக்கிய காரணமாக இருந்தார் என்றால், சமகால வரலாற்று ஆசிரியர்களான அமீர் குஸ்ருவும், பரணியும் அதுபற்றி ஏதும் கூறாதது விந்தையிலும் விந்தையாகும்.

பத்மினியைப் பற்றி வேறு சான்றுகள் நமக்கு கிடைக்கும் வரை ஜெய்ஸி கூறும் உருவகக் கதையினை நாம் உண்மையென முற்றிலும் ஏற்றுக் கொள்ள இயலாது. அலாவுதீன் கில்ஜிக்கு சித்தூர் படையெடுப்பை மேற்கொள்ள ஒரு பத்மினி தேவையில்லை என்கிறார் டி.ஆர். இராமச்சந்திரன், (டில்லி சுல்தானியத்தின் வரலாறு, சென்னை, 1977).

பத்மினியைப் பற்றிய புனைக்கதை

சித்தூர் போரின் போது ரத்தன் சிங்கின் மனைவி பத்மனியும் ஏனைய இராஜபுத்திர பெண்மணிகளும் தீமூட்டி தங்கள் உயிரை மாய்த்தனர். Rani Padmini the Heroine of Chittor B.K. கர்கரா அவர்களால் எழுதப்பட்டு 2009இல் வெளியிட்டது. 252 பக்கங்களைக் கொண்டது அந்த நூல் அதில் பக்கம், 3, 4 இல் வரும் செய்தி இது.

முதலாம் பானிபட் போரில் (கி.பி. 1526) ராணி பத்மினி பேசப்படுகிறார். அதனைத் தொடர்ந்து கி.பி. 1540இல் புனையப்பட்ட கதாபாத்திரமாக பத்மினி பேசப்படுகிறார். சரங்பூரைச் சேர்ந்த நரய்ன்தாஸ் 1526இல் தந்த நூல் 'சிகித்தை சரிதா'. இதில் தேவல் தேவி, சிகித்தை என்ற இரு பெண்கள் பற்றிய செய்தி வருகிறது. அதில் மூன்றாவது ஒரு பெண் பற்றிப் பேசுகிறார். அது பத்மினியாக இருக்கக் கூடும் என்கிறார்.

அந்த நூலில் (Chhitai Charita) கவிதை வரி 455, 456 கவனமாக வாசிக்க வேண்டும் என்கிறார்.

சில செய்திகள், சில குறிப்புகளைச் சொல்கிறார். அது வரலாறா? அல்லது வரலாறு இல்லையா? பத்மினி என்பவர் சரித்திரமா? அல்லது இல்லையா? என்று கேட்கிறார்.

14ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் வாழ்ந்தவர் அலாவுதீன் கில்ஜி. இந்த நூலோ 16வது நூற்றாண்டின் துவக்கத்தில் (1526) இரண்டு நூற்றாண்டுகள் கழித்து எழுதப்பட்டது. பத்மினி பற்றிய செய்திகள் வரலாற்றில் சொல்லப்படவில்லை. பத்மினி என்ற பாத்திரம் இருந்ததா? இல்லையா? என்பதே கேள்விக்குறி.

மாலிக் முகம்மது ஜெய்ஸி

உத்தர பிரதேசம் அமேதி ஜெய்ஸியில் பிறந்தவர் மாலிக் முகம்மது ஜெய்ஸி. இவரது வாழ்க்கை வரலாறு பற்றிய செய்திகள் கிடைக்கவில்லை. ஜயாஸ் நகரில் வாழ்ந்த இவரது ஆசிரியர் ஸையித் முஹிஉத்தீன் ஜயாஸி வேதாந்தத்தில் சிறந்த அறிவு

பெற்று விளங்கினார். காஜிபூர், போஜ்பூர் மன்னர் ஜகத்தேவின் அவைக்கவிஞராக ஆதரிக்கப்பட்டவர் மாலிக் முகம்மது ஜெய்ஸி.

பின்னர் அமேதி அரசரிடம் தன் வாழ்நாள் முழுவதும் இருந்தார். இவர் கி.பி. 1540இல் இயற்றிய நூல் பத்மாவதி. பிரேம கதைகள் பரம்பரையில் பத்மாவத் தலைசிறந்தது. எளிய நடையில் அமைந்துள்ளது. சாதனை முறைகளைப் பற்றியும், அதனைக் கடைப்பிடிப்பதில் உண்டாகும் துன்பங்கள், பேறு (சித்தி) அடையும் வழிகள் இந்த நூலில் வர்ணிக்கப்பட்டுள்ளது.

சமஸ்கிருத பிரபந்த காவியங்களைப் போல காதை முறையில் இயற்றப்படாமல், பாரசீக மொழியின் ‘மஸ்னவி’ நடையில் இயற்றப்பட்டிருக்கும் நூல் இது. (காமரசம்) சிருங்காரம், வீரம் முதலிய ரஸங்களை வர்ணித்து இந்தி காவிய முறையையே தழுவி வந்துள்ள நூல் பத்மாவத்.

சூபி சித்தாந்தத்திலும் ஹிந்து தர்மத்திலும் ஈடுபாடு கொண்டவர் மாலிக் முஹம்மது ஜெய்ஸி. இவர் ஒரு கண் பார்வையில்லாதவர். இந்த காவியத்தை (சம்பவம் நடந்தது 1303) இவர் எழுதியது 1540ல். அதாவது 237 ஆண்டுகளுக்குப் பின் அவர் எழுதிய கதை பத்மாவத்.

சூபி மார்க்க சித்தாந்தங்களை ஹிந்து மத பண்பாடுகளுடன் பிணைத்து புதிய முறையில் எழுதியதோடு நில்லாமல் மாலிக் முகமது ஜயாஸி சரித்திரச் சம்பந்தமான நிகழ்ச்சிகளுக்குப் புத்துயிர் ஊட்டினார். இந்த சரித்திர நிகழ்ச்சிகள் சித்தூரைச் சார்ந்த இராஜபுத்திர இந்து அரசர்களின் ஆதர்சங்களுக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றன.

மாலிக் முஹம்மது ஜயாஸியின் பத்மாவத் கதைச் சுருக்கம் இதோ:

சிங்களத்தீவின் (இலங்கை) மன்னன் கந்தர்வஸேனின் மகள் பத்மாவதி. அழகில், அறிவில், குணத்தில் தன்நிகரற்றுத் திகழ்ந்தார். அவளுக்கு ஏற்ற கணவன் எங்கும் கிடைக்கவில்லை.

அவனிடம் தங்க நிறங் கொண்ட ஹீராமன் என்னும் ஒரு கிளி இருந்தது. அது பேசும் திறன் கொண்ட பண்டிதனைப்

போல இருந்தது.

ஒருநாள் அது அழகிற் சிறந்த அரச குமாரியிடம் (பத்மாவதி) அவளுக்கு ஏற்ற வரன் வாய்க்காததைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தது. அரசன் கந்தர்வஸேன் கிளியின் கூற்றைக் கேட்டுக் கோபமடைந்தான். அரசனிடம் பயந்த கிளி, யாருக்கும் சொல்லாமல் அங்கிருந்து பறந்து சென்று விட்டது. அதை அறிந்த பத்மாவதி அழுது புலம்பினாள்.

பறந்து சென்ற தங்கநிற ஹூராமன் எனும் கிளி வேடன் ஒருவன் கையில் அகப்பட்டது. அவன் அதனை சித்தூரின் கடை வீதிக்கு கொண்டு வந்து அங்கு ஒரு பிராமணரிடம் விற்றுவிட்டான். அந்தப் பிராமணர் அந்த அழகிய கிளியை அரசர் ரத்தினசேன் என்பவரிடம் ஒரு இலட்ச ரூபாய்க்கு விற்று விட்டான். அதனை அரசன் நேசிக்கத் தலைப்பட்டான்.

ஒருநாள் அரசன் வேட்டைக்குச் சென்றிருந்த போது அரசி நாகமதி கிளியிடம் வந்தாள்; தனக்கு ஈடான அழகி உலகத்தில் யாரேனும் உண்டா என்று கேட்டார். அவள் தனது அழகினால் ஆணவமும் செருக்கும் கொண்டிருந்தாள். இந்த உலகிலேயே தான் தான் சிறந்த அழகி என்பதே நாகமதியின் கருத்து.

அரசி நாகமதியின் கேள்விக்கு கிளி பரிகாசமாகச் சிரித்துக் கொண்டே பதில் கூறியது. சிங்களத் தீவின் அரச குமாரி பத்மாவதியின் அழகை வர்ணித்தது. உனக்கும் அவருக்கும் இருட்டுக்கும் நிலவுக்கும் உள்ள வித்தியாசம் போன்றது என்று கூறியது.

அரசன் 'கந்தர் வஸேனிடம் பத்மாவதியின் அழகை, எழிலை வர்ணித்து அவனது மனத்தை ஹீராமன் எனும் கிளி மாற்றி விடப் போகிறதே என்னும் பயத்தில் அதைக் கொன்றுவிடும்படி ராணி நாகமதி உத்தரவிட்டாள்.

ஆனால் அரசியின் சேடி (தோழி) அரசருக்குப் பயந்து அந்தக் கிளியைக் கொல்லவில்லை. அதனைத் தனது வீட்டிலேயே மறைத்து வளர்த்து வந்தாள். வேட்டைக்குச் சென்றிருந்த மன்னன் திரும்பினான். கிளியைக் காணாமல் மனம் வருந்தினான்,

துயருற்றான்; அங்கிருப்போர் மீது கடுங்கோபங் கொண்டான்.

தோழி மன்னனிடம் கிளியைக் கொண்டு வந்தார். அதன் வாயிலாகவே அரசர் நடந்த அத்தனையையும் அறிந்து கொண்டான். பத்மாவதியின் அழகைக் கேள்வியுற்ற மன்னன் மயங்கி வீழ்ந்தான். கடைசியில் அவளைக் காண வேண்டும் என்ற பேரவாவினால் தூண்டப்பட்டான். அரச போகத்தைத் துறந்தான், சந்நியாசி வேடம் கொண்டான். அவனுக்கு முன்னால் ஹீராமன் எனும் தங்கநிறக்கிளி வழிகாட்டி அழைத்துச் சென்றது.

சந்நியாசி வேடத்தில் சென்ற அரசன் ரத்னசேன்னுடன் 16,000 இளைஞர்கள் சந்நியாசி வேடத்தில் உடன் சென்றனர்.

கலிங்க நாட்டிலிருந்து கிளம்பிய இந்த சந்நியாசிகள் கூட்டம் மரக்கலம் ஏறியது. பற்பல இன்னல்களைக் கடந்து இறுதியில் சிம்ஹலத்தை (சிங்களம்) (இலங்கை) அடைந்தது.

அங்குள்ள சிவன் கோயிலில் அரசன் மற்ற சந்நியாசிகளுடன் சேர்ந்து கொண்டு பத்மாவதியைத் தியானித்துக் கொண்டும் அவள் பெயரை ஜெபித்துக் கொண்டும் இருந்தான். கிளி பத்மாவதியிடம் சென்று எல்லா விவரங்களையும் கூறியது.

அரசன் ரத்னசேனனின் மாசுமறுவற்ற தூய அன்பினால் கவரப்பட்டு பெரிதும் அகமகிழ்ந்து அன்பினால் நெக்குருகினாள். ஸ்ரீ பஞ்சமியன்று பத்மாவதி சிவபூஜை செய்வதற்காக சிவன் கோயிலுக்குச் சென்றாள். அவளைப் பார்த்த அரசன் ரத்னசேன் அவளது அழகில் மயங்கி மூர்ச்சையுற்றான். அவளை நன்கு பார்க்க முடியவில்லை அரசனால்: அரசன் மூர்ச்சை தெளிர்ந்ததும் மனம் வருந்தினாள். இதை அறிந்த பத்மாவதி நீ நல்ல சந்தர்ப்பத்தை நழுவவிட்டு விட்டாய்; மறுபடியும் என்னைக் காண விரும்பினால் இந்த நெடிது உயர்ந்த வானளாவிய கோட்டையைக் கடந்து வா; அப்போதுதான் என்னைக் காண இயலும் என்று செய்தி அனுப்பினாள்.

ரத்னசேன் சிவனது அருளைப் பெற்று இரவோடு இரவாக தன் தோழர்களுடன் கோட்டைக்குள் புகுந்தான். பொழுது விடிந்ததும் அரசன் பிடிபட்டான். சிங்கள அரசன் கந்தர்வசேனன்

உத்தரவுப்படி சித்தூர் அரசன் ரத்னசேனைத் தூக்கிலிட அழைத்துச் சென்றனர். உடன் வந்திருந்த 16,000 இளைஞர்கள் அரசுப் படையோடு போரிட்டு வென்றனர். சந்நியாசிகள் நடுவில் சிங்கள மன்னன் ரத்னசேன் பாதங்களில் வீழ்ந்து வணங்கினான் ''பத்மாவதி உங்கள் சொத்து நீங்கள் விரும்புபவருக்கு அவளை அளியுங்கள்'' என்று கூறினான். ரத்னசேன் பத்மாவதி திருமணம் நடந்தேறியது. சில நாட்கள் கடந்தது. மன்னன் ரத்னசேன் பத்மாவதியுடன் சித்தூர் கோட்டைக்குத் திரும்பினான்.

ரத்ன சேனின் அவையில் யட்சணி (பெண்பேய்) வித்தையில் கை தேர்ந்த இராகவசேன் என்னும் பண்டிதன் இருந்தான். அவையிலுள்ள ஏனைய கவிகளை அவமானப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தினால் அவன் தன் யட்சணி வித்தையின் மூலம் பிரதமையன்று (சந்திரன் வரும் முதல் நாள்) மூன்றாம் பிறையைக் காட்டிவிட்டான். அரசன் இதை அறிந்தான். இராகவசேனை நாடு கடத்தி விட்டான். கொதிப்புற்ற அவன் அரசனைப் பழிவாங்க எண்ணினான். டில்லி சென்றான்.

அலாவுதீன் கில்ஜியைச் சந்தித்து அடைக்கலம் புகுந்தான். தான் பரிசாகப் பெற்ற பத்மாவதியின் கங்கணம் (ராக்கி) ஒன்றை அரசனுக்குக் காட்டி, பத்மாவதியின் அழகை வருணித்து உலகிலேயே அவளைப் போன்ற அழகி இல்லை என்று ஆவலைத் தூண்டினான். அலாவுதீன் கில்ஜியும் பத்மாவதியை தன்னிடம் அனுப்புமாறு கடிதம் எழுதினான்.

பத்மாவத்

மாலிக் முஹம்மது ஜெய்ஸியின் உருவகக் கதையைப் பின்பற்றி அதற்குபின் 16ஆம் நூற்றாண்டிலிருந்து பத்மினி கதையை வரலாற்று ஆசிரியர்கள் இராஜபுத்திர வரலாறுகளில் திணித்தனர்; எழுதினர்; அலாவுதீன் கில்ஜியைத் தூற்றிடும் வண்ணம் தொடர்ந்து பல நூல்கள் எழுந்தது என்பதும் வரலாற்று உண்மையாகும். அந்த வகையில் எழுந்ததுதான் சஞ்சை லீலா பன்சாலியின் பத்மாவத் திரைப்படம்.

சுட்அப்பாசு Padmavati The queen tells Her own story என்ற ஆங்கில நூலை 2017இல் 299 பக்கங்களில் தந்துள்ளார். அதில் சித்தூர் அரசர் ரத்தன் சிங்கிற்கு பிரபாவதி மூத்த மனைவி என்று பக்கம் 7இல் தெரிவித்துள்ளார். முகம்மது மாலிக் ஜெய்ஸி ரத்தன் சிங்கின் முதல் மனைவி நாகமதி என்று தெரிவித்துள்ளார்.

பேராசிரியர் சதிஷ் சந்திரா தனது மத்திய கால இந்திய வரலாறு நூலில் இவ்வாறு கூறுகிறார்:

அலாவுதீன் கில்ஜி சித்தூரைத் தாக்கக் காரணம் என்று கூறும் ஒரு தொல்கதை மிகவும் பிரபலம். இதன்படி சித்தூர் ராணி பத்மினியின் பேரழகில் மயங்கிய அலாவுதீன் கில்ஜி அவரைச் சிறை எடுப்பதற்காக படை எடுத்ததாகக் கூறப்படுகிறது.

பல வரலாற்று ஆசிரியர்கள் இதை ஏற்பதில்லை; ஏனென்றால் பல நூற்றாண்டு கழிந்த பின்னர்தான் இவ்வாறு முதன் முதலில் கூறப்பட்டது. இதற்குப் பின் இந்திக் கவிஞரான மாலிக் முகம்மது ஜெய்ஸியால் இக்கதை மேலும் மெருகேற்றப்பட்டது. சிங்கள தீவின் இளவரசியான பத்மினியை அடைவதற்காக, ரத்தன் சிங் ஏழு கடல்களைத் தாண்டிச் சென்று, அவளை அடைவதற்காக, பல நம்ப முடியாத சாகசங்களைச் செய்து, பத்மினியைச் சித்தூருக்கு கொண்டு வந்ததாக அவர் கதை போகிறது.

இக்கதையின் மற்றொரு பகுதியாக மாற்றான் மனைவியான ராணி பத்மினியின் முகத்தை சுல்தான் பார்க்க விரும்பியதாகவும் அதற்கு கண்ணாடியில் தெரியும் அவள் முகத்தைப் பார்க்க,

பெருமிதம் மிக்க ராணா அனுமதித்ததாகவும் கூறப்படுகிறது.

நினைத்தே பார்க்க முடியாத அபத்தம். இப்படி ஒரு ஆலோசனை என்பதே தங்களைத் தாங்களே நெருப்பில் எரித்துக் கொள்ளும் பெருமிதமான ராஜபுத்திரர்களுக்கு அவமானமாக இருந்திருக்கும்'. (Satish Chandra, History of Medieval India, Orient Blackswan Private limited, Hyderabad 2018, page 98)

மத்திய கால இந்திய வரலாறு நூலில் சதிஷ் சந்திரா தெள்ளத் தெளிவாகச் சொல்லிடும் கருத்தை எவர் மறுத்திட முடியும்?

அடியேன் கல்லூரி கால வாழ்க்கையில் வரலாறு பயில்கின்ற போது எங்களுக்குத் தரப்படும் நூல் மதுரை யாதவர் கல்லூரி துணை முதல்வர் டி.எஸ். ராமலிங்கம் எழுதிய இந்திய வரலாறு. அந்த நூலில் பக்கம் 287இல் அவர் சொல்கிறார் இதோ:

''மீவார் ராணாவின் மனைவியான பத்மினியை அடைய வேண்டுமென்ற விருப்பமே மீவார் படை யெடுப்பிற்கு முக்கிய காரணமாயிருந்ததெனக் கூறப்படுகிறது. இப்பெண்மணி ஈடுஇணையற்ற அழகியாக விளங்கினார்...'' என்று முடித்திடவில்லை. தொடர்ந்து சொல்கிறார்... "ஆனால் பத்மினியைப் பற்றிய நிகழ்ச்சிகள் புனைந்துரைக்கப்பட்டவை எனத் தற்கால ஆசிரியர்கள் கருதுகின்றனர்.''

திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியில் பணியாற்றிய ஸையித் இப்ராஹிம் இந்தியாவில் முஸ்லிம் ஆட்சி என்னும் இருபகுதி நூலை வெளியிட்டுள்ளார் (1975). இந்த நூலை அவர் மின் ஹாஜிஸ் ஸிராஜ், தபகாதே நாஸரி, ஃபரிஷ்த்தா, ஸியாவுத்தீன் பரணீ முதலிய மூல நூல்களின் ஆதாரத்தில் தப்பெண்ணங்களை அகற்றி உண்மையான வரலாற்றுச் செய்திகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்று முன்னுரையில் குறிப்பிடுவார். அதில் தொடர்ந்து அவர் கூறுவார்:

''ஓர் இனத்தை இழிவுபடுத்தி, அதன் இன உணர்ச்சிகளையும் பெருமைகளையும் அதிலிருந்து அகற்றக் கூடிய முறைகளிலே அது தனது கடந்தகால உயர்வைக் குறித்து சந்தேகித்து வெட்கப்படுமாறு செய்யும் முறையும் ஒன்று. அதன் விளைவாக,

அந்த இனத்தின் தற்காலச் சந்ததியார் தங்கள் மூதாதைகளை இழிவாகக் கருதி அவர்களை வெறுக்கவும் கூடும்.

ஓர் இனம் தனது பழங்காலப் பெருமையை மறந்து தம்முன்னோர்களை வெறுப்புடன் நினைவுபடுத்த ஆரம்பித்து விட்டால், அது வெகுவிரைவிலும் எளிதிலும் தாழ்வடைந்து விடக்கூடும்.

ஆங்கிலேயர் இந்தியாவைக் கைப்பற்றித் தங்கள் ஆட்சியைத் தொடங்கிய பொழுது, இந்த முறையைத்தான் கையாண்டார்கள்.

தங்களுக்கு முன்னர் இந்தியாவில் ஆட்சி செய்த முஸ்லிம்களின் வரலாற்றைத் திரித்து கட்டுக் கதைகளைச் சேர்த்து இந்த விஷத்தைக் கலந்து விட்டார்கள். இவ்வாறான விஷங்கலந்த வரலாற்று உணவானது பாடசாலைகளிலும், கல்லூரிகளிலும் மாணவர்களுக்கு அளிக்கப்பட்டது. அதன் விளைவாக, இந்தியாவில் ஆட்சி செய்த முஸ்லிம் சுல்தான்களை வனவிலங்குகளைக் கிழித்துத் தின்றும் மாமிச பட்சிகள் என்றே நமது மாணவர்கள் அனைவரும் எண்ணுகின்றார்கள்.

ஹிந்துக்களை முஸ்லிம் சுல்தான்கள் கொடுமையாக நடத்தியதாக ஆங்கிலேயர்கள் எண்ணற்ற நூல்களை எழுதி விட்டார்கள்.

இஸ்லாம் மார்க்கத்தையும் அதைப் பின்பற்றுவோரையும் குறித்த உண்மையான வரலாற்றை மேல் நாட்டார் கட்டுக்கதைகளாக மாற்றி அமைத்து உலகில் பரப்பி விட்டார்கள்.

குறிப்பாக, இந்தியாவில் முஸ்லிம் அரசைக் குறித்து அவர்கள் எழுதிய பொய்ச் சரிதைகளில் இந்திய மக்களுக்கு ஏற்பட்ட நஷ்டத்தைப் போன்று வேறெந்த நாட்டிலும் நடந்திராது என்று எண்ணுகிறோம். எனினும் இறுதியில் சத்தியமே வெற்றி பெறும்'' என்று நீண்ட ஆதங்க முன்னுரையுடன் வெளிவந்த அந்த நூலில் பக்கம் 130 - 134 வரை உள்ள செய்திகள் மட்டும் இதோ:

''சித்தூர் ராஜாவின் மனைவி ராணி பத்மினியின் அழகைக் கேள்விப்பட்டு அவர் மீது அலாவுதீன் காதல் கொண்டதாகவும்

கூறப்படுவதை ஜியாவுத்தீன் பரணி போன்ற ஒரு தலைப்பட்சமுள்ள சரித்திர ஆசிரியர்களும் கூறவில்லை.

சித்தூர் ராஜா அலாவுதீன் கில்ஜிக்கு கப்பம் கட்டாது இருந்தார்; எனவே சித்தூரைத் தாக்கினார். பிறகு வென்றார். தனது மூத்த புதல்வர் கிஸ்ர்கானை அதிபராக நியமித்தார்.

சித்தூர் வெற்றியின் போது அவரது மனைவி பத்மினி அங்கிருந்து ஓடி மறைந்தாள். ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தப்பட்ட கிஸ்ர்கான் சோம்பேறியாக இன்ப வாழ்வில் மூழ்கித் திளைத்தார்.

ஆனால் ராஜபுத்திரர்கள் மலைகளிலும் காடுகளிலும் மறைந்திருந்து ராணி பத்மினியைத் தங்களது தலைவியாக ஏற்றுக் கொண்டார்கள்; ராஜபுத்திரர்களைப் போருக்கு ஆயத்தப்படுத்துவதாக அலாவுதீன் கில்ஜி அறிந்தார்.

முதலில் சித்தூர் வென்றபோது பிடித்துவரப்பட்ட ரத்தன் சேன்னை ராணி பத்மினி பல்லக்குகளில் வந்து மீட்டுச் சென்றார். அவர் சித்தூர் காடுகளில் இருந்த போது சித்தூரின் சுற்றுப்புறங்களில் கொள்ளையடிக்க ஆரம்பித்தார். இதைக் கேள்விப்பட்ட அலாவுதீன் கில்ஜி தமது மைந்தர் கிஸ்ர்கானை சித்தூரின் அரசுப் பொறுப்பில் இருந்து நீக்கினார்.

ரத்தன் சேன்னுடைய சகோதரியின் புத்திரரை சித்தூரின் கவர்னராக அலாவுதீன் கில்ஜி நியமித்தார்.

ரத்தன் சேனின் சகோதரியின் புத்திரன் சித்தூர் சென்று இராஜபுத்திரர்களை தம்பக்கம் சேர்த்துக் கொண்டார். ரத்தன் ஸேனும், அவரது ராணி பத்மினியும் சரித்திரத்திலிருந்து மறைந்து விட்டார்கள். இதுதான் உண்மையான நிகழ்ச்சி. ஆனால், (இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பின்) இதை கட்டுக்கதை, புனைப்போர், அழகி பத்மினியின் மீது அலாவுதீன் காதல் என்னும் ஒரு விசித்திரக் கதையைக் கட்டிவிட்டார்கள்.

அதுமட்டுமன்று, இந்தக் கதையை இன்று நமது நாட்டில் ஒவ்வொரு குழந்தையும் நம்பும் படியும் செய்து விட்டார்கள்.

இந்தக் கதையில் இன்னொரு விஷயமும் விளக்கப்படுகிறது.

அதாவது சுல்தான் சித்தூரைத் திரும்பச் சென்று தாக்கியதாகவும், அதை வென்று நகரில் நுழைந்து ராணியைத் தேடியதாகவும், ராணி தன்னை நெருப்பிலிட்டுத் தற்கொலை செய்து கொண்டதாகவும் கதை கட்டி விடப்பட்டுள்ளது.

உண்மையில் ரத்தன் ஸேன் தில்லியிலிருந்து தப்பி வந்த பிறகு, சுல்தான் அலாவுதீன் சித்தூருக்குப் போனதாக சரித்திர ஆதாரமே இல்லை.

சித்தூருக்கு ரத்தன் ஸேனுடைய சகோதரி மகனை ஆட்சியாளராக நியமித்து அலாவுதீன் கில்ஜி அனுப்பியதற்கு சரித்திர ஆதாரங்கள் உள்ளது.

தில்லியிலிருந்து தப்பி வந்த பிறகு ரத்தன் ஸேனுக்கு சித்தூர் கோட்டையைக் கைப்பற்றும் வாய்ப்பு ஏற்படவில்லை. அவ்வாறு இருக்கையில் அவர் சித்தூர் கோட்டையைக் கைப்பற்றியதாகவும், கோட்டைக்குள் ராணி சதி சடங்கில் தன்னை நெருப்பிலிட்டு மாய்த்துக் கொண்டதாகவும் கதையாக்கி கூறுவதை நாம் எவ்வாறு நம்ப முடியும்?

இன்னொரு வேடிக்கை என்னவென்றால் பத்மினியை சிலர் ரத்தன் ஸேன் உடைய மனைவி என்று எழுதுகின்றார்கள்.

மற்றும் சிலர் ரத்தன் ஸேனுடைய மகள் பத்மினி என்றும் எழுதுகிறார்கள்''

இது ஸையித் இப்ராஹிம் 'இந்தியாவில் முஸ்லிம் ஆட்சி' முதற்பகுதி நூலில் தரும் தகவல் ஆகும்.

1947 ஆகஸ்ட் 15 நாடு விடுதலை பெற்ற சமயத்தில் இந்து முஸ்லிம் மதக் கலவரம் பல இடங்களில் ஏற்பட்டது. அண்ணல் காந்தியடிகள் நவகாளியில் யாத்திரை சென்றார். அப்போது சொன்னார்:

"நான் சுதந்திரம் கிடைத்ததை ஒப்புக் கொள்ள மாட்டேன்; நள்ளிரவில் ஓர் இளம் பெண் நடுவீதியில் எந்த வித பயமுமின்றி சென்று வரும் நாள் என்று வருகிறதோ அன்றுதான் சுதந்திரம் அடைந்த நாளாக ஏற்றுக் கொள்வேன்''.

அலாவுதீன் கில்ஜி காலத்தில் மக்களுடைய நலனுக்காக நாட்டில் புதிய நெடுஞ்சாலைகளைஅமைத்து பழைய பாதைகளைச் செப்பனிட்டார். நெடுஞ்சாலைகளில் திருடர்களின் அச்சத்தை நீக்கினார். ஒரு பெண் தனியாக பீஹாரிலிருந்து பஞ்சாப் வரை கையில் வெள்ளி நாணயங்களை வெளிப்படையாக காட்டிக் கொண்டு செல்லக் கூடிய நிலை ஏற்பட்டது. வியாபாரக் கூட்டங்கள் அச்சமின்றிப் பிரயாணம் செய்தன. கஷ்மீரிலிருந்து வங்காளம் வரையிலும் சிந்து நாட்டிலிருந்து தெலிங்கானா, தென்கடற்கரை (மலபார்) பிரதேசம் வரையிலும் இதே பாதுகாப்பு அளிக்கப்பட்டது. களவு என்பதே மறைந்துவிட்டது என்ற தகவலையும் தருவார் ஸையித் இப்ராஹிம். கரை கண்டம் கி. நெடுஞ்செழியன் 'முஸ்லிம் மன்னராட்சியில் இந்தியாவின் முன்னேற்றம்' என்ற நூலில் (சென்னை, 2004) பக்கம் 102 இல் இதில் சில பகுதிகளை மேற்கோளாகவும் காட்டியுள்ளார்.

மதுரைப் பல்கலைக்கழகத்தின் (தற்போது மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்) வரலாற்றுத் துறைத் தலைவர் டாக்டர் ந.சுப்பிரமண்யன் இந்திய வரலாறு கி.பி (1000–1707) (மேற்பட்டப்படிப்பிற்குரிய வரலாற்று நூல், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை 1976 மே மாதம் 380 பக்கங்கள்) என்ற நூலை தந்துள்ளார். அதில் பக்கம் 107 இல் அவர் குறிப்பிடுகிறார். ‘‘அலாவுதீன் கில்ஜி சித்தூரை வென்று வந்த வரலாற்றினிடையே பத்மினி என்பாளுடைய கதை ஒன்றும் கூறப்படுகின்றது. இக்கதையை யாவரும் அறிவர். இராஜபுதனத்து நாட்டுப்பாடல்களில் இது பெருவாரியாகப் பேசப்படுகின்றது. அபுல் பஸல், பிரிஷ்டா முதலிய பிற்கால முஸ்லிம் வரலாற்றாளர்கள் இக்கதையைக் கூறுகின்றனர். கி.பி. 1540க்கு முன்பு இக்கதை எந்த நூலிலும் இடம்பெறவில்லை. ஆயினும் அபுல் பஸல் பழைய வரலாறுகளை நம்பி தாம் எழுதுவதாகக் கூறுகிறார்.

அலாவுதீன் சித்தூருக்குச் சென்றதே பத்மினியைக் கருதி, என்பது ஒரு கருத்து. ஆனால், நாடு பிடிக்கும் ஆசையுள்ள அலாவுதீனுக்கு மண்ணாசையைத் தூண்டுவதற்கு எந்தப் பத்மினியும் தேவையில்லை.

மற்றும் அலாவுதீனின் இயல்பையும் திறமையையும், அறிவுக் கூர்மையையும் அறிந்தவர்கள் அவர் எந்தப் பெண்ணிடமும் அத்துணை எளிதில் ஏமாந்து விடுவார் என்று நம்பி விட முடியாது. ஆதலால் இப்பத்மினி கதை ஒரு கட்டுக் கதையேயன்றி வரலாறன்று என்று கொள்ளுதலே சிறப்புடைத்து' என்பார் வரலாற்றறிஞர் ந.சுப்பிரமணியம்.

அவர் அலாவுதீன் கில்ஜியை மதிப்பீடு செய்வதையும் நாம் குறிப்பிடாமல் இருக்க முடியாது. அதே நூலில் பக்கம் 115இல் பேராசிரியர் ந.சுப்பிரமணியம், "அலாவுதீன் தன்மையைப் பற்றிப் பலர் பலவாறாகக் கூறுவர். முஸ்லிம் ஆசிரியர்கள் அவரைப் புகழ்வர். இந்து ஆசிரியர்கள் அவரது சாதனைகளையும் அடக்கியே பேசுவர். அவருடைய திறமையையும், ஆற்றலையும் பொது அறிவினையும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

அவர் பேராசை பிடித்தவர்; ஆட்சியை அமைப்பதிலும், அதிகாரத்தைச் செலுத்துவதிலும், போரினை வெற்றியாக முடிப்பதிலும் நிகரற்றவர். அரசியலையும் சமயத்தையும் பிரித்துக் கருதியவர். அந்த வகையில், அதுவரையில் இந்தியாவில் ஒருவரும் எண்ணியிராத அரசியல் கருத்து அது. அவர் காலத்தில் நேர்மை உணர்ச்சியை ஓர் அளவுகோளாக்கிக் கொண்டு நோக்கினால் அவர் உயர்ந்த மதிப்பெண் பெறுவார்.

கல்விக்கும் அவருக்கும் எந்தவிதத் தொடர்பு மில்லையாயினும் அமீர் குஸ்ரு போன்ற பேரறிஞர்களை அவைக் கனத்தே போற்றினார்.

அலாவுதீன், ஷெர்ஷா, அக்பர் என்போர் முஸ்லிம் ஆட்சிக் காலத்தில் தலை சிறந்து விளங்கிய ஆட்சியாளர்கள். அவர்களில் அலாவுதீன் காலத்தாலேயன்றித் துணிவாலும் ஆற்றலாலும் முன் நிற்பவர். இவர் ஆட்சி முறையில் புகுத்திய பல சீர்திருத்தங்கள் வரலாற்று முக்கியத்துவம் பெற்றவை'' என்று கூறியுள்ளார்.

1982இல் Sangampolity எனும் 451 பக்கங்களைக் கொண்ட ஆங்கில நூலைத் தந்தவரும், (அது 1986இல் சாங்கால வாழ்வியல் என்று சங்கத் தமிழிலில் வந்தது. மூன்றாவது பதிப்பு

2017இல் 532 பக்கங்களில் வந்துள்ளது) The Brahmin in the Tamil country எனும் ஆங்கில நூலைத் தந்தவருமான (அது தமிழில், தமிழகத்தில் பார்ப்பனர்கள் என்ற பெயரில் மு.வி. சோமசுந்தரம் தமிழாக்கத்துடன் 2018இல் 272 பக்கங்களில் வந்துள்ளது) மூத்த வரலாற்றறிஞர், பேராசிரியர், முனைவர் ந.சுப்பிரமணியனின் சான்றைவிட வேறு என்ன வேண்டும்?

'ஹிந்துஸ்தான் பர் இஸ்லாமி ஹுக்கூமத்' (இந்தியாவின் இஸ்லாமிய ஆட்சி) எனும் நூல் டில்லியைச் சார்ந்த முஃப்தி ஷவுக்கத் அலீ ஃபஹ்மீ அவர்களால் 1950இல் 546 பக்கங்களில் உருது மொழியில் எழுதப்பட்டு வெளிவந்தது. அதனை திருச்சியைச் சேர்ந்த எனது பாசத்திற்குரிய அண்ணன் அல்ஹாஜ் குலாம் ரசூல் சாஹிப் தமிழில் மொழி பெயர்த்து 'இந்தியாவை ஆண்ட முஸ்லிம் மன்னர்கள்' எனும் 623 பக்கங்களைக் கொண்ட நூலாக 1998இல் வெளியிட்டார்கள். அந்த நூலில் பக்கம் 220, 221 இல் தந்துள்ள தகவல் இதோ:

சித்தூர் வெற்றியின் போது அலாவுதீன் கில்ஜியிடம் ரத்தன் சகோதரியின் மகன் தானாகவே வந்து அலாவுதீனிடம் சரண் அடைந்தான். எனவே அவனுக்கு மந்திரி பிரதானிகள் அவையிலே தங்கியிருக்க அனுமதி கிடைத்து விட்டது. சித்தூர் அதிபதி கிஸ்ஸர்கானின் உல்லாச வாழ்வால் பரிபாலனத்தில் சீர்குலைவு ஏற்பட்டது. இந்த சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்ட இராஜபுத்திரர்கள் அரசுக்கு எதிராக சதிவேலையில் இறங்கினர். ராணி பத்மினி தலைமை தாங்கினார்.

காட்டுப் பகுதியில் ஒன்று திரண்டிருந்த இராஜபுத்திரர்கள் அடிக்கடி சித்தூருக்குள் நுழைந்து கொலை கொள்ளையில் ஈடுபட்டு வந்தனர். இதனை எப்படி அடக்குவது என்று அலாவுதீன் கில்ஜி சிந்தித்தார். அப்போது ரத்தன் ஸீனின் சகோதரியின் மகன் ஒரு யோசனை கூறினார்.

ரத்தன் ஸீன் டில்லியில் சிறையில் இருப்பதால் அவனது மனைவி பத்மினியையும் டில்லிக்கு அழைத்துக் கொண்டால் இராஜபுத்திரர்கள் அடங்கிப் போவர் என்றான். அதனை அலாவுதீன் கில்ஜி ஏற்றார். சிறை வாழ்வு என்றாலும் சுகமாகவே

வாழ்ந்து கொண்டிருந்த ரத்தன்ஸீன் மனைவியை டில்லிக்கு அழைக்கும் கடிதம் என்று கூறிக் கொண்டு, இராஜபுத்திரர்களை இரகசியமாக ஆயுதம் சகிதம் வருமாறு கடிதம் எழுதி அனுப்பிவைத்தார். சூழ்ச்சியினை அறியாத அலாவுதீன் கில்ஜி ரத்தன் ஸீனை சிறையிலிருந்து விடுவித்து, அவனது மனைவி பத்மினியை அழைத்து வருமாறு அனுப்பி வைத்தான்.

திரைகட்டி மூடப்பட்ட பல்லக்கில் திட்டமிட்டபடி ஆயுத பாணிகளாக வந்த இராஜபுத்திரர்கள் டில்லியை நெருங்கினர். ராணி பத்மினியை வரவேற்பதாகக் கூறிக் கொண்டு, அங்கு வந்து சேர்ந்த ரத்தன் ஸீன் சங்கேத மொழியில் சமிக்ஞை செய்தான். பல்லக்கில் பதுங்கியிருந்தவர்கள் ரத்தன் ஸீனுடன் அனுப்பிவைத்த அலாவுதீன் கில்ஜியின் போர்வீரர்களைக் கொன்று குவித்தனர். ரத்தன் ஸீன் தயாராக இருந்த குதிரையில் ஏறி தப்பினான். இராஜபுத்திரர்களும் அவ்வாறே சென்றனர். ரத்தன்ஸீன் மனைவி பத்மினியுடன் சேர்ந்து கொண்டான். இதுதான் உண்மையான சரித்திரம்.

பெரும்பாலான சரித்திர ஆசிரியர்கள் ஸுல்தான் அலாஉத்தீன் கில்ஜீ, ரத்தன் ஸீனின் மனைவி ராணி பத்மினியைக் கடத்திக் கொண்டு போய் தனது அந்தப்புரத்தில் வைத்துக் கொண்டார் என்று பொய் எழுதியுள்ளனர். இது ராணி பத்மினி பற்றி சரித்திர ஏடுகளில் ஒரு புரட்டு என்கிறார் முஃப்தி ஷவுக்கத் அலி ஃபஹ்மீ (தமிழாக்கம் T.S. குலாம் ரஸூல்)

டாக்டர் A.G.அநுமந்தன், ந.க. மங்கள முருகேசன் ஆகியோர் தொகுத்த இந்திய வரலாறு கி.பி. 1206 முதல் கி.பி. 1773 வரை டிசம்பர் 1976 தமிழ்நாடு பாட நூல் நிறுவனம் வெளியிட்ட 717 பக்கங்களைக் கொண்ட நூல். அதில் பக்கம் 49இல் உள்ளது அப்படியே:

“அலாவுதீனின் சித்தூர்ப் படையெடுப்பிற்குக் காரணமாக மரபு வழிச் செய்தி ஒன்று கூறப்பட்டு வருகிறது. சித்தூர் ராணி பத்மினியின் அழகைப் பற்றிக் கேள்விப்பட்ட அலாவுதீன் அவ்வழகிய முகத்தை நேரில் பார்க்க விரும்பியதாகவும், அதற்கு ஒப்பாத இரத்தன் கண்ணாடியில் பார்த்துச் செல்ல ஏற்பாடு

செய்ததாகவும், கண்ணாடியில் பார்த்த போதே அவ்வளவு அழகாயிருப்பவள் நேரில் பார்க்க எவ்வளவு அழகாயிருப்பாள் என்று எண்ணிய அலாவுதீன் பத்மினியின் மீது மோகவெறி கொண்டு அவளை அடையக் கருதிச் சித்தூர் மீது படையெடுப்பதாகவும் கூறப்படுகிறது.

இச்செய்தியைக் கர்னல் டாடு எடுத்துக் காட்டியுள்ளார். (அந்த நூல் பற்றி முன்பே கூறியுள்ளோம்) இது எவ்வளவு அபத்தமானது என்று பேராசிரியர் சதீஷ் சந்திரா எழுதியதையும் மீண்டும் நினைவில் கொள்ள வேண்டுகிறோம்

இதனை உண்மைச் செய்தி என்று எண்ணக் கூடிய வரலாற்று அறிஞர்களும் உள்ளனர். ஆனால் கே.எஸ். லால் முதலானவர்கள் இச்செய்திகளின் உண்மைத் தன்மையைக் குறித்து ஐயங் கொள்கின்றனர்.

(Kishori Saran Lal, History of the Khaljis AD 1290-1320, Asia Publishing House, Bombay, 1967இல் 388 பக்கங்களில் எழுதிய ஆங்கில நூலைப் பார்க்கலாம்)

பெரும்பாலான வரலாற்று அறிஞர்கள் இக்கதை கற்பனையில் எழுந்ததே என்று கூறுகின்றனர். இச்சம்பவம் குறித்து குஸ்ரூ, பரணி, இஸாமி ஆகியவர்களும் பிற சமகாலத்திய வரலாற்று ஆசிரியர்களும் ஏதும் கூறவில்லை. கி.பி. 1540இல் அதாவது சித்தூர் வீழ்ச்சி அடைந்து 237ஆண்டுகளுக்குபின் மாலிக் முகம்மது என்பவர் எழுதிய பத்மாவத் நூலில்தான் இந்நிகழ்ச்சி குறிப்பிடப்பட்டுள்ளது.

டாக்டர். கே.எஸ். லால், ‘பெரிஷ்டா முதலானவர்கள் இதனை வரலாற்று உண்மைகளைப் போல ஆக்கி விட்டனர்’ என்பார்.

டாக்டர் கௌரி சங்கர் ஒஜா இச்சம்பவம் கட்டுக் கதையேயாகும்; வரலாற்று உண்மை ஆகாது என்று கூறுகிறார்.

Gauri Shankar Ojha, Udai Purka Itihas, Ajmer 1928-1932, Rajputna ka itihas 3 volumes Ajmer 1926, Madhya Kalin Bharatiya Sanskriti Hindustani Acadamy Allahabad 1928 ஆகிய டாக்டர் கௌரி சங்கர்

ஓஜாவின் நூலின் வழியாக அலாவுதீன் கில்ஜியின் உண்மை வரலாறுகளை உலகம் உணர்ந்து கொள்ளலாம்.

வரலாற்றாசிரியர் கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி பத்மினி கதை குறித்து கருதுவது என்ன? 1950இல் நீலகண்ட சாஸ்திரி எழுதி வெளியிட்ட மத்திய கால இந்தியா என்ற 355 பக்கங்களைக் கொண்ட நூலில் பக்கம் 43இல் தரும் செய்தி இதோ:

(K.A.Nilakanta Sastri, History of India, part II, Medieval India, Madras 1950, page 43)

ராணாரத்தன் சிங்கின் அழகிய மனைவி பத்மினி குறித்து சொல்லப்படும் பாணர்களின் பாடல்களை (தொடர்ந்து பாடிவரும் பாடல்களை) வைத்து அலாவுதீன் கில்ஜி குறித்த வரலாற்றையும் இராஜபுத்திரர்கள் இறுதியில் தீக்குளித்து மாண்டு போனதைப் பற்றியும் எளிதில் கூறிவிடக் கூடிய காரியமல்ல என்று அவர் கூறுகிறார்.

கே.ஏ. நீலகண்ட சாஸ்திரியும், நி. ஸ்ரீனிவாச்சாரியும் இணைந்து எழுதிய நூல் இந்திய வரலாறு. சென்னையில் 1970இல் வெளிவந்த இந்த நூல் பல பதிப்புகள் கண்டது. 874 பக்கங்களைக் கொண்ட இந்த நூலில் அலாவுதீன் கில்ஜி பத்மினி கதை குறித்து கூறும் போது:

பாணர்கள் அல்லது பாரம்பரியப் பாடல்கள் மூலம் பத்மினி பற்றிய கதையை முடிவு செய்திட, பரிசீலத்திட, வரலாற்றில் எளிதில் மனநிறைவு படுத்த முடியாத, அது ஏற்றுக் கொள்ள இயலாத, பெரு முயற்சி தேவைப்படுகிற விஷயம் ஆகும் என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

(Nilakanta Sastri, Srinivasachari, Madras 1970, page 354)

ஜே.சி. மெஹ்தா, மத்திய கால இந்தியா என்ற நூலில் அலாவுதீன் கில்ஜியை வானளாவப் புகழ்கிறார். அலாவுதீன் கில்ஜியை டில்லி சுல்தான்களில் தலை சிறந்த மிகப் பெரியவர் என்கிறார். அக்பர், ஷெர்ஷா தவிர, அவரை வேறு யாருடனும் ஒப்பிட இயலாது என்கிறார். அவருடைய போரிடும் திறமையை,

வெற்றிகரமான நிர்வாகத் தன்மையைப் போற்றுகிறார். அவர் பத்மினி கதையைப் பற்றி தனது நூலில் பிரஸ்தாபிக்கவில்லை.

E.B. ஹேவல் என்ற சரித்திர ஆசிரியர் 583 பக்கங்களில் வெளியிட்ட நூல் ஆரிய ஆட்சியில் இந்தியா. அதில் அலாவுதீன் பத்மினி கதையைப் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. போர்களைப் பற்றி பொதுவாகச் சொல்லிச் செல்கிறார். இந்தியாவில் இஸ்லாம் பரவிட வழிவகை செய்தவர் அலாவுதீன் கில்ஜி என்கிறார். (E.B. Havell, The History of Aryan Rule in India, from the earlier times to the Death of Akbar, Calcutta, year not know, page 385)

ஸ்டான்லி லேன்பூல் தனது மத்திய கால இந்தியா நூலினை இலண்டனிலிருந்து 1903இல் வெளியிட்டார். 449 பக்கங்களைக் கொண்ட அந்த ஆங்கில நூலில் அவர் அலாவுதீன் கில்ஜி பத்மினி காதல் கட்டுக் கதை பற்றி எதையும் குறிப்பிடவில்லை. (Stanley Lanepoole, Medieval India under Mohammedan Rule AD 712-1764, 15வது பதிப்பு 1926)

அலகாபாத் பல்கலைக் கழகத்தில் வரலாற்றுத் துறையில் பணியாற்றிய பேராசிரியர் ஈஸ்வரி பிரசாத் இந்திய வரலாறு குறித்து நிறைய நூல்களை எழுதி உள்ளார். அவர் தனது நூலில் இவ்வாறு கூறுகிறார்...

கண்ணாடியில் பத்மினியைப் பார்ப்பது, கணவரின் விடுதலைக்காக பத்மினியைஅனுப்பி வைப்பது, இது எல்லாம் இராஜபுத்திரர்களின் குலத்திற்கே இழுக்கு என்பதை அறிந்தவர்கள்; அது குறித்து ஆலோசித்தவர்கள்; தற்கால வரலாற்றாசிரியர் பத்மினி கதை புராணக்கதை; மக்கள் பழங்கதை, இட்டுக்கட்டப்பட்ட கதை; வெற்றுப் புனைந்துறை கற்பனையாகப் படைக்கப்பட்டது; இல்லாத பொருளை கற்பனையாகச் சொல்வது என்பதை அறிவார்கள்.

சமகால வரலாற்று ஆசிரியர்கள் வெறும் பத்மினி கதையை கூறவில்லை. இந்த விஷயத்தை மேலும் ஆய்வு செய்ய வேண்டும். அப்போதுதான் முடிவிற்கு வரமுடியும். (Ishwari Prasad, A short History of the Muslim rule in India, Allahabad, 1976, 516 பக்கங்களைக் கொண்ட நூலில் பக்கம் 82, 83)

வி.டி. மகஜன் என்றொரு சரித்திர ஆசிரியர் டில்லி சுல்தானியர் வரலாற்றை 344 பக்கங்களில் 1970இல் தந்துள்ளார். ''பத்மினி கதையை கர்னல் டாட் எழுதியுள்ளார். அவருக்கு முன் மேவார் பட்ஸ் எழுதியதை தனக்குச் சான்றாகக் கொண்டுள்ளார். பட்ஸ் அதனை மலிக் முகம்மது ஜயாஜியின் பத்மாவதியிலிருந்து எடுத்துள்ளார்'' என்று குறிப்பிடுகிறார். (V.D. Mahajan, The Sultanate of Delhi, 1970, page 119)

பத்மினி கதை அழகான முறையில் ராஜபுதனத்து கதைப் பாடல்களில் சொல்லப்பட்டுள்ளது. நாவல் போன்று (புனைகதை) இருக்கிறது. சமகால சரித்திரச் சான்றுகள் எதுவும் இல்லை. டாட் கூறுவதை ஒப்புக் கொள்ளக் கூடிய வகையிலும் இல்லை.

சமகால சரித்திர ஆசிரியர்கள், கவிஞர்கள், பயணிகள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகக் கூறுகிறார்கள்.

குழப்பமான மாறுபட்ட விதவிதமான கருத்துகளைத் தருகிறார்கள். அவர்கள் பத்மினி விஷயம் குறித்து எதுவும் அறியாதவர்கள். (V.D. Mahajan, History of Medieval India, New Delhi, 2004, page 134, 136)

பாரதீய வித்யாபவன் (பம்பாய்) இந்திய வரலாற்றை 11 தொகுதிகளாகத்தந்துள்ளது. அதில் 6வது தொகுதி டில்லி சுல்தானிய அரசு. (913 பக்கங்கள் 1960இல் முதல்பதிப்பு, நான்காவது பதிப்பு 1990). அதில் பக்கம் 27இல் 'பத்மினி கதை பழமையான தொன்மக்கதை. முழுக்க முழுக்க கற்பனையானது, அது உறுதியாக சரித்திர உண்மைதான் என்று ஏற்றுக் கொள்ள இயலாது' என்று தெரிவிக்கிறது.

ஆப்ரகாம் எரலி ஆங்கிலத்தில் எழுதிய டில்லி சுல்தானிய வரலாற்று நூல் பெங்குயின் நிறுவனத்தால் 2014இல் வெளியிடப்பட்டது. பத்மினி கதை வாய் மொழிப் பாடல்களிலிருந்து ராஜஸ்தானில் அழகாக உருவாக்கப்பட்டது. அலாவுதீன் கில்ஜியின் நடத்தை பற்றி நமக்குத் தெரிந்த சரித்திர விவரங்களோடு இந்தக் கதையில் சொல்லப்படுகின்ற விஷயங்கள் ஒத்துவரவில்லை.

அலாவுதீன் கொடுமையான ஆட்சியாளன் என்றாலும் அவன்

காதல் பித்து பிடித்தவன் என்று சொல்வதற்கு எந்தவிதமான சான்றுகளும் வரலாற்றில் இல்லை.

(Abraham Erali, The age of wrath, A History of the Delhi Sultanate, Penguin, New Delhi, 2014, page 113)

பீப்பிள்ஸ் பப்ளிசிங் ஹவுஸ் பிரைவெட் லிமிடெட் (கல்கத்தா) இந்திய வரலாற்றை ஆங்கிலத்தில் 12 தொகுதிகளாக 17 நூல்களாக வெளியிட்டுள்ளது. அதில் தொகுதி 5ல் முதல் பகுதி டில்லி சுல்தானிய அரசைப் பற்றியது. அதில் பக்கம் 370, 371 இல் பத்மினி கதை பேசப்படுகிறது. பத்மினி கதைக்கு சரித்திரத்தில் சான்றுகள் இல்லை. ராஜஸ்தானத்து வரலாற்றை விரிவாகக் கற்றுணர்ந்த பேராசிரியர் டாக்டர் கௌரி சங்கர் ஓஜா. இந்த மாதிரி இருக்க வாய்ப்பில்லை என்று விரிவாகச் சொல்லியிருக்கிறார். சித்தூர் அலாவுதீன் கில்ஜி காலத்தில் எவ்வாறு யார் யாரால் ஆட்சி செய்யப்பட்டது என்று தெளிவாக சமகால ஆராய்ச்சியாளர்கள் எவரும் சொல்லவில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(A comprehensive History of India, Prof. Banarsi Prasad Saksena, Vol. 5, Part I The Delhi Sultanate AD 1206-1526, Published by The Indian History Congress, People's Publishing House, New Delhi, P. 370, 371)

We can therefore, join hands with Ibn Batuta, the Moorish traveller and consider Ala-ud-din as 'one of the best Sultans' of Delhi. V. தியாகராஜன், சேவியர் கல்லூரி, பாளையங்கோட்டை, எழுதிய இந்திய வரலாறு ஆங்கில நூல் 1949 பக்கம் 214இல் அலாவுதீன் கில்ஜி சிறந்த சுல்தான் என்ற இபின் பதூதாவின் கூற்றை மேற்கொள்காட்டியுள்ளார்.

தொட்டவற்றில் எல்லாம் வெற்றி பெற்றவர் அலாவுதீன் கில்ஜி. ஏழைகளும் எளிதில் நீதி பெற்றிட முறை மன்றங்களை அவரது ஆட்சியில் காஜிகள் மசூதிகளில் (பள்ளிவாசல்களில்) நடத்தினார்கள். (இபின் ஹஸன், முகலாயப் பேரரசின் மைய அமைப்பு, பா. மாணிக்க வேலு (மொழி பெயர்ப்பு) சென்னை 1991, பக்கம் 364)

இந்திய வரலாறு கி.பி. 1206 வரை தொகுதி I என்று புலவர் பேராசிரியர் கோ. தங்கவேலு 1976இல் வெளியிட்டார். 784 பக்கங்களைக் கொண்ட இந்த நூல் 1993, 2003 என்று தொடர்ந்து மறுபதிப்பு செய்யப்பட்டது. தற்போது பழனியப்பா பிரதர்ஸ் நிறுவனத்தினர் மறுபதிப்பு செய்து வருகின்றனர்.

இந்திய வரலாறு கி.பி. 1526 – 1947 வரை தொகுதி 3யை பேராசிரியர் கோ.தங்கவேலு வெளியிட்டார். அதனை தற்போது கல்லூரி பாடத்திற்கேற்ப மாற்றி 2002, 2007 என்று பழனியப்பா பிரதர்ஸ் மறுபதிப்பு செய்து வருகின்றனர். கி.பி. 1206 – 1526 வரை பேராசிரியர் கோ. தங்கவேலு எழுதிய இந்திய வரலாறு இரண்டாம் தொகுதியில் நிதர்சன உண்மைகளை உள்ளபடி எழுதியதால் அந்த நூல் மறக்கடிக்கப்பட்டு அல்லது மறைக்கப்பட்டுவிட்டது. இந்திய வரலாறு 2வது தொகுதி கி.பி. 1206 முதல் 1526 வரை ந.க. மங்கள முருகேசன், திருமதி இராசம் மங்கள முருகேசன் ஆகியோரைக் கொண்டு 2002 முதல் 2012 வரை பலபதிப்பு கண்டுள்ளது. அதில் அவர்கள் அலாவுதீன் பற்றிய மதிப்பீட்டை பக்கம் 132–135 வரை தந்துள்ளனர். அதில் சில பகுதிகள்.

‘‘டெல்லியை ஆண்ட சுல்தான்களில் அலாவுதீன் கில்ஜி மாபெரும் சுல்தான். இவரை ஷெர்ஷா, அக்பரோடு மட்டுமே ஒப்பிடலாம். மனிதர் என்று பார்க்கையில் திறமைமிக்கத் தளபதி, வெற்றிபெற்ற ஆட்சியாளர், தொலைநோக்குடைய அரச தந்திரி, அச்சமில்லாதவர், துணிவுள்ளவர்; பேரார்வம், வலிமை மிக்கவர்.

டெல்லி அரசை டெல்லிப் பேரரசாக மாற்றிக் காட்டிய மந்திரவாதி. ஆனால் மந்திரத்தால் அல்ல தம் இயல்புகள், படைபலம் ஆகியவற்றால் தென்னிந்தியாவில் இசுலாமியப் படைகள் புகுந்தமைக்கும், இசுலாமியக் கோட்பாடு நம்பிக்கைகள் விதைக்கப் பெற்றதற்கும் இவரே முழு முதற்காரணமாவார். அயல்படையெடுப்பாளர்களை அஞ்சி நடுங்கும்படி செய்தார். தன்சிந்தனை வழிச் செயல்பட்ட, உறுதியுடன் பாறையைப் போல் இறுக்கமான அலாவுதீன் தன் காலடியில் களை முளைக்காதவாறு சுழன்று செயல்பட்டார்.

கைநாட்டுப் பேர்வழியான சுல்தானுக்கு பட்டறிவு மிகுந்திருந்தது.

குதுப் மினாருக்கு அருகில் அலாவுதீன் கில்ஜி கட்டத் துவங்கிய அலாய் மினார்

விலை முடிவு, அங்காடிக் கட்டுப்பாடு, நுகர்வோர் பங்கீட்டு முறை ஆகிய பொருளாதாரச் சீர்திருத்தங்கள் பாராட்டுப் பெற்றவை என்பதோடு தனி இயல்புடையனவாய் காலங்கள் பல கடந்தும் பேசப்படுவன.

மனிதர்களை அளவிடக் கூடிய ஆற்றல் மிகுந்தவரான அவர் சரியானவர்களைத் தேர்வு செய்து பணியினைச் சரியாக முடித்தவர்.

தன் ஆட்சிப் பகுதியில் குடிமக்களுக்கு இன்றியமையாத பாதுகாப்பு, அமைதி, ஒழுங்கை அளித்தார்.

பணியாளர்களைக் கட்டுக்குள் வைத்து, அரசு அலுவலர்களின் ஒழுங்கீனங்களை ஒழித்து, இலஞ்சம், கையூட்டு ஆகியவைகளைத் தலை தூக்கிடாது, நேர்மையும், திறமையும் உள்ளவர்களே பேரரசின் ஒற்றர், தகவலாளிகளாக இருந்தனர்.

அரசியலைச் சமயச் சார்பற்றதாக நடத்தினார். சாமானிய மனிதனுக்கு நிம்மதி அளித்தார். விலைகள் குறைந்தன; பொருட்கள் தட்டுப் பாடின்றி எளிதாகக் கிடைத்தன.

கள்ளச்சந்தை, பதுக்கல், ஏமாற்றல், கறுப்புப் பூதங்கள் காணாமல் போயின.

ஷெர்ஷாவுக்கு நிலச்சீர்த்திருத்தம். படை அமைப்பு, சமூகப் பொருளாதாரக் கொள்கைக்கு முன்னோடி அலாவுதீன் கில்ஜி. இரண்டு நூற்றாண்டுக்கால முன்னேற்றங்களுக்கு காரணகர்த்தா அவர்.''

ரஷ்ய வரலாற்றாசிரியர்கள் எகா. K. அன்தோனவா, கி.ம. போன்காரத் லேவின் A.A. கத்தோவ்ஸ்கி இந்தியாவின் வரலாற்றை இரு பாகங்களாகத் தந்துள்ளனர். அதில் மிகத் தொல்காலம் முதல் 18ம் நூற்றாண்டின் நடுவரை முதல்பாகம். பூ. சோமசுந்தரம் மொழிபெயர்ப்பு. 1979 சோவியத் நாட்டில் அச்சிடப்பட்ட 400 பக்கங்களைக் கொண்ட முதல் பாகத்தில் ரஷ்ய சரித்திர ஆசிரியர்கள் பக்கம் 300இல் இவ்வாறு குறிப்பிடுகிறார்கள். 'கொடுமையும் உறுதியும் கொண்ட அலாவுதீன் திறமை சான்ற படைத்தலைவனாகவும், மேதைவாய்ந்த நிர்வாகியாகவும்

இருந்தான்' (K. Antonova, G.Bongard- levin, G. Kotovsky, A History of India, Book I, Progress Publishers, Moscow 1979 page 204)

அலாவுதீன் கில்ஜி, முதல் துருக்கியப் பேரரசை இந்நாட்டில் உருவாக்கியவர் என்று கூறும் வரலாற்றாசிரியர் ஏ.எல். ஸ்ரீ வத்சவா உச்ச நிலையை இவர் ஆட்சியின் கீழ் அடைந்தது என்றும் போற்றுகிறார். (Ashirbadilal Srivastava, History of India, 1000 - 1707 Agra, 1974, Page 131) (As hirbadlal srivastava, The Sultanate of Delhi 711-1526, Agra 1950, Page 172)

சிறந்த சுல்தானியர்களில் ஒருவர் என்று கருதப்படுவதற்கு அலாவுதீன் தகுதியுள்ளவர் என்று இப்னு பதூதா என்ற ஆப்பிரிக்கச் சுற்றுப் பிரயாணி ஒருவர் பதினான்காம் நூற்றாண்டில் தன் கருத்தை அறிமுகப்படுத்தியுள்ளார் என்ற மேற்கோளை வின்ஸ்டன் ஸ்மித் இந்திய வரலாற்று நூலில் தந்துள்ளார். (Vincent A.Smith The Oxford History of India from the earliest times to end of 1977, Oxford 1919, page 231)

அலாவுதீன் கில்ஜி மிகச் சிறந்த சுல்தான்களில் ஒருவர், மக்கள் அவரை வானளாவப் புகழ்ந்தனர் என்று இபின் பதூதா குறிப்பிடுகிறார். (R. சத்தியநாத அய்யர், ஞி. பால சுப்பிரமணியன், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1960, இந்திய வரலாறு பாகம் மிமி பக்கம் 40)

அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் R. சத்திய நாத அய்யர் இந்திய வரலாற்றை மூன்று தொகுதிகளாகத் தந்துள்ளார். அதில் இரண்டாவது தொகுதி பக்கம் 40 இல் அவர் அலாவுதீன் ஆட்சி பற்றி குறிப்பிடுகிறார். (R. Sathianatha Aiyer, A college textbook of Indian History Volume II, AD 1200-1700 Madras, 1941)

அலாவுதீன் கில்ஜியின் அமைச்சர்களும், தானைத் தலைவர்களும் அவர்களுடைய துணிவு, பற்றுறுதி, ஆற்றல் முதலியன காரணமாக அரசை நிலைபெறச் செய்ததுடன் அக்காலத்திய அரசியல் ஆட்சி முறைச் செய்திகளில் புகழத்தக்க மேன்மையையும் பெற்றனர். வேறு எக்காலத்திலும் நாம் காணவும் கேட்கவும் முடியாத பல சிறப்பான நிகழ்ச்சிகளை அலாவுதீன் கில்ஜி காலத்தில் காண்கிறோம்.

1. தானியங்கள், துணிமணிகள் முதலிய இன்னபிற இன்றியமையாத பொருட்களின் விலை மலிவு.
2. வெற்றிமேல் வெற்றி
3. மங்கோலியர் ஓட்டமும் அழிவும்
4. குறைந்த செலவில் நிறைவான படை அமைப்பு.
5. கலகக்காரர் கடுமையாக நசுக்கப்பட்டு பொது அமைதி நிலவுதல்.
6. எத்திசைகளிலும் சாலைகளில் காவல் அமைப்பு.
7. வணிகர்களின் நேர்மை
8. மசூதிகள், சிறுகிளைக் கோபுரங்கள், கோட்டைகள் முதலியன புதுப்பித்தலும் அமைத்தலும்.
9. ஆட்சியின் இறுதியான பத்து ஆண்டுகளில் முஸ்லிம்கள் நேர்மை, உண்மை, முறைமை, அடக்கம் முதலிய பண்புகளுடன் திகழுதல்
10. கல்வி அறிவாளர் பலர் சுல்தானின் ஆதரவு இன்றியே செழிப்புற்று வாழ்தல்.

(இந்த கல்வி அறிவாளர்கள் பட்டியல், தகுதிவாரியாக 26 பக்கங்களில் உள்ளது)

(H.M. Elliot, Prof. John Dowson, The History of India Volume III Delhi, 2008, Ziavuddin Barni, Tarikihi-Firoz Shahi, page 206-207)

தில்லியிருந்த குதுப் மினாருக்கு அருகில் மிகப் பெரிய ஒரு பள்ளி வாயிலை அலாவுதீன் கில்ஜி கட்டத் துவங்கினார். அதனையெடுத்து மற்றொரு மினாரும் கட்டத் திட்டமிட்டார். 1310 -1311 இல் இவற்றின் ஒரு பகுதி கட்டி முடிக்கப்பட்டது. செல்சக் துருக்கியர் கலைப் பாணியில் அமைந்த அலாவுதீன் நுழைவாயில் (Alai Darwaza) இஸ்லாமியக் கட்டடக் கலையின் தலை சிறந்த மணியான கட்டடங்களில் ஒன்றாகும் என்று வயவர்சாஸ் மார்சல் புகழ்ந்துரைத்துள்ளார்.

ஃபர்குசன் இதைப்போன்ற கட்டடம் இதற்கு முன்பு கட்டப்பட்டதில்லை யென்றும், இவ்வளவு அழகுடன் பின் வந்த

சுல்தானியரும் கட்ட முயலவில்லை என்றும் குறிப்பிடுகிறார். குதுப் மினாரை அடுத்து ஒரு கல்லூரியும் சமாத்கானா பள்ளிவாசலும் அலாவுதீன் கில்ஜி காலத்தில் கட்டப்பட்டது. (கோ. தங்கவேலு இந்தியக் கலை வரலாறு, முதல் புத்தகம், சென்னை, 1976, பக்கம் 558 560)

குதுப் மினாருக்கு வடக்கே அமைந்துள்ள சிரி, டில்லியில் இஸ்லாமியர்களால் உருவாக்கப்பட்ட ஏழு நகரங்களில் ஒன்று. மங்கோலியப் படையெடுப்பு குறித்த அச்சத்தினால் தலைநகருக்கு இடம் பெயர்ந்த மக்களுக்காக கி.பி. 1303இல் தொடங்கப்பட்டு ஆயிரங்கால் அரண்மனையை கொண்டிருந்தது. மேற்கு பகுதியில் 70 ஏக்கரில் அழகிய நீர்த் தேக்கம் அவுசிஅலாய் (Hauzi Alai) அல்லது அவுசிகாஸ் அமைக்கப்பட்டது. (வி. சாலமன் பெர்குட்ஷா, றி. முத்துக்குமரன், இந்திய இஸ்லாமியக் கலைவரலாறு, சென்னை, 2014, பக்கம் 37, 38)

அழகிய கட்டிடங்களையும் மக்கள் நலனுக்காக புதிய நகரங்களையும் நிர்மாணித்தவர் அலாவுதீன் கில்ஜி என்பதை இத்தகவல்கள் உணர்த்துகின்றன.

மாலிக் முகம்மது ஜயாஸியின் கற்பனை கதை

கல்கத்தா இராமகிருஷ்ண மடத்திலிருந்து இந்தியப் பண்பாட்டு வரலாறு அதிகப் பக்கங்களில் ஆறு தொகுதிகளாக (1937இல் 3 தொகுதிகளாக) வெளிவந்துள்ளது. அதில் ஐந்தாவது தொகுதியில் பத்மாவத் பற்றிய செய்தி வந்துள்ளது. 'பத்மாவத் கதைப் பாடல் கொஞ்சமாக சரித்திரம் சேர்ந்துள்ளது. மீதி அனைத்தும் கதைதான்' என்கிறது.

இந்தக் கதை முதலில் வெளியே தெரிந்தது மாமன்னர் அக்பர் காலத்தில். அவரது அவையில் 16ஆம் நூற்றாண்டில் இருந்த பதானியில் மேற்கோள் காட்டப்பட்டது. வட இந்தியாவில் கதை பரவலாக பிரசித்தி பெறத்துவங்கியது. 17ஆம் நூற்றாண்டில் வங்காளத்தில் தௌலத் காசி என்பவர் பத்மாவத் கதையை கிழக்கு வங்காள முஸ்லிம்களிடையே பிரபலப் படுத்தினார். மாலிக் முகமது ஜயாஜி 1520 1540 களில் உருவாக்கிய பத்மாவத் கதையை வங்காள மொழியில், செய்யது அலாய் 17ஆம் நூற்றாண்டில் மொழி பெயர்த்தார்.

1944இல் இதனை கல்கத்தா சொசைட்டியைச் சேர்ந்த A.G. சிராப் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.

(Sunil Kumar Chatterji, The cultural Heritage of India, Volume V, Languages and Literatures, The Ramakrishna Mission Calcutta, page 497)

கர்னல் G.H. ட்ரீவர் ரஜபுதனத்து கவர்னர் ஜெனரலின் ஏஜெண்டு. இவர் கி.பி. 1894இல் ரஜபுதனப் பாடல்களை இலண்டனில் வெளியிட்டுள்ளார். அதில் பக்கம் 27 முதல் 49 வரை சித்தூர் போர்கள் பற்றிய விவரம் பாடல் வடிவில் பேசப்படுகிறது. கர்னல் டாட் கூறிய அடிப்படையில் இந்த நூல் அமைந்துள்ளது. அதில் பக்கம் 31இல் கர்னல் டாட்டின் கருத்துப்படி பீம்சிங் பத்மினியின் கணவர் என்று கூறப்பட்டுள்ளது. இன்னொரு கூற்றின்படி ரத்தன்சிங் பத்மினியின் கணவர் என்று கூறப்பட்டுள்ளது என்ற தகவல் உள்ளது. பத்மினியின் கணவர்

யார்? ஆய்வுக்குரியது தானே?

(Col. G.H. Trevor C.S.I. agent to the Governor - General for Rajputana, Rhymes of Rajputana, London, 1894. page 31)

கேம்பிரிட்ஸ் ஹிஸ்டரி ஆப் இந்தியா தொகுதி மூன்றில் பக்கம் 524இல் அலாவுதீன் கில்ஜி ராந்தர்பூர் மற்றும் சித்தூரை 1303இல் கைப்பற்றியதை குறிப்பிட்டு விட்டுச் செல்வார்.

சித்தூர் முற்றுகையைப் பற்றிய செய்தி தவறானது. தவறுக்கு வழிகாட்டுதல் ஆகும். அதோடு உண்மைக்குப் புறம்பானது ஆகும். (Lt. Colonel Sir Wolseley Haig, இலண்டன் பேராசிரியர், The Cambridge History of India, Volume III, Turks and Afghans, S.Chand Publication New Delhi, 1987, page 524)

மாலிக் முகம்மது ஜயாஸி பத்மாவத் எழுதிய காலத்தில் பத்மினி என்ற பெயர் வீட்டுக்கு வீடு ராஜபுதனத்தில் இருக்கிறது. (B.K. Karkra முற்கூறிய நூல் பக்கம் 5) எந்தப் பத்மினியைப் பற்றி கற்பனையாக மலிக் முகம்மது ஜயாஸி எழுதினார்? இஸ்லாமியரான அவர் ஏன் இதை எழுதினார்? கற்பனையை ஏன் கலந்தார்?

1526 இல் முதல் பானிபட் போரில், பாபர் வெற்றி பெற்றதும், அதனைத் தொடர்ந்து இராஜபுதனத்து இராணா சங்காவை வீழ்த்தியதும், இராஜபுதனத்து வீரர்களின் எழுச்சிக்காக பின்னர் மலிக் முகம்மது ஜயாஸி பணத்திற்காக எழுதியிருப்பாரா? என்ற கேள்வியெல்லாம் எழுகிறது.

மக்கள் விரும்பக்கூடிய வகையில் கற்பனைக் கதையை இராஜபுதனம் வீழ்ந்து கொண்டிருந்த காலத்தில் மலிக் முகம்மது ஜயாஸி எழுதியிருக்கக்கூடும் என்றே நம்ப வேண்டியுள்ளது. சித்தூரை அலாவுதீன் கில்ஜி தொடர்ந்து எட்டு ஆண்டுகள் முற்றுகையிட்டதாக மலிக் முகம்மது ஜயாஸி கூறுவதை எவரும் ஏற்றுக் கொள்ள இயலாது. ஜயாஸியின் நூலின் கடைசிப் பகுதிகள் பற்றிக் குறிப்பிடும்போது டாக்டர் தசரத் சர்மா இது பிற்காலத்தில் எழுதப்பட்ட கதை என்கிறார். (கர்கரா, முற்கூறிய நூல், பக்கம் 8)

மலிக் முகமது ஜெய்ஸி தனது நூலின் இறுதியில் எதைச் சொல்கிறார்; என்ன சொல்ல விரும்புகிறார்? எதற்காகச் சொல்கிறார் என்பது தெளிவாகவும் இல்லை. விளங்கவும் இல்லை. (முற்கூறிய நூல், பக்கம் 9)

ஜி.ஹெச். ஓஜா பத்மினி கதையைத் தாண்டி அதற்கு முன் சொல்லப்படும் கமலா தேவி, தேவால் தேவி கதைகளும் முழுக்க முழுக்க கற்பனை என்கிறார்.

(Gauri Shankar Ojha, Gujarati, Annual number 1933. K.M. Munshi, The Glory that was Gujaradesa, Bombay, 1944, part III, page 225-226; A.K. Majumdar Chaulukayas of Gujarat, page 192)

ஹிந்தியில் 'பத்மினி' என்ற சொல் நான்கு வகைப் பெண் வகைகளைக் குறிக்கப் பயன்படும் ஓர் சொல் என்பதனையும் நாம் எண்ணிப் பார்த்திடல் வேண்டும். (The Delhi Sultanate, பாரதிய வித்யாபவன் வெளியீடு, முற்கூறிய நூல் பக்கம் 50)

ஹெச். எல்.ஓ. காரட்டும், சீதாராம் கோலியும் எழுதிய இந்திய வரலாறு பாகம் இரண்டு பக்கம் 57இல் அலாவுதீன் கில்ஜி சிறந்த மாபெரும் வெற்றியாளர் என்று போற்றப்படுகிறார்.

மாபெரும் வெற்றியாளரை மாது பித்துப் பிடித்தவரைப் போல மார்டன் சரித்திர ஆசிரியர்கள் கூறுவதை மனம் ஒப்புகிறதா?

சுசீலாதர் எழுதிய இந்திய சர்க்கார், செய்தி ஒலிபரப்பு அமைச்சகம் பப்ளிகேஷன்ஸ் டிவிஷன் வெளியிட்ட இந்திய வரலாறு பாலர் பதிப்பு 1966 மார்ச்சில் வெளிவந்தது. அதில் பக்கம் 89இல் விருந்துகள், மதுபானம், சூதாட்டம் முதலியவைகளை நடத்தக்கூடாது என்று அலாவுதீன் தம் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். ராஜபுத்திர அரசர்களுடன் போர் செய்து தம் ராஜ்யத்தை தென் திசையில் விஸ்தரித்தார் என்று புகழ்ந்து சொல்லப்பட்டுள்ளது. இட்டுக்கட்டப்பட்ட பத்மினி கதைப் பற்றிய பேச்சே அந்த நூலில் இல்லை.

M.S. இராமசுவாமி அய்யங்கார் ஆங்கிலத்தில் எழுதி M.S. சுந்தரேசுவர அய்யர் தமிழில் மொழி பெயர்த்து ஸ்ரீநிவாஸவரதாசாரி

கம்பெனியார் 1939இல் வெளியிட்ட இந்துதேச சரித்திரம் எனும் நூல் 400 பக்கங்களைக் கொண்டது. அதில் பக்கம் 183 இல் “அலாவுதீன் கில்ஜி காலத்தில் பயமின்மையும் நாட்டில் நிலைத்து, மற்ற முஸ்லிம் மன்னர்கள் காலத்தில் அடையாத சேம நிலையை நாடு அடைவதாயிற்று'' என்று போற்றியுள்ளார்.

டாக்டர் S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் எழுதிய ‘இந்து தேச சரித்திரம் ஆதிகாலம் முதல் முஸ்லிம் ஆட்சி ஸ்தாபனம் வரை’ என்ற நூல் லாங்மன்ஸ் கம்பெனியால் வெளியிடப்பட்டது. ‘இங்கிலாந்தை ஆண்ட நார்மானிய அரசர்களுடைய ஆட்சி எவ்வளவில் நேர்மையாகவும், கருணையுடையதாகவும் இருந்ததோ அவ்வளவிலேனும் முகம்மதியர்களுடைய (முஸ்லிம்களுடைய) ஆட்சி நேர்மையும் கருணையும் பொருந்தியது என்று கூறலாம். ஸ்பெயின் அரசனான இரண்டாம் பிலிப்பின் ஆட்சியைக் கவனிப்போமானால் முகம்மதிய ஆட்சி (முஸ்லிம்களின் ஆட்சி) எவ்வளவோ அதிக கருணை வாய்ந்த ஆட்சியென்று உறுதியாகக் கூறமுடியும்’ என்று சான்று தருபவர் டாக்டர் ஷி. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் என்பதனையும் சிந்தனையில் இருத்தியவாறு பத்மினி விஷயத்தைப் பற்றி தொடர்வோம்.

ஹிந்தியில் ஸ்ரீராம் சாத்தே எழுதி, தமிழில் T.S. சிவப்பிரகாசம், T.V. ரெங்கராஜன் P. வேலப்பன், K. கிருஷ்ணப்பன் மொழி பெயர்த்து ஸ்ரீ பாபா சாகேப் ஆப்தே ஸ்மாரக் சமிதி நாக்பூரில் இருந்து 1991ல் வெளிவந்த நூல் பாரத வரலாற்று வரிசை, அரசியல் பிரிவு பகுதி I பாரத அரசர்களும் அரசுகளும். 176 பக்கங்களைக் கொண்ட நூலில் பக்கம் 92ல் கில்ஜியின் வம்சாவளி டில்லியை முப்பது ஆண்டுகள் ஆண்டது கலி 4392 4452 (கி.பி. 1290 1320). அவர்களுடன் அலாவுதீன் கில்ஜி மிகவும் பராக்கிரமசாலி என்று போற்றப்பட்டுள்ளார்.

‘இந்துதேச சரித்திரம்’ பம்பாரம் எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் (சிதம்பரம்) எழுதி (இந்தியா லிமிடெட் மதராஸ்) 1938இல் வெளியிட்ட 176 பக்கங்களைக் கொண்ட நூல். அதில் பக்கம் 144இல் சித்தூர் வெற்றிக்குப்பின் அலாவுதீன் கில்ஜி, ரத்தன் சிங்கின் சகோதரி மகன் அர்ஸீ என்பவரை கவனர்னராக

நியமித்தார். மற்ற இராஜபுத்திரர்கள் தொடர்ந்து போராடியதால் 1306 1307இல் மேவாரின் ஸிவாரா கோட்டையைப் பிடித்து, ஸீதல் தேவ்வைச் சரண் அடையச் செய்து, தமக்கு வேண்டியவர்களுக்கு அலாவுதீன் கில்ஜி நாட்டைப் பிரித்துக் கொண்டுத்தார் என்று குறிப்பிட்டுள்ளார்.

1946இல் திருநெல்வேலியிலிருந்து இந்து தேச சரித்திரம் நெ. நடராசனால் எழுதப்பட்டது; அலாவுதீன் ஒரு பலம் பொருந்திய அரசர், நல்ல திறமையுள்ளவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளார்.

S. கிருஷ்ண அய்யங்கார் எழுதிய நமது தேச சரித்திரம் History of Our Country, நூலின் பக்கம் 87ல் அலாவுதீன் ஆட்சியில் பல கலாசாலைகள் ஏற்படுத்தப்பட விவரம் சொல்லப்பட்டுள்ளது. சர்க்கார் என்ற வரலாற்றாசிரியரின் துணைவியார் ஹேமலதா தேவா வங்காளியில் எழுதி ஆங்கிலத்தில் எம்.எஸ். நைட் மொழி பெயர்த்த நூல் இந்திய வரலாறு. இதில் பக்கம் 83ல் சித்தூரை அலாவுதீன் கில்ஜி வெற்றி பெற்றதைக் குறிப்பிட்டு விட்டு, பத்மினி தீக்குளித்த கதையை சந்தேகித்து, உண்மையல்ல என்று உரைக்கிறார் ஆசிரியர்.

அந்த நூலில் பக்கம் 61ல் அலாவுதீன் கில்ஜியை சிறந்த அறிவாளி என்றும் போற்றியுள்ளார்.

இந்திய வரலாற்றுச் சுருக்கம் என்னும் நூலினை W.H. மோர்லெண்டும், A.C. சாட்டர்ஜியும் ஆங்கிலத்தில் தந்தனர். அதனை 1951இல் எம்.ஆர். பெருமாள் முதலியார் மொழிபெயர்க்க வி.ஆர்.ராமச்சந்திர தீட்சிதர் சரிபார்க்க சென்னைப் பல்கலைக்கழக வெளியீடாக வெளிவந்தது. அந்த நூலின் பக்கம் 184இல் குறிப்பிடும் ஒரு விஷயத்தை முதலில் பதிவு செய்கிறோம். "இந்தியாவின் மீது படையெடுத்து வந்த துருக்கியர்கள் சில சமயங்களில் மிகக் கொடூரமாக நடந்தார்கள் என்பது உண்மையெனினும், அவர்கள் நாகரிகமற்ற காட்டுமிராண்டிகள் என்று நினைத்துவிடக் கூடாது. அவர்கள் இஸ்லாம் மதம் மாத்திரமின்றி நாகரிகமடைந்த பாரசீகத்தின் வழியாக வந்த முகமதிய (முஸ்லிம்) பண்பாட்டையும் பின்பற்றினார்கள். அதனால் அவர்கள் இந்தியாவுக்கு வரும்போதே நல்ல நாகரிகமுடையவர்களாக இருந்தார்கள். அரசர்கள்

அலங்காரமாக அரண்மனைகளில் வசித்தார்கள்.

அவர்களுடைய சபைகளில் ஒழுங்கும் கட்டுப்பாடும் இருந்தன. ஆட்சிமுறை நல்ல அமைப்பைப் பெற்றிருந்தது. அரசர்கள் நல்ல பண்பாடு உடையவர்கள். அவர்கள் கலைக்கும் கல்விக்கும் ஆதரவளிப்பவர்களாகவும் அழகிய கட்டிடங்களைக் கட்டுவதில் ஆர்வமுள்ளவர்களாகவும் இருந்தார்கள். துருக்கியர்கள் இந்தியாவிற்கு வருவதற்கு முன்னரே காகிதத்தின் உபயோகத்தை அறிந்திருந்தார்கள். அவர்கள் அரசியல் நிகழ்ச்சிகளை எழுதி வைக்கும் பழக்கம் உடையவர்களாக இருந்தார்கள். ஆகவே அவர்கள் இந்தியாவிற்கு வந்த பிறகும் அந்த முறையை அனுசரித்தார்கள். ஆதலால் அவர்கள் வருகைக்குப் பிறகு இந்திய வரலாற்று நிகழ்ச்சிகளின் காலத்தை வரையறுத்துக் கூறுவது எளிதாயிற்று. இது மிகவும் குறிப்பிடத்தக்க விஷயம் என்பதை வரலாற்று மாணவர்கள் ஒத்துக் கொள்வார்கள்''

இதனைத் தொடர்ந்து அலாவுதீன் கில்ஜியைப் பற்றி விரிவாகச் சொல்கிறார். பக்கம் 224இல் அலாவுதீன் கில்ஜியே தட்சிணத்தின் மீது முதல் முதலாகப் படையெடுத்த முகமதியர் (முஸ்லிம்) என்று கூறுகிறார். ஆனால் 'சித்தூர் படையெடுப்பு பற்றியோ பத்மினி பற்றியோ நூலில் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

''தேவகிரியிலிருந்து அலாவுதீன் கொண்டு போன பொருட்கள், மகார, துவார சமுத்திரத்திலிருந்து மாலிக் காபூர் கொண்டு சென்ற பொருட்கள் இதில் மிகுதியான தங்கமும் ஆபரணங்களும் இருந்தன. அதனால் தென்னிந்தியாவின் நிலை சீர்கெட்டுப் போயிற்று என்று நினைத்தால் அது தவறாகும். ஏனெனில் முகமதியர்கள் எடுத்துக் கொண்டு போன பொருட்கள் எல்லாம் கோயில்களிலும், அரசாங்க கஜானாக்களிலும் சேமித்து வைக்கப்பட்டவை. அவற்றால் பொது மக்களுக்கு எவ்விதப் பயனுமில்லை.

கோயிலில் இருந்த பொருட்கள் பக்தர்களால் காணிக்கையாகச் செலுத்தப்பட்டவை. கஜானாக்களிலிருந்த பொருள்களை அரசர்கள் சாதாரணமாகப் பொதுமக்களின் நன்மைக்காகச் செலவு செய்யவில்லை என்பதைக் காட்டச் சான்றுகள் இருக்கின்றன.

ஒவ்வொரு அரசனும் தன் முன்னோர்கள் தேடிவைத்த செல்வத்தை செலவழிக்காமற் காப்பாற்றி வைப்பதோடு தானும் பொருள் சேர்த்து வைக்க வேண்டும் என்பது அந்தக் காலத்து வழக்கம். ஆகவே அரசாங்க கஜானாக்களிலிருந்த பொருள்களைத் துருக்கியர் கொள்ளை அடித்ததால் பொதுமக்களுக்கு அதிக நஷ்டம் ஒன்றும் ஏற்பட்டிருக்க முடியாது. கோயில் சொத்து கொள்ளையடிக்கப்பட்டதால் கஷ்ட காலங்களில் அந்தக் கோயிலின் உதவியை பெற்று வந்த சுற்றுப் புற கிராமங்களில் இருந்த மக்களுக்கு ஓரளவு நஷ்டம் ஏற்பட்டிருக்கும். ஆனால் கோயிலுக்கு மானியமாக விடப்பட்ட நிலங்கள் இருந்ததால், அவற்றின் மூலம் மக்கள் உதவி பெற முடியும். தென்னிந்திய மக்கள் தங்கள் பழைய அரசர்களின் ஆட்சியிலே இருந்தார்கள். ஆனால் தென்னிந்தியாவில் இருந்த நான்கு முக்கிய இராஜ்யங்களில் இரண்டின் அரசர்கள் ஆண்டு தோறும் டில்லிக்கு கப்பம் கட்ட வேண்டியதாயிற்று''

மேற்குறிப்பிட்ட நூலின் பக்கம் 225 மற்றும் 226இல் இது பதிவு செய்யப்பட்டுள்ளது.

எனது பிரியத்திற்குரிய அண்ணன் ஹாஜி டாக்டர் எம். அஹ்மது கான் 1986இல் திருநெல்வேலியிலிருந்து 18 பக்கங்களில் வெளியிட்ட நூல் மார்வாரிப் பெண்களும் மொகலாய மன்னர்களும். அதில் முதல் பக்கத்திலேயிருந்து அலாவுதீன் வரலாற்றுக் கதையைத் தொடங்குவார். பிறகு கற்பனையாகச் சொல்லப்படும் பத்மினி கண்ணாடியில் அவளைக் காட்டிட அவன் கணவன் சம்மதித்தல் இதையெல்லாம் சொல்லிக் கொண்டே வந்து இறுதியில் தன் மனைவியைக் காண வந்த காமுகனை வெட்டிக் கொலை செய்திருக்க வேண்டும் என்பார்.

அதற்குப் பதிலாக ஒரு பேடியைப் போலத் தன்னுடைய மனைவியின் அந்தப் புரத்திற்கு அழைத்துச் சென்று, சுல்தான் தன் மனைவியின் அழகைக் கண்டு ரசித்துச் சுவைப்பதைக் கண்டு ரசிப்பவன் ராஜபுத்திர வம்சத்தில் பிறந்தவனாக இருக்க முடியுமா? என்பார்.

(மாலிக் முகம்மது ஜயாஜி 1540இல் எழுதியதை சொல்லிவிட்டு

பக்கம் 8 இல் அவர் கேட்பார். பத்தினிப் பெண் பத்மினியின் கணவன் யார்?

1. நான் (டாக்டர் அஹமது கான்) படிக்கும் காலத்தில் படித்த வரலாற்றுப் புத்தகத்தில் ராணி பத்மினியின் கணவர் பெயர் ராஜா பிரதாப் சிங்.

2. 1984இல் வெளியான ரத்தினபாலா மலரில் பத்மினியின் கணவன் பெயர் ராணா பீம் சிங்.

3. சென்னைப் பல்கலைக் கழகம் வெளியிட்ட பி.ஏ. வரலாற்றுப் பாடப்புத்தகத்தில் ராணி பத்மினியின் கணவர் பெயர் இரதன் சிங்.

பத்தினிப் பெண் ராணி பத்மினியின் உண்மையான கணவன் யார்?

ஒரு மானங்கெட்ட மன்னனின் கதையை துவேஷத்தின் பெயரால் பரப்பிக் கொண்டிருக்கும் மேதைகள் சற்று சிந்தித்துரைக்க வேண்டும். இந்தக் கதை நடந்ததுதானா? இட்டுக்கட்டப் பட்டதா? இத்துடன் இதனை நிறுத்திக் கொள்வோம் என்று டாக்டர் எம். அஹமதுகான் தனது நூலில் சொல்வார்.

பத்மாவதி கதை ஒரு கற்பனை

26.01.2018 தி இந்து தமிழ் நாளிதழில் 'பத்மாவத் வரலாற்றின் மீது படரும் வெளிச்சம்' என்ற கட்டுரையை 2018ஆம் ஆண்டிற்கான சாகித்திய அகாதெமி விருதுபெற்ற பிரியத்திற்குரிய எஸ். ராமகிருஷ்ணன் தந்துள்ளார்.

அதில் சொல்வார், 'சித்தோரை கில்ஜி தாக்கி சண்டையிட்டது வரலாற்று உண்மை. பத்மாவதி கதையும் அவளை அடைய வேண்டும் என கில்ஜி படையெடுத்ததும் கற்பனை. கில்ஜி இறந்து 200 ஆண்டுகளுக்குப் பிறகு எழுதப்பட்ட காவியத்தில் இருந்து உருவான கற்பனை.

1906இல் கிஷோர் பிரசாத் வங்க மொழியில் இதை நாடகமாக்கியுள்ளார். 1930இல் தேவகிபோஸ் இதனை மவுனப்படமாக எடுத்துள்ளார். 1963ல் சித்தூர் ராணி பத்மினி தமிழ்ப்படம் வெளியானது. 1964ல் ஹிந்தியில் மகாராணி பத்மினி வெளி வந்தது.. இதுதவிர ஷியாம் பெனகல் இயக்கிய டி.வி., தொடர் கதை, நாவல் என ராணி பத்மாவதி கதை வெளியாகியுள்ளது. 100 ஆண்டுகளாகப் பார்த்தும் கேட்டும் வந்த ராணி பத்மாவதி கதைக்கு இன்று ஏன் இத்தனை எதிர்ப்பு? போராட்டங்கள்? மதவாத சக்திகளின் ஆதாயத்துக்கு கலையும் இலக்கியமும் பண்பாடும் குறிவைக்கப்படுவது கண்டிக்கத்தக்கது.

வரலாற்றை மையமாகக் கொண்ட கற்பனை என்றாலும் நிறைய இடங்களில் மீறல்களும், தவறான புரிதல்களும், சித்தரிப்புகளும் கொண்டிருப்பது இப்படத்தின் பலவீனம்'.

முஸ்லிம் துவேஷம் ஒன்றையே இலக்காகக் கொண்ட கற்பனைக் குப்பையான இத்திரைப்படத்தைக் கண்டு வெகுண்டு எழ வேண்டியவர்கள் இஸ்லாமியர்களே. திப்பு சுல்தானைப் பற்றி இட்டுக்கட்டப்பட்ட பொய்களைச் சொன்னார்கள். இப்போது அலாவுதீன் கில்ஜி பற்றி சொல்கிறார்கள். இதனால் இஸ்லாம் மார்க்கத்திற்கு எந்த இழப்பும் இல்லை. மாறாக இந்திய சரித்திரத்திற்குத்தான் மாசு.

அலாவுதீன் இராணுவத்தைச் சிறப்பாகக் கவனித்து வந்தான்.

அவன் அதை மிக்க பலம் பொருந்தியதாகச் செய்து குஜராத்தையும் தெற்கில் பெரும் பகுதியையும் ஜெயித்தான். (ஜவஹர்லால் நேரு, உலக சரித்திரம், மொழி பெயர்ப்பு ஓ.வி. அளகேசன், நவயுகப் பிரசுராலயம் இரண்டாம் பதிப்பு 1953, முதற்பாகம், பக்கம் 548)

அலாவுதீன் கில்ஜி மாத்திரமல்ல, அக்பர் மாத்திரமல்ல, முகலாயர் பேரரசர்கள் பலர் இந்து பெண்களை திருமணம் செய்துள்ளனர். ஏன் ஆலம் கீர் ஔரங்கஜேப் கூட உதயபூர் மன்னரின் மகள் ராணி ரூபவதியை திருமணம் செய்து கொண்டார். அவர்களுக்குப் பிறந்தது இளவரசர் காம்பக்ஷ். (பத்ஹுல் இஸ்லாம், நவம்பர் 1957, முஸ்லிம் மன்னரின் ஹிந்து ராணிகள் டி.எப்.ஆர். மஆலி சாஹிப் பாகவி, பக்கம் 11)

முஸ்லிம் அரசர்கள் இந்து ராணிகளை, இந்துப் பெண்களை திருமணம் செய்து கொண்டது வரலாற்று உண்மை. முஸ்லிம் மன்னர்களின் கீழ் பணியாற்றிய எத்தனை எத்தனை இந்துத் தளபதிகள்! இவற்றையெல்லாம் மறைக்க முடியுமா? தீய சக்திகளின் துவேஷத்தை வளர்த்திடத்தான் முடியுமா?

கி.பி. 1303இல் சுல்தான் அலாவுதீன் சித்தூர் கோட்டையைக் கைப்பற்றியபோது, பொது ஜனங்கள் உழவர்கள் கொல்லப்படவில்லை. ஏனெனில் அவர்கள் அப்போது போரில் ஈடுபடவில்லை (பேராசிரியர் A அஷ்ரப் அலி, இந்திய வரலாறு திருத்தப்பட வேண்டும் ஏன்? சென்னை, 1992, பக்கம் 32)

அலாவுதீன் கில்ஜி (1297 - 1320) இந்து முஸ்லிம் வேறுபாடின்றி அரசாட்சி செய்தார். ஆளும் வர்க்கத்தால் அநீதி செய்தோர்களை இந்துவானாலும் சரி, முஸ்லிமானாலும் சரி, அவர்களுக்கு ஒரே விதமான தண்டனை வழங்கினார். அதனால் நாட்டிற்கு அதிக அவசியமான சாந்தி ஏற்பட்டது. அலாவுதீன் கில்ஜி ஆட்சியில் பதுக்கல் செய்த வியாபாரிகள் சமூகப் பிரஷ்டம் செய்யப்பட்டார்கள். நேர்மையான லாபமற்ற தொழிலும், வியாபாரமும் நடைபெற வேண்டுமென அரசர் ஆசைப்பட்டார். ஆனால் அக்கால மக்களே அதனை உணர்ந்தாரில்லை என்பார் டி.என். ராமச்சந்திரன் (நமது சரித்திர பாரம்பர்யம்)

அலாவுதீன் கில்ஜி ஜாலோன், ஜெய் சாலமர், இரண்தம்பார்,

சித்தூர், சிவானா பண்டி, மாண்டோர் தோங்க் பகுதிகளை வென்றார்.

கடுமையான முயற்சிக்குப் பின்னரே ஒவ்வொரு கோட்டையையும் கைப்பற்றினார். இழந்த பொன்னாட்டை மீட்க இராஜபுத்திரர்கள் அடிக்கடி தொல்லை கொடுத்து வந்தனர். இரஜபுதனத்தில் அலாவுதீன் ஆட்சி முழுமையாக ஏற்கப்படவில்லை என்பதனை பிந்தைய வரலாறு காட்டுகிறது.

ஏன் இரஜபுதனத்தின் மீது போர் தொடுத்தார்? மலைகளும், பாலைவனமும் நிறைந்த இரஜபுதனத்தில் பெருஞ் செல்வத்தை அடைய இயலும் என எண்ணவில்லை. டில்லியின் ஆதிக்கத்திற்கு எதிர்ப்பு ஏற்பட்ட போது அலாவுதீன் கில்ஜி போர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தார். சாலைகளில் வணிகர்களும் ஏனைய மக்களும் அச்சமின்றி செல்லத்தக்க நடவடிக்கைகள் பலவற்றை மேற்கொண்டார். தனது படை வலிமையைப் பறைசாற்றும் நோக்கத்துடன் இரஜபுதனத்தின் மீது அலாவுதீன் கில்ஜி படையெடுத்தார் என்பதே சரித்திர உண்மையாகும்.

இராஜபுத்திரர்களின் வீழ்ச்சி

இராஜபுத்திரர்களை வென்று இராஜஸ்தானை நிரந்தரமாக டில்லியுடன் இணைத்து ஆட்சி செய்யவே அலாவுதீன் கில்ஜி போர் ஏற்பாடுகளைச் செய்தார் என்பதை நாம் திடமாகக் கூற இயலாது.

இராஜஸ்தானிலிருந்த ஒரு சில பகுதிகளை மட்டுமே அவர் தில்லியுடன் இணைக்க முயற்சித்தார். அம்முயற்சியும் தோல்வியுறவே அந்த எண்ணத்தை முற்றிலுமாக அலாவுதீன் கில்ஜி கைவிட்டார். அவர் காலத்தில் இராஜஸ்தான் முக்கியமான இடத்தைப் பெற்றிராமையே அலாவுதீன் கில்ஜியின் புறக்கணிப்பிற்கு ஒரு காரணம் ஆகும். இராஜஸ்தானத்து கொள்கையால் பெரும் பொருள் நஷ்டம்; போர் ஏற்பாடுகளுக்குப் பெரும் பணச் செலவு; ஆனால் அங்கிருந்து பெற்ற பொருட்களோ மிகக் குறைவு. ஆனால் அந்தப் படையெடுப்பு அவரது பெருமையை மிகவும் உயர்த்திவிட்டது. அவரது முழுப் பலத்தையும் வெளிப்படுத்தியது. வட இந்தியா முழுவதையும் டில்லியின் கீழ் ஒன்றுபடுத்தும் முயற்சிக்கு இது ஊக்கமளித்தது.

இரஜபுத்திரர்கள் தோல்விக்கு பல காரணங்கள்; அவர்களுக்குள் ஒற்றுமை இல்லை; அலாவுதீன் கில்ஜியை எதிர்த்துப் போராடி வெற்றி கொள்ளும் அளவிற்கு தனித்துவம் வாய்ந்த இரஜபுத்திர அரசர்கள் எவரும் அவர் காலத்தில் இல்லை.

இரண்டு அல்லது மூன்று இரஜபுத்திர அரசர்கள் ஒன்று சேர்ந்திருப்பார்களானால் அலாவுதீன் கில்ஜியை வெல்லுவதற்குரிய வலிமையைப் பெற்றிருப்பார்கள் (K.S. லால், முற்கூறிய நூல், பக்கம் 120)

ஒவ்வொரு ராஜபுத்திர அரசரும் மற்றவர்களுக்கு ஏற்பட்ட இன்னல்கள்களைப் பற்றி கவலை கொள்ளாது இருந்தனர். அலாவுதீன் கில்ஜி சிவானாவை தாக்கிய போது அதற்கு 50 மைல் தொலைவில் இருந்த ஜாலோர் அரசர் கவலையின்றி தம் கோட்டைக்குள் இருந்தார்.

விளைவு என்னவாயிற்று? "சிவானாவைக் கைப்பற்றிய சிறிது காலத்திற்குப் பின்னர் ஜாலோர் தாக்கப்பட்டது; அலாவுதீன் கில்ஜியால் கைப்பற்றப்பட்டது.

இரஜபுத்திரர்கள் வீராவேசத்துடன் போர் புரிந்தார்கள் என்பதில் ஐயமில்லை. போரில் வெற்றிபெற வீரத்துடன் தந்திரமும் வேண்டும். அலாவுதீன் கில்ஜியின் படைகள் வீரத்துடன் தந்திரத்தையும் கையாண்டனர். குறிப்பிட்ட குறிக்கோளில் வெற்றிபெற எல்லா வழிகளையும் பின்பற்றினர்.

இரஜபுத்திரர்கள் அரசியல் தந்திரம் மூலம் வெற்றி பெற விருப்பமில்லாமல், இன்பமாகக் கருதினார்கள்.

பேராசிரியர் K.S. லால் கூறியதுபோல், இரஜபுத்திரர்களுக்கு இறக்கத்தான் தெரியுமே தவிர வாழத் தெரியாது. ஆனால் துருக்கியர்கள் உலகில் வாழ்வது எப்படி என்பதை நன்கு அறிந்திருந்தனர். இது அவர்களது வெற்றிக்கு மற்றொரு காரணமாகும். (Kishori Saran Lal, History of the Khaljis AD 1290 - 320, Asia Publishing House, Calcutta, 1967, Page 121)

இரஜபுத்திரர்கள் பழைய போர் முறையைக் கையாண்டனர். துருக்கியர்கள் மங்கோலியர்களிடம் அடிக்கடி போர் செய்து பழக்கப்பட்டதால், மன்ஜ்னீக் போன்ற போர் இயந்திரங்களைப் பயன்படுத்தினர். அலாவுதீன் கில்ஜி இரஜபுத்திர நாடுகளைத் தாக்கிய போது இரஜபுத்திர அரசர்கள் பெரும்பாலும் கோட்டைக்குள் புகுந்து கொண்டனர். அவர்களது கோட்டைகள் மலை உச்சியில் இருப்பதால், திடீர் தாக்குதல் ஏற்படுகிறபோது அரச குடும்பத்து பெண்கள், குழந்தைகள், ஆடு மாடுகள் ஆகியவற்றால் பாதுகாப்பாக இருக்க முடியும். பகைவர்கள் எதிர் கொண்டு கோட்டையை எளிதாக அடைய முடியாது என்பது உண்மை.

ஆனால் கோட்டைக்கு உள்ளே இருப்பவர்களுக்குத் தேவையான பொருட்களை சுற்றுப் புறத்திலிருந்து கோட்டைக்குள் எடுத்துச் செல்ல முடியாதவாறு பகைவர்களால் தடுத்துக் கொள்ள முடியும். முற்றுகை பல நாட்கள் அல்லது மாதங்கள் நீடித்த போது கோட்டைக்குள் இருந்தவர்கள் பட்டினியால் வாடினர். கோட்டை

வீழ்வதற்கு இது காரணமாக அமைந்தது.

கோட்டைக்குள் போர்க் காலங்களில் அனைவரும் ஒன்றாகக் கூடும்போது, மக்கள் தொகை பெருக்கமடைந்தது. போதிய சுகாதார வசதிகள் இல்லாது போனது. மக்களது துன்பம் அதிகமானது.

இரஜபுத்திரர்களின் துன்பத்தை அவர்களது வைதீகத் தன்மையும் அதிகரிக்கச் செய்தது. (சான்றாக குடிநீர் வழங்கும் குளத்தில் ஒரு பசுவின் தலையை வீசிவிட்டால் அந்தக் குடிநீரை இரஜபுத்திரர்கள் அருந்தமாட்டார்கள். இஸ்லாமியர்கள் பன்றிக் கறியை அல்லது பன்றியை கண்டால் அதனைத் தொடாததுபோல்)

அலாவுதீனின் இறுதி நாட்கள் துயரம் மிகுந்ததாக இருந்தது. மாலிக் கபூர் வெற்றி மேல் வெற்றியை அடைந்து வர மறுபுறம் அலாவுதீனுடைய ஆட்சி வலிமையை இழந்து கொண்டிருந்தது. அலாவுதீன் மகன் ஷம்ஸ்உல் ஹக் என்ற கிஸர்கானுக்கும் தேவால் ராணிக்கும் திருமணம் 1312இல் நடைபெற்றது. தனது காதல் கதையை எழுதச் சொல்லும்படி அமீர் குஸ்ரூவை அழைத்து கிஸர்கான் கூறியதால் தேவால் இராணி என்ற காவியம் உருவானது. (Amir Khusru, Deval Rani, Aligerh, 1917, பெர்சிய நூல்)

கடைசி மூன்று ஆண்டுகாலம் அலாவுதீன் கில்ஜியின் உடல் நலம் மேலும் குன்றியது. சுல்தான் பேகம் சக்தி இழந்தார். ஆறுவயது மகனான ஷிஹாப் புத்தீன் உமர் சுல்தானாக ஏற்றுக் கொள்ளப்பட்டார். 1316 ஜனவரி 4இல் அலாவுதீன் கில்ஜி மறைந்தார். 1316 ஜனவரி 6 இல் மறைந்ததாக கே.எஸ். லால் கூறுகிறார்.

அலாவுதீன் கில்ஜி அக்காலத்தில் தோன்றியிருந்த சாதாரண தீயப்பழக்கங்களுக்கு இடமளிக்கவில்லை என்றே கூற வேண்டும். பெண் மோகம் அவரிடம் கிடையாது. அவருக்குப் பல மனைவிகள் இருந்த போதிலும் பெண்மைக்கு அடங்கி அவர் நடக்கவில்லை. ஒழுக்கங்கெட்டு அலையவுமில்லை.

அவரது ஆட்சியின் தொடக்கத்தில் மது அருந்தி வந்த போதிலும் மது அருந்துவதனால் ஏற்படும் தீமைகளை அறிந்தவுடன்

அப்பழக்கத்தை அறவே நிறுத்திவிட்டார். பிறர் குடிப்பதையும் அவர் தடை செய்தார். அரசியல் காரணங்களுக்காக இந்துக்கள் கடுமையாக நடத்தப்பட்டனரேயன்றி சமயக் காரணத்திற்காக அன்று. (K.S. லால் முற்கூறிய ஆங்கில நூல் பக்கம் 273)

ஓரினச் சேர்க்கை என்ற தகாப்புணர்ச்சியில் ஈடுபட்டிருந்த இஸ்மாயிலி போராக்களை இருதுண்டுகளாக வெட்டிக் கூறு போட கட்டளையிட்டவர் அலாவுதீன் கில்ஜி. கணவர் அல்லாத அன்னியருடன் உடலுறவு கொண்ட மனைவிமார்களுக்கு (பெண்களுக்கு) மரண தண்டனை விதித்தார். அக்குற்றத்திற்கு (விபச்சாரத்திற்கு) காரணமான ஆண்களின் ஆண்மையை அழித்திடச் செய்தார். (K.S. லால், முற்கூறிய ஆங்கில நூல், பக்கம் 277)

விபச்சாரம் தடை செய்யப்பட்டது. தகுதி வாய்ந்த பெண்கள் கட்டாயம் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற நடைமுறை அமுல்படுத்தப்பட்டது.

மந்திரவாதிகள் கல்லெறிந்து கொல்லப்பட்டனர். மந்திரவாதிகள் தங்களுக்கு மந்திர ஜாலம் தெரியும் என்பதை காட்டிக் கொள்ளவே பயந்தனர். மூட நம்பிக்கையும் அறியாமையும் நிறைந்த காலத்தில் மந்திர ஜாலக்காரார்களிடமிருந்து மக்களை காப்பாற்றியதை அலாவுதீன் கில்ஜியின் அருஞ்செயலாகவே கருத வேண்டும்.

இருபது ஆண்டுகள் ஆட்சி செய்த அலாவுதீன் கில்ஜி தமது பிள்ளைகளுக்கு போதிய பயிற்சி அளிக்காதது குறைதான். அவரது திறமை, அவரது பிள்ளைகளுக்குப் பயன்பெறாது போயிற்று. மாலிக்காபூர் கை ஓங்கவும் வழி செய்தது.

அலாவுதீன் சமூக சீர்திருத்தவாதி என்பதில் எவரும் மாறுபட்டுச் சொல்ல முடியாது. அகமதாபாத்தில் இருந்து சமஸ்கிருதத்தில் வெளிவந்த, நாபி நந்தன் ஜீனோதாரபிரபந்தா என்ற நூலில் காக்காசூரி கூறுகிறார்:

''இந்தியாவிற்கு ஒப்பான வலிமையைப் பெற்றிருந்த அலாவுதீன் கடல் போல் உலகத்தை எல்லா பக்கங்களிலும் சூழ்ந்து கொண்டார். அவர் கைப்பற்றிய வலிமை பொருந்திய

கோட்டைகளை யாரால் எண்ண முடியும்?'' (Indian History Congress proceedings for 1954, page 240-243)

தேவகிரி படையெடுப்பு, மங்கோலியரை வென்றது, சித்தூர் இரண்தம்பார் படையெடுப்பு இவைகளில் பெற்ற பெரும் வெற்றிகள் அலாவுதீன் கில்ஜியின் தனித்துவம் மிக்க திறமையினால் கிடைத்தவையாகும்.

சுக வாழ்க்கையை மேற்கொண்டிருந்த பிரபுக்களுக்கு அலாவுதீன் கில்ஜியின் சட்டங்கள் வேப்பங்காயாகக் கசந்தன.

இந்தியாவில் துருக்கியப் பேரரசை ஏற்படுத்தும் முயற்சியை மேற்கொண்டு அதில் பெரும் வெற்றி கண்ட முதல் அரசர் அலாவுதீன் கில்ஜி என்று கே.எஸ். லால் போற்றுவார்.

தனது வெற்றிகளின் மூலம் வட இந்தியாவின் தன்னிகரற்றத் தலைவராகத் திகழ்ந்தவர் அலாவுதீன் கில்ஜி. அலாவுதீன் கில்ஜியின் சாதனைகள் குறைகளைத் தாண்டியவை.

அலாவுதீன் கில்ஜி மக்கள் ஆதரவைப் பெற்ற மாமன்னர், சிறந்த சுல்தான் என்பதில் ஐயமில்லை. ஆனால் சித்தூர் படையெடுப்பின் போது (கி.பி. 1303) சித்தூர் மன்னன் ரதன்சிங் மற்றும் அலாவுதீனுக்கு இடையேயான செய்திகளைப் பற்றிய சர்ச்சை முடிவற்றது.

டாக்டர் க.வெங்கடேசன் கூற்றை நினைவுப்படுத்திப் பார்க்கிறோம். (இந்திய வரலாறு, சிந்து முதல் பிளாசி வரை கி.மு. 3000 முதல் கி.பி. 1757 வரை, இராசபாளையம் 2017, பக்கம் 472)

''இந்திய முஸ்லிம் பேரரசு, இந்திய முஸ்லிம் நிருவாகம் ஆகியவற்றின் வரலாறு அலாவுதீன் கில்ஜி காலத்தில் தான் துவங்கிற்று என்று கூறுவது முற்றிலும் பொருந்தும். அதுவே அவர் டில்லி சுல்தானியத்திற்கு மட்டுமின்றி இந்திய முஸ்லிம் ஆட்சிக்கு ஆற்றிய பெருந்தொண்டாகும். அதிசய அரசர் அலாவுதீன் கில்ஜியின் புகழை அழிக்க நினைப்பவர்கள் ஏமாந்து போவார்கள் என்பது மட்டும் நிச்சயம்.''



கில்ஜி வம்ஸம் ஆட்சி செய்த பகுதி

12 படையெடுப்புகளை எதிர்கொண்டு, மங்கோலியர்களின் கொட்டத்தை அடக்கியது அலாவுதீன் கில்ஜியின் அருஞ் செயல்களில் ஒன்று. அவர் காலத்தில் சிந்து நதி வரை டில்லிப் பேரரசின் எல்லை சென்றது. காபூல் நகரையும் தாண்டி, மங்கோலியர்கள் தாக்குதல் நடத்த வாய்ப்புள்ள பகுதிகளை கட்டுக்குள் கொண்டு வந்து, மங்கோலியர்களின் ஆபத்துக்களிலிருந்து இந்தியாவை மீட்ட பெருமை அலாவுதீன் கில்ஜியையே சாரும்.

அலாவுதீன் கில்ஜியின் போர்த்திறன், எத்தகைய இன்னல் வரினும் மனம் தளராத நிலை, அஞ்சா நெஞ்சம், மேற்கொண்ட காரியத்தை விடாப்பிடியாக இருந்து சாதிக்கும் ஆற்றல், இத்தோடு அவரது திறமைமிக்க படைத் தளபதிகள் அவரின் வெற்றிக்கு உறுதுணையாய் இருந்தனர்.

அண்மைக் காலமாக அலாவுதீன் கில்ஜி மீது எத்தனை அபாண்டங்கள்! எவ்வளவு ஆர்ப்பாட்டங்கள்! ‘சித்தோரை கில்ஜி தாக்கி சண்டையிட்டது வரலாற்று உண்மை. பத்மாவதி கதையும் அவளை அடைய வேண்டும் என கில்ஜி படையெடுத்ததும் கற்பனை. கில்ஜி இறந்து 200 ஆண்டுகளுக்குப் பிறகு எழுதப்பட்ட காவியத்தில் இருந்து உருவான கற்பனை தான் பத்மாவதி கதை. அவர் மீது சுமத்தப்படும் பழிகளைத் துடைத்தெடுத்து உண்மையான வரலாற்றை ஆதாரங்களுடன் விரிவாகவே தருகிறார் **வரலாற்றாய்வாளர் செ. திவான்.**